திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# ஸப்தகிரி

சமய மாத இதழ்

பிப்ரவரி 2020, விலை ரூ.5/-

**ஸ்ரீநிவாசமங்காபுரம்**
**ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி**
**வருடாந்திர பிரம்மோத்ஸவம்**

14-02-2020 முதல்
22-02-2020 வரை



# ஸ்ரீநிவாசமங்காபுரம்
# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி
# வருடாந்திர பிரம்மோத்ஸவம்

**14-02-2020 முதல்**
**22-02-2020 வரை**





**14-02-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : பெரிய சேஷ வாகனம்

**15-02-2020**
சனிக்கிழமை
பகல் : சிறிய சேஷ வாகனம்
இரவு : ஹம்ஸ வாகனம்

**16-02-2020**
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சிம்ம வாகனம்
இரவு : முத்துப்பந்தல் வாகனம்

**17-02-2020**
திங்கட்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : சர்வபூபால வாகனம்

**18-02-2020**
செவ்வாய்க்கிழமை
பகல் : பல்லக்கில்
மோகினி அவதாரம்
இரவு : கருட வாகனம்

**19-02-2020**
புதன் கிழமை
பகல் : ஹனுமத்வாகனம்
மாலை : வசந்தோத்ஸவம்
இரவு : யானை வாகனம்

**20-02-2020**
வியாழக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

**21-02-2020**
வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : குதிரை வாகனம்


**22-02-2020**
சனிக்கிழமை
பகல் : சக்ரஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்



அஸ்மாகம் து விசிஷ்டா யே
தாந்நிபோ$_3$த$_4$ த்$_3$விஜோத்தம |
நாயகா மம ஸைந்யஸ்ய
ஸம்ஜ்ஞார்த$_2$ம் தாந் ப்$_3$ரவீமி தே ||

அந்தணர்களிற்சிறந்தவரே! நமது அணியிலும் கூட பிரதான யுத்த வீரர்கள் யார் யார் இருக்கிறார்களோ, அவர்களைத் தெரிந்து கொள்ளுங்கள். என்னுடைய படையின் தலைவர்களான அவர்களைப் பற்றி நீங்கள் தெரிந்து கொள்வதற்காகச் சொல்கிறேன்.

*– ஸ்ரீமத் பகவத் கீதை 1–7*



தருச்சந்தப்பொழில்தழுவு தாரணியின்துயர்தீர
திருச்சந்தவிருத்தம்செய் திருமழிசைப்பரன்வருமூர்
கருச்சந்தும்காரகிலும் கமழ்கோங்கும்மணநாறும்
திருச்சந்தத்துடன்மருவு திருமழிசைவளம்பதியே.

கற்பக மரங்களைப் போன்ற பயனையும் சந்தன மணத்தையும் தரும் சோலைகளை உடைய இந்தப் பூமியில் வாழும் மக்களின் துயர் தீர திருச்சந்த விருத்தம் என்ற பிரபந்தத்தைப் பாடி அருளிய திருமழிசைபிரான் அவதரித்த ஊர் திருமழிசை. அவர் பாடல்களில் இருக்கும் பல்வேறு நலன்களைப் போலவே, அவர் அவதரித்த தலமும் பெருமைமிக்க சந்தன மரங்களும், கருமையான அகில் கட்டைகளும், நறுமணம் மிக்க மரங்களும் நிறைந்து, திருமகள் விரும்பி உறையும் திருத்தலமாகத் திகழ்கிறது.

*- திருக்கச்சி நம்பிகள் அருளிய தனியன்*

# ஸ்வஸ்தி ஸ்ரீ விகாரி வருஷம் தை/மாசி மாதம் உத்தராயணம் ஹேமந்த்/சிசிரருது சகவருஷம் 1941 கலியுகாதி 5120 பிப்ரவரி 2020

| ஆங் | தமிழ் | கிழமை | திதி | நட்ச. | விசேஷம் |
|---|---|---|---|---|---|
| 1 | 18 | சனி | சப் | அஸ் | ரதஸப்தமி, வைவஸ்வதமன்வாதி, தேவுனி கடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர். |
| 2 | 19 | ஞாயிறு | அஷ் | பர | மாத துர்காஷ்டமி, பீஷ்மாஷ்டமி, சுக்ரன்-மீனம் இ.2ம.18நி.,திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம் ஆரம்பம். |
| 3 | 20 | திங்கள் | நவ | கார் | கிருத்திகை விரதம், தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம். |
| 4 | 21 | செவ் | தச | ரோகி | உரம் தயாரிக்க., திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் சிறிய சாத்துமுறை, தேவுனிகடபா ஸ்ரீலக்ஷ்மி வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம். |
| 5 | 22 | புதன் | ஏகா | மிரு | ஜய ஏகாதசி, வைத்-சிரா., பீஷ்ம ஏகாதசி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் இராப்பத்து தொடக்கம், வேதபாராயணம் தொடக்கம். |
| 6 | 23 | வியா | துவா | திரு | பீஷ்மத்வாதசி. |
| 7 | 24 | வெள்ளி | திர | புன | பிரதோஷம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி சன்னதியில் ஸ்ரீகாமாக்ஷி தேவிக்கு சந்தனாபிஷேகம். |
| 8 | 25 | சனி | சசி | பூச | தைப்பூசம், பௌர்ணமி, திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி தெப்போத்ஸவம் நிறைவு. |
| 9 | 26 | ஞாயிறு | பௌ | ஆயி | ஆகாமாவை, கடல் சீற்றம், ஸ்ரீராமகிருஷ்ண தீர்த்த முக்கோட்டி. |
| 10 | 27 | திங்கள் | பிர/துவி | மக | மாகபஹூள, க்ஷயதிதி, திருமழிசையாழ்வார் திருநட்சத்திரம், திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி கூப்புசந்திரபேட்டைக்கு எழுந்தருளுதல், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி ஆலயத்தில் பிரணய கலக மஹோத்ஸவம். |
| 11 | 28 | செவ் | திரு | பூர | பூச்சிகொல்லிகள் தயாரிக்க. |
| 12 | 29 | புதன் | சது | உத் | சங்கடஹர சதுர்த்தி,இம்மாதம் கிருஷ்ண பஞ்சமி மாசி முதல் தேதியில் அனுஷ்டிக்கவும். |
| 13 | 1 | வியா | பஞ் | ஹஸ் | விஷ்ணுபதி, சூரியன் கும்பம் - மா.3ம.03நி., ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அங்குரார்ப்பணம். |
| 14 | 2 | வெள்ளி | சஷ் | சித்/சுவா | சஷ்டி விரதம் சுபநாள், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் ஆரம்பம், துவஜாரோஹணம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் பெரிய சாத்துமுறை. |
| 15 | 3 | சனி | சப் | விசா | திஸ்ரோஷ்டகா. |
| 16 | 4 | ஞாயிறு | அஷ் | அனு | காலாஷ்டமி, அஷ்டகா. |
| 17 | 5 | திங்கள் | நவ | கேட் | அன்வாஷ்டகா, புதன். வ.ஆரம்பம், திருப்பதி ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி சன்னதியில் அத்யயனோத்ஸவம் நிறைவு. |
| 18 | 6 | செவ் | தச | மூல | புதன் மே.வ.அஸ்தமனம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி கருடசேவை |
| 19 | 7 | புதன் | ஏகா | பூரா | விஜய ஏகாதசி, திரிதினஸ்ப்ருக்(ருட்). |
| 20 | 8 | வியா | துவா | பூரா | பிரதோஷம், வ்ய-சிரா, புதன் மே.அஸ்தமனம். |
| 21 | 9 | வெள்ளி | திர | உத்ரா | ச்ரவணம், மஹாசிவராத்திரி, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி நந்தி வாகனம், ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருத்தேர். |
| 22 | 10 | சனி | சசி | திவோ | ஆட்டோமொபைல் தொழிலில் ஈடுபட., ஸ்ரீநிவாச மங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், சக்கர ஸ்நானம், துவஜாவரோஹணம், திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி கல்யாணோத்ஸவம். |
| 23 | 11 | ஞாயிறு | அமா | அவி | சர்வ அமாவாசை, திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி பிரம்மோத்ஸவம் அவப்ருதம், திரிசூல ஸ்நானம், துவஜாவரோஹணம், திருக்கச்சி நம்பி உத்ஸவம் ஆரம்பம். |
| 24 | 12 | திங்கள் | பிர | சத | பால்குண சுத்த. |
| 25 | 13 | செவ் | துவி | பூரட் | சந்திர தரிசனம். |
| 26 | 14 | புதன் | திரு | உத்ரட் | சுபநாள், பால் சம்பந்தப்பட்ட தொழில் துவங்க. |
| 27 | 15 | வியா | சது | ரேவ | மாத சதுர்த்தி, விருத்தி திதி, கரிநாள். தனிய நாள். |
| 28 | 16 | வெள்ளி | சது | அஸ் | கரிநாள், சுக்ரன்-மேஷம். |
| 29 | 17 | சனி | பஞ் | பர | சஷ்டி விரதம் கரிநாள். |





*சிறப்பு ஆசிரியர் :*
**திரு. அனில்குமார் சிங்ஹால்,** *ஐ.ஏ.எஸ்.,*
*செயலாட்சித் தலைவர், தி.தி.தே.*
*பிரதான ஆசிரியர் :*
Dr. K.**ராதாரமணா,** எம்.ஏ., எம்.பில்., பி.எச்டி.,
ஆசிரியர் :
Dr. V.G.**சொக்கலிங்கம்,** எம்.ஏ., பி.எச்டி.,
அச்சிடுபவர் :
**திரு.** R.V. **விஜயகுமார்,** பி.ஏ. பி.எட்.,
துணை செயலாட்சித் தலைவர்
(பதிப்பகம் மற்றும் அச்சகம்), தி.தி.தே.,
தேவஸ்தான அச்சகம், திருப்பதி.
டி.டி.பி.
பிரதான ஆசிரியர் அலுவலகம்,
தி.தி.தே. திருப்பதி.
*புகைப்படங்கள் :*
**திரு.** P.N. **சேகர்**
**திரு.** B. **வெங்கடரமணா**

*பிரதிகளுக்கு:*
THE CHIEF EDITOR,
"Sapthagiri", T.T.D., Tirupati-517 507.
0877- 2264543, 2264359
ஆசிரியர் : 2264360

நீங்கள் ஸப்தகிரி இதழை
**www.tirumala.org**யில் பார்த்து,
படித்து மகிழலாம். ஆலோசனைகள்/
கருத்துக்கள்/புகார்களுக்கு
**sapthagiri_helpdesk@tirumala.org**

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூ.5/- |
| வருடச்சந்தா | ரூ.60/- |
| ஆயுள் சந்தா | ரூ.500/- |
| அயல்நாட்டு வருடச்சந்தா | ரூ.850/- |



இதழில் வெளியாகும் கட்டுரைகளுக்கும், கருத்துகளுக்கும் அவ்வவ்வாசிரியப் பெருமக்களே பொறுப்பாவர். -பிரதான ஆசிரியர்



மலர் 50 இதழ் 09


## உள்ளுறை

பக்கம்


**பச்சை தோரணம் : சூரியனை துதிப்போம்** 7
*- திருமதி. ஏ. அருணா, திருப்பதி.*

**மாயமென்ன மாயம்** 12
*- டாக்டர். கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி.*

**திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை** 15
*- கலைமாமணி, முனைவர் இரா.வ. கமலக்கண்ணன், காஞ்சிபுரம்.*

**திவ்விய திருத்தலம்-திருமலை** 18
*- திரு. வி. வேங்கடரமணா, திருப்பதி.*

**அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல் நாமத்தின் மகிமை** *- திரு. எஸ். கோகுலாச்சாரி, புவனகிரி.* 22

**நமது திருக்கோயில் : ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில், ஸ்ரீநிவாச மங்காபுரம்** 24
*- திருமதி. டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி.*

**மஹா சிவராத்திரி** *- இதிஹாசமயம் வி.சீதாராமன், சென்னை.* 31

**சிறார் வாக்கு : நேர்மைக்குப் பரிசு** 36
*- செல்வி. பா. பூஜாஹாசினி, திருவள்ளூர்.*

**ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்-இந்திரனுக்கு ஏற்பட்ட இழிநிலை** 37
*- டாக்டர். சி.கோவிந்தசாமி, புத்தூர்.*

**அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித் திருநாமமும் உரையும்** 39
*- உ.வே. டாக்டர். மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை.*

**108 திவ்யதேச வைபவம் – திருமெய்யம்** 42
*- உருப்பட்டூர் சௌந்தரராஜன், சென்னை.*

**பகவத் கீதை-இளைய சமுதாயம் – தெய்வீக குணமே துன்பத்தை போக்கும்** 45
*- திரு. வ.ஓ. சுரேஷ், சத்திரவாடா.*

**கந்தகோட்டமும் வள்ளலாரும்** 47
*- பனையபுரம் அதியமான், சென்னை.*

**ஆயுர்வேதம் – வெந்தயம்** *- திருமதி. வி. உஷா, திருப்பதி.* 49

**2020, பிப்ரவரி மாத ராசி பலன்** 51
*- திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர்.*


**அட்டைப்பட விளக்கம்**

முன்னட்டை : **ஸ்ரீதேவி பூதேவி உடனுறை ஸ்ரீகல்யாணவேங்கடேஸ்வர ஸ்வாமி, ஸ்ரீநிவாசமங்காபுரம்.**

பின்னட்டை : **ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி நந்தி வாகனம்-கபில தீர்த்தம், திருப்பதி.**

# அனைவருக்கும் ஆரோக்கியம் அளிப்பவன் ஆதித்தியன்!

**உங்களுடன்...**

*''ஆதித்யாநா மஹம் விஷ்ணு: ஜ்யோதிஷாம் ரவிரம்சமான்''* – "அதிதி புத்திரர்களில் விஷ்னு நானே, சூரிய மண்டலத்திற்கு அதிபதியான சூரியனும் நானே" என்கிறார் பகவத்கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர்.

அபூர்வமான வெளிச்சத்தையும், கிரணங்களையும் பற்றி கூறும்போது சூரிய பகவானே நமக்கு பரம உன்னதமான பிரமாணம். எனவேதான் எல்லையில்லா இவ்வுலகில் ஆயிரம் சூரிய கிரணங்களால் பிரகாசிக்கிறான் என்று ஸ்ரீமந் நாராயணன் போற்றப்படுகிறார்.

*''சர்வேந்த்ரியாணாம் நயநம் ப்ரதாநம்''* என்பது போன்று உலகமனைத்திற்கும் சூரியனே கண் போன்றவர். பிரபஞ்சம் முழுவதும் ஆயிரம் கிரணங்களைக் கொண்ட பாஸ்கரனால்தான் ஒளிப்பெற்று பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. காண்பதற்கு கண்கள் இருந்தும் ஒளி இருந்தால் மட்டுமே காண்பது சாத்தியமாகும். உலகம் முழுவதும் ஒளியை வழங்கும் எல்லையற்ற இயற்கையை, அற்புதமான இந்த இறைவனின் படைப்பினை சதாகாலமும் தரிசிக்கும் சூரியன் உலக சாட்சியாகவும், பகவானின் கண்ணாகவும் விளங்குகின்றான்.

இவ்வண்டம் முழுவதும் ஜோதி சக்கரமாக ஒளி வீசி, அனைத்து கோள்களும் தன்னை சுற்றி வரும்படி செய்து, இரவு–பகல், வாரம், மாதங்கள், ருதுக்கள், அயனங்கள், வருடங்களை உண்டு பண்ணி, காலச்சக்கரத்தை ஏற்படுத்துகின்ற கண்கண்ட தெய்வம் சூரிய பகவானே ஆவார்.

*''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''-''ஆரோக்யம் பாஸ்கராதி சேத்தா''* – ஐச்வர்யத்தை, ஆரோக்கியத்தை, சந்தானத்தை, கல்வியை, வெற்றியை இவ்வாறு அனைத்தையும் அளித்து இனி நான் தரவேண்டியது எதுவுமில்லை என்பதனை நிரூபிக்கின்றார் அனைத்தையும் அளிக்கின்ற பிரபாகரன் தினமும் பிரம்ம முஹூர்த்தத்தில் தன் விடியலின் வாயிலாக இந்த அண்டசராசரத்தில் உள்ள அனைத்து ஜீவராசிகளையும் தினமும் விழிப்படையச் செய்கிறான். காலத்தை வழி நடத்துவது என்பது எவருக்கும் சாத்தியமற்றது என காலத்தை கண்காணித்து, நொடிப்பொழுதும் தவறாமல் தரிசனமளித்து அனுகிரகிப்பவர் உலகை காக்கும் ஸ்ரீசூரிய நாராயண பகவானே ஆவார்.

எல்லையற்ற ஒளி மயமாக அனைத்து தேவதைகளின் வடிவினனாக நம் கண்முன்னே காட்சியளிக்கும் ஸ்ரீசூரிய பகவானை எத்தனையோ பேர் பலவிதமாக அர்ச்சித்து சித்தியடைந்துள்ளனர்.

கலியுக பூலோக வைகுண்டவாசனான திருவேங்கடமுடையான் சூரியனை அர்ச்சித்து ஸ்ரீமகாலக்ஷ்மியை அடைந்தார். குந்திதேவி சூரியனை துதித்து கவச குண்டலத்துடன் மாவீரனான கர்ணனை மகனாகப் பெற்றார். தர்ம ராஜாவுக்கு ஆரண்ய வாசத்தின் போது பசியை போக்குவதற்கான அக்ஷய பாத்திரத்தை வழங்கினார் இப்பானுமூர்த்தி. இப்போது மூர்த்தி ஸ்ரீராமபக்தனான சிரஞ்சீவியான அனுமன் சூரியனிடம் கல்வியைக் கற்றார். ஸ்ரீராமபிரான் சூரியனை ஆராதித்து போரில் வெற்றியைக் கைப்பற்றினார். சத்ராஜித் சூரிய உபாசனையின் வாயிலாக பொன் மழையை பொழியும் விலைமதிப்பற்ற சமந்தகமணியை பெற்றார். யாக்ஞவல்கியர் சூரியனிடத்தில் சுக்ல யஜூர் வேதத்தை கற்றார்.

சூரிய நாராயணனுக்கு சூரிய ஜெயந்தியாகக் கொண்டாடப்படுவதே இரதசப்தமியாகும். அன்றைய நாள் முதல் வடதிசையை நோக்கி தன் இரதத்தை செலுத்தும் காலபுருஷனான சூரிய பகவானிடம் மேன்மையான நலன்களை அருள வேண்டுமென ஆராதிப்போம்! அனைத்து நலன்களையும் பெறுவோம்!!

*ஸப்தாஸ்வரத -*
*மாரூடம் ப்ரசண்டம்*
*கஸ்யபாத்மஜம் |*
*ஸ்வேத பத்மதரம்*
*தேவம் தம் சூர்யம்*
*ப்ரணமாம்யஹம் ||*

நம்முடைய இந்தியக் கலாச்சாரத்தில் சூரிய வழிப்பாட்டிற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

சூரியனில் உள்ள பௌதீக சக்திகளை விஞ்ஞானம் ஆராய்ந்து கொண்டிருக்கையில், அந்த மகா ஜோதியில் உள்ள திவ்ய சக்திகளை நம் வேதங்கள் தெரிவித்துள்ளன.

ஆதித்யா, சூர்யா, ரவி, மித்ரா, பானு, ககா, பூஷா, அர்யமா, மரீசீ, சவிதா, அர்கா, பாஸ்கரா, ப்ரபாகர, மார்த்தாண்ட" இப்படி பல பெயர்களில் பூஜித்து அழைக்கப்படுகிறார் சூரிய பகவான்.

நம்முடைய வேத ஞானம் 4 வகையான கோணங்களை காட்டுகிறது. நம் பண்டைய சாஸ்திரங்களை கவனித்தால் இந்த சிறப்புக்களை தெரிந்து கொள்ளலாம். சூரியனை *"ஸப்தாஸ் வரத மாரூடம்"* என்ற நாமத்தில் துதிப்பது மரபு. ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட இரதத்தின் மீது சூரிய பகவான் வலம் வருகிறார் என்று பொருள்.

**இவற்றில் உள்ள கூறுகளை அறிவோம் :**

*"ரம்ஹணசீலத்வாத் ரத:"* அசைவுடன் திரும்புவது இரதம். பரவலாக கடந்துச் செல்லக்கூடியது ஒளி. அதன் ஒளிக் கதிர்கள் வீசக் காரணமானவன் பிரபாகரன். "அஸ்வம்" என்றால் ஒளிக்கதிர் என்று பொருள். "அசூ–வ்யா ப்தா" என்றால் விரைவாகப் பரவும் தன்மை உடையது என்பது பொருள். இது ஒளிவீச்சத்தின் தன்மை. அதற்குத்தான் சூரிய கிரணங்களையே குதிரைகள் என்கின்றனர். *"ஏகோ அஸ்வோ வஹதி ஸப்தநாமா..."* ஒரே ஒரு குதிரை ஏழு என்று அழைக்கப்படுகிறது என வேதம் விவரிக்கின்றது.



# சூரியனை துதிப்போம்

தெலுங்கு மூலம் : திரு. சாமவேதம் சண்முக சர்மா
தமிழாக்கம் : திருமதி. ஏ. அருணா, 98857 01696

இதை நாம் கவனித்தால் நம் சாஸ்திர ஆதாரமாக அனேக பாவனைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.


சூரிய உதயத்தைப் பொறுத்து நாம் நாட்களை கணக்கிடுகிறோம். பகலுக்கு காரணமாக விளங்கக் கூடியவன் சூரியனே. இவ்வுதயத்தினை பொறுத்து வாரங்களும் ஏற்படுகின்றன. வாரத்திற்கு 7 நாட்கள். காலத்தின் நாட்கள் ஆதித்யன் 7 நாட்கள் எனும் 7 குதிரைகளைப் பூட்டிக் கொண்டு வருகிறார்.

புராணங்களின்படி சூரியனின் 7 குதிரைகளின் பெயர்கள். 1)ஜய, 2)அஜய, 3) விஜய, 4) ஜித ப்ராண, 5) ஜிதஸ்ரம, 6) மனோஜவ 7) ஜிதக்ரோத (ஆதாரம் – பவிஷ்யத் புராணம்). ஒளிக் கதிரின் சுழற்சி பல்வேறு கட்டங்களாகும். அந்த சக்தியின் சிறப்புகளே இந்தப் பெயர்கள்.

வேதங்களின் வடிவமாக (ரிக், யஜுர், சாம, பாரக:) சூரியனை கொள்கிறது நம் தர்மம். ஆஞ்சநேயன், யாக்ஞ வல்கியர் சூரிய உபாசனை வாயிலாக வேத வித்தகர்களாயினர்.

இந்த வேதத்தின் முக்கிய பகுதிகள் ஏழு. காயத்ரி, த்ரிஷ்டுப், அநுஷ்டுப், ஜகதி, உஷ்ணிக், பங்க்தி, ப்ருஹதி.

நம் உடலில் தோல், எலும்பு, சதை, ரத்தம்,



அறிவு, கண் ஒளி என்ற தாது பொருட்கள் உள்ளன. இவற்றின் வாயிலாக நடப்பது ரதம் என்கின்ற உடல். இவற்றையெல்லாம் தன் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வருபவன் ஆதித்யனான பரமாத்மா. நம் முகத்தில் உள்ள கண்கள் 2, மூக்குத்துவாரம் 2, காதுகள் 2, முகம் 1 இப்படி ஏழு ஞானேந்திரியங்களை வழி நடத்துபவனே புத்தி மறுஉருவ எழுச்சியை கொடுக்கும் ஆதித்யன்.

இந்த ஏழு குதிரைகளால் வழி நடத்தும் சூரிய ஒளியே விரிவாக சப்த அஸ்வ இரதமாக பெயர் பெற்றுள்ளன என வேத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

உலகினை எழ வைத்து, சலனத்தை உண்டு பண்ணும் சக்தியே "பத்மினி". நோயை நீக்கி காலையில் புத்துணர்ச்சியை கொடுக்கும் சக்தியே "உஷா தேவி". சூரிய ஒளியின் மூலம் பொருட்களை அடையாளம் காண்கிறோம். இது சஞ்ஞான சக்தி. வெளிச்சம் இருந்தால்தான் நிழல் ஏற்படும். அதுவே "சாயா தேவி".

இந்நான்கும் சூரியனின் ஒளியில் வந்த வடிவங்கள். அனைத்துக்கும் முதலில் ஒளி தருபவன், பலவித உருவங்கள், சக்திகள் கொண்ட சூரிய பகவான். இவருடைய மனைவிகளான உஷா தேவி, சாயா தேவியுடன் நம்மை அனுகிரகிக்கிறார்.

### அனைத்து தேவதைகளின் உருவம் !

விடியற்காலையில் எழுந்து, நீராடி சூரிய பகவானை சேவித்தால் போதும், அனைத்து பாவங்களும் ஒழிந்து நாம் தூய்மையடைவோம் என மகாபாரதத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவான் போதிக்கின்றார்.

சாந்தம், உக்ரம், அமைதி, கோபம் இவை அனைத்தையும் சூரிய பகவானில் நாம் காணலாம். கோரம், அகோரம் இந்த இரண்டிலும் உலகத்தை எழுச்சிப் பெறச் செய்பவனே ருத்ரன், சிவன் என்றும், திசைகளுக்கு அதிபதி என்றும் வேதம் கூறுகிறது.

சூரியன் மூலமாகவே திசைகளும் ஏற்படுகின்றன. சூரியன் உதிக்கும் திசை கிழக்கு என்று தெரிந்து கொண்ட பிறகே, மற்ற திசை களையும் நிர்ணயம் செய்கிறோம். *''திசாஞ்ச பதயே நமஹ:''* என்று ஸ்ருதி மந்திரம் கூறுகின்றது. அந்த ஒளிக் கதிர்களே அவருக்கு ஆயிரம் கரங்களாகும்.

கொடுப்பது, பெறுவது, கர்ம வினைகள் செய்வது, தாலாட்டுவது எல்லாமே கைகளின் செயல்களாகும். சூரிய ஒளிக்கதிர்களே உலகத்திற்கு நன்மையையும், அழகினையும் வழங்குகிறது. ஆகையால் "ஹிரண்ய பாஹீவு" என்று புகழ்கின்றனர்.

சூரிய ஒளியே சூரிய கதிர்களை உலகம் முழுவதும் பரப்பி அவற்றின் மூலம் அண்ட சராசரங்களுக்கும் உயிர் சக்தியினை அளிக்கின்றபடியால் இவர் விஷ்ணு என்றும் அழைக்கப் படுகின்றார்.

சூரியக் கிரணங்களுக்குள் இருக்கும் லக்ஷணத்தை வைத்தே வைணதேயனை கருடன் என்று அழைக்கின்றனர். கிரணங்களை தன்னுள் வைத்திருப்பவன் ஆதித்யன் கருட வாகனன்.

சூரியனின் ஒளிக்கதிர்களின் சக்தியே உலகிற்கு ஐச்வர்யத்தை வழங்குகிறது. ஆகவே தான் லஷ்மியாக, பராசக்தியாக, ஜகதாம்பிகையாக சூரியனை ஆராதிக்கிறோம். சூரியக் கிரணங்கள் தீவிரமாக இருந்தாலும், சாதாரணமாக இருந்தாலும் பரிணாமத்தில் நமக்கு மங்களகரம்.

மங்களமே அவருடைய சுபாவம். எனவே தான் "சிவன்", "மங்கள மயன்", என்று அவரை சேவிக்கின்றனர். (*''ஆதித்யஞ்ச சிவம் வித்யாதே...''* சாஸ்த்திரக் கூறு)

*''இந்தி தீப்தா'' ''இதி ஐஸ்வர்யே''* என்று சம்ஸ்க்ருதத்தில் கூறியது போல் ஒளி, ஐச்வர்யம் ஆகியவற்றை பெற்றிருப்பதால் சூரியனுக்கு "இந்திரன்" என்ற பெயரும் உண்டு.



எனவேதான் ஒளிக்கதிர்களில் அனைத்துத் தேவ சக்திகளும் உள்ளது சிறப்பு. வேதம், *"ஏகம் சத் விப்ரா: பஹுதா வதந்தீ"* என்ற மந்திரம் சூரியனுக்காகவே கூறப்பட்டது.

ஒரே சூரிய சக்தி பலவிதங்களில் உலகினை அனுகிரகிக்கிறது. சூரியன் ஒரு ஜட சக்தி அல்ல. பரப்பிரம்ம எழுச்சியை தன் ஒளிக்கதிர்களின் மூலமாக நமக்கு வழங்குகிறது. அதனால் சர்வ தேவதைகளின் உருவம் ஆதித்யன் என்றழைக்கப்படுகிறது. சூரிய ஒளியினை தகிக்கும் சக்தியாக மாற்றி, யாகங்கள் செய்து, தேவதைகளை மகிழ்விப்பதே நம் பண்பாடு.

சூரிய ஒளிதான் தாவரங்களில் உணவு உற்பத்தி செய்கிறது என்கிறது அறிவியல். எனவே தான் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தும் விதமாக தை முதல் நாள் புத்தரிசி கொண்டு பொங்கலிட்டு சூரியனுக்குப் படைத்து ஒரு பண்டிகையாகவே கொண்டாடி வருகின்றனர்.

உத்திராயண புண்ய கால வேளையில் தெய்வீகமான சூரியக் கதிர்களுடன் நம் பகுதியை எழுச்சிப் பெற செய்கிறார் பகவான்.

இதையே நாம் "இரதம் மாறுவது" (திசை ஓட்டம்) என்றும், 7 என்ற எண்ணிற்கு முக்கியத்துவம் கொடுத்து "ஸப்தமி" திதியை, "இரதஸப்தமி"யாகக் கொண்டாடி சூரியனை ஆராதனையை சேவிக்கிறோம்.

கிழமைகளில் முதல் நாளான "ஞாயிறு", திதிகளில் "ஸப்தமி" சூரிய ஆராதனைக்கு மிகவும் சிறந்தது. சூரிய நமஸ்காரம் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்தது.

**கண்கண்ட தெய்வத்திற்கு வணக்கங்கள் :**

பண்டைய இந்திய மகரிஷிகள் சூரிய ஒளியில் மறைந்து உள்ள தெய்வீக சக்தியை எப்படி பெற வேண்டும் என்று பலமுறைகளில் போதித்துள்ளனர்.

சூரியனிலிருந்து உயிர் சக்தி, பஞ்சபூத சக்தியை இந்த பூமி மீது உள்ள அனைத்து உயிரினங்களும் பெறுகின்றன. இந்திய வேத, புராணங்களில் சூரிய சக்தியை பல விதங்களில் கூறப்பட்டுள்ளன. ஒரு சூரியனின் ஒளிக்கதிரே ஏழு வண்ணங்களாக வியாபித்துள்ளன என்பது வேதம் கூறும் உண்மை.

வெப்பம், ஒளி, மழை, பசுமை – இவையெல்லாம் சூரியனில் உள்ள சக்திகள். இவை பல பெயர்களில் உள்ளன. கசடுத்தனம் உள்ளதால் "மித்ரா" என்றும், மழைக்கு காரணமாக விளங்குவதால் "வருணன்" என்றும், காக்கும் குணம் உள்ளதால் "பூஷா" என்றும், ஒளி விடும் தன்மையால் "பக" என்றும் பெயர்கள் உள்ளன.

"ஆதித்யஹ்ருதயம்" சூரியனை "சர்வ தேவதா ஆத்மகாரகன்" என்று வர்ணிக்கின்றது. காலம், ருது, கர்ம சாக்ஷி, ஒளிமயன் போன்றவற்றை ஆராயும்போது பண்டைய ரிஷிகள் சூரியனை எப்படி எல்லாம் ஆராதனை செய்தனர் என்பதை அறிய முடிகிறது.

பிரம்மா, விஷ்ணு, சிவனாக பாவிக்கும் சூரியனே அன்னத்தை வழங்குபவன். இருள் என்கின்ற அஞ்ஞானத்தையும் அசத்தியங்களையும் ராக்ஷஸர்களாக நினைத்து வதைத்து அவற்றை கண்டுபிடிக்கும் "ஆதித்யனே" ஒளிசக்தியாக வர்ணிக்கப்படுகிறார்.

சூரிய உதயத்திற்கு முன்பே விழித்து உடலையும், வீட்டையும் தூய்மைபடுத்திக் கொண்டு சூரியனை வரவேற்று வணங்குவது நம் மரபு. சூரியனை நாராயணனாக ஆராதனை செய்து *"த்யேய: சதா சவித்ரு மண்டல மத்யவர்த்தி"* என்று வணங்கி, அந்த சூரியனின் அருணோதயத்தில் உள்ள கருணை"யை தரிசித்து,



"அருணாம்பிகை" என்னும் "லலிதா" வை உபாசிப்போம்.

கண்கண்ட தெய்வமாக அடையாளம் கண்டு பௌதீக தெய்வீக உணர்வு சூரிய சக்தியால் பெற முடியும் என்று அறிவியல் உலகிற்கு எடுத்துக் காட்டுகிறது. படைத்தல், காத்தல், அழித்தல் என்ற தத்துவத்தை "பரஞ்ஜோதி" எனும் சாஸ்திரம் கூறுகின்றது.

சூரியனில் பரமேஸ்வரனை ஆராதிப்பவர்கள் ஆத்ம ஞானம், வீடுபேறு பெறுகிறார்கள் என்று உபநிஷத்துகள் கூறுகின்றன. சைவ, வைணவர்களாலே சௌர மதம் விசிஷ்ட சம்பரதாயமானது. வைணவர்கள் "சூரிய நாராயணன்" என அழைத்தால், சைவர்கள் "ஆதித்யனாக" வணங்குகிறார்கள்.

தமக்கு விருப்பமான தெய் வங்களின் பெயரால் சூரியனை ஆராதிக்கிறார்கள். "சூரிய நமஸ் காரம்" இந்து மதத்தில் முக்கிய மான அம்சம். வாரத்தின் முதல் நாளை "ஞாயிறு" என்கிறோம்.

சூரிய பகவானை வேதமாக பாவிக்கும் வேத பண்பாடுள்ள நம் நாட்டில் *"த்ரயா மயாய த்ரிகுணாத்ம தாரிணே"* என்று வேதம் புகழ்கிறது. சூரியனை யாக்ஞவல்கியர் ஆராதித்து வேத விஞ்ஞானத்தைப் பெற்றார். நல்ல புத்திசாலியான அனுமன் சூரியனை உபாசனை செய்து, அவரையே குருவாக நினைத்து அனைத்து வித்தைகளிலும் தேர்ச்சிப் பெற்றார் என இராமாயணம் கூறுகின்றது.

திவோதாஸன் என்ற அரசன் சூரிய கிரணம் மூலமாக உணவை சமைத்தான் என்று ஸ்கந்த புராணம் தெரிவிக்கின்றது. தர்ம ராஜன் சூரிய உபாசனையின் மூலமாக "அக்ஷய பாத்திரம்" பெற்று, தன் கிருக தர்மத்தை நிலைநாட்டினார். அதன் மூலம் உணவை விருந்தினர்களுக்குப் படைத்தா ராம். சாம்பன் (ஸ்ரீகிருஷ்ணன் புத்ரன்) பாஸ்கர ஆராதனை மூலம் நோயை போக்கிக் கொண்டானாம். "மயூரன்" என்ற சமஸ்க்ருத கவிஞர் "சூரிய சதகம்" எழுதி முழு ஆரோக்கியத்தையும் அடைந்தாராம்.

சீதா தேவி திவாகரனின் உபாசனையினால் அமைதியை பெற்றதாகவும் ராமாயண யுத்த காண்டம் தெரிவிக்கின்றது. ஸ்ரீராமபிரான் அகத்திய மகரிஷியின் மூலமாக "ஆதித்ய ஹ்ருதயம்" உபதேசமாகப் பெற்று ராவணனை வதம் செய்து வெற்றிவாகை சூடினார் என்பது உறுதி. பவிஷ்யத் புராணத்தில் 7 அத்தியாயங்கள் கொண்ட ஆதித்ய ஹ்ருதயம் எனும் க்ரந்தம் கிடைக்கிறது. இது ஸ்ரீகிருஷ்ணரே அர்ஜுனனுக்கு போதித்தது. சூரிய உபாசனை மூலமாக விலைமதிப்பற்ற சமந்தக மணியை "சத்ராஜித் பெற்றதாக கதை கூறுகின்றது. 7 வண்ணங்களான சூரிய ஒளி 7 குதிரைகளுக்கு ஒப்பா னது. ஒரே ஒளியானது 7 வண்ணங்களை வெளிப்படுத்துகின்றது என்ற அறிவி யல் உண்மையை *"ஏகோ - அஸ்வோவஹதி சப்த நாமா"* என்ற வேத மந்திரம் நிருபிக்கின்றது. 7 நாட்களே 7 குதிரைகளாக சூரியோதயத்தை ஆதாரமாகக் கொண்டு நடக்கும் "கிழமை சக்கரம்" 7 குதிரைகளாக உள்ளது.

அனைத்து புராணங்களிலும் ஆதித்யனை சிறப்பாக கூறுவதேயல் லாமல் "ஆதித்ய புராணம்" பெயரில் உப புராணம் உள்ளது. அது ஞாயிறு விரதம், ஸப்தமி பூஜை சங்க்ரமண பண்டிகை. சூரிய ஆராதனையின் முக்கிய அம்சமாகும். நமஸ்காரப்பிரியன், அர்க்கிய பிரியன் சூரியன். சூரியோ தயத்தை "உஷாக்காலம்" என்று பண்டைய காலத்திலே கூறுவர்.

இக்காலத்தில் தெய்வ சக்தியை நம் கிரந்தங்கள் மிகவும் புகழ்ந்து பாடியுள்ளன. முக்கியமாக உத்தராயண புண்ணிய காலத்தில் ப்ரசன்னமாக விளங்கும் ஒளியானது தெலுங்கு (மாக மாதம்) மாசி மாதம் ஆதித்ய ஆராத னைக்கு மிகவும் பிரசித்தி பெற்றது. ஜோதிட சாஸ்திரத்தில் சூரியனுக்கு அதிதேவதை "ருத்ரன்".

அதனால் தான் மாசி மாதத்தில் (மாக மாதம்) சிவராத்திரி தேய்பிறை சதுர்த்தி "மகா சிவராத்திரி" யாக கொண்டாடப்படுகிறது. சூரிய சக்தியை யாகத்தில் ஆராதனை செய்து அனைத்து தேவர்களின் உருவங்களாக நாம் சேவிக்கிறோம். அது நம்முடையயாக வலிமை. சூரியனை நமஸ்கரிப்பதே நம்முடையபண்பாடு. தேவதைகள் அனைவரும் "ஒளிமயமான" பிரபாகரனை துதிப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.



# தி.தி.தே. ஆலய தரிசனம் (பாக்கேஜ் டூர்)



## ஆந்திர மாநில சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கழகம்

### 1. திருப்பதி உள்ளூர் ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.100/–<br>ஏ.சி. –ரூ.150/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 6<br>(ஆறு) | காலை 6 மணி முதல் மதியம் 1 மணி வரை |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீ பத்மாவதி தாயார் திருக்கோயில் - திருச்சானூர்
2. ஸ்ரீஅகஸ்தீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - தொண்டவாடா
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - ஸ்ரீநிவாசமங்காபுரம்
4. ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி
5. ஸ்ரீகோவிந்தராஜ ஸ்வாமி திருக்கோயில் - திருப்பதி

### 2. திருப்பதி அருகிலுள்ள ஆலய தரிசனம் (தினமும்)

| டிக்கெட்டின் விலை | பேருந்து புறப்படுமிடம் | முறை | புறப்படும் நேரம் |
|---|---|---|---|
| ஏ.சி. அற்றது–ரூ.250/–<br>ஏ.சி. –ரூ.350/– | ஸ்ரீநிவாசம் & விஷ்ணு நிவாசம் கட்டிடத்தொகுதி, திருப்பதி | 2<br>(இரண்டு) | காலை 8 மணிக்கு மற்றும் காலை 9 மணிக்கு |
| (10 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு கட்டணம் கிடையாது) | | | |

### தரிசிக்கும் ஆலயங்கள்

1. ஸ்ரீவேணுகோபால ஸ்வாமி திருக்கோயில் - கார்வேடி நகரம்
2. ஸ்ரீவேதநாராயண ஸ்வாமி திருக்கோயில் - நாகலாபுரம்
3. ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - நாராயணவனம்
4. ஸ்ரீபிரசன்ன வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - அப்பளாயகுண்ட்டா
5. ஸ்ரீ கரியமாணிக்க ஸ்வாமி திருக்கோயில் - நகரி
6. ஸ்ரீஅன்னபூர்ணி உடனுறை காசி விஸ்வேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - புக்கை
7. ஸ்ரீபள்ளிகொண்டீஸ்வர ஸ்வாமி திருக்கோயில் - சுருட்டப்பள்ளி

**மேலும் விவரங்களுக்கு**

**0877-2289123, 2289120 / 121, 9848007033**

# மாயமென்ன மாயம்

டாக்டர் கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி,
திருப்பதி, 99855 99669

ஸ்ரீய:ப்பதியான எம்பெருமான் எல்லாக் குறைகளுக்கு (ஸமஸ்தமான ஹேயங்களுக்கு) எதிர்த்தட்டாயும், கல்யாண குணங்களுக்கு முக்யாச்ரமாயும், அடையத்தக்கவனாயும், தன்னைக் காட்டிலும் மற்றுமுள்ள எல்லாப் பொருளை (ஸம்ஸ்த வஸ்துவை)க் காட்டிலும் விலக்ஷணமாயும், முடிவு காணமுடியாத ஞானானந்தங்களையுமுடையவன். அப்படிப்பட்டவன் இப்பூமியிலுள்ளாரைத் திருத்திப்பணி கொள்ள நினைத்தான். ஆனால் திருந்தக் கண்டிலன். இந்த விஷயத்தை மயர்வற மதிநலம் பெற்ற ஆழ்வார்கள் எம்பெருமான் திருவுள்ளத்தை அறிந்து

*"ஆரானு மாதானுஞ் செய்ய அகலிடத்தை*
*ஆராய்ந்து அதுதிருந்தலாவதே - சீரார்*
*மனத்தலை வன்துன்பத்தை மாற்றினேன் வானோர்*
*இனத்தலைவன் கண்ணனால் யான்"*

–பெரிய திருவந்தாதி –25

என்று பிறர் துன்பத்திற்குக் கரைவது தவிர்த்துத் தான் பெற்ற பேற்றிற்கு உகந்தருளினர். இப்படி எம்பெருமானின் சீல குணத்தைப் பலவாறாக அநுபவிக் கிறார் திருமழிசையாழ்வார். அதாவது எம்பெருமான் காரணபூதன், ஆச்ரயணீயன், மாயன் என்னும் தலைப்பு களில் எம்பெருமானை அனுபவிக்கிறார் ஆழ்வார்.

**காரணபூதன் :**

அண்டங்களுக்குக் காரணமாய், குணங்களோடு கூடிய நிலம், நீர், தீ, கால் (காற்று), விசும்பு (ஆகாயம்) என்னும் ஐந்து பூதங்கட்கு அந்தராத்மாவாய் நிற்கிற ஈச்வரனே உபாதாந (முதற்) காரணம். *"பூததந்மாத் ஸர்கோய மஹதங்காராத் தாமஸாத்"* என்கிறது விஷ்ணு புராணம் (1.2.48). அதாவது இந்த பூதங்களுடையவும், தந்மாத்ரங்களினு டையவும் ஸ்ருஷ்டி, தாமஸ அகங்காரத்திலிருந்து உண்டாயிற்றாம். இதையே பிள்ளைலோகாசாரியர் ஒரு சூத்திரத்தின் மூலமாக அருளிச் செய்கிறார்.

*"பூதாதியில் நின்றும் சப்தமாத்ரை பிறக்கும், இதில் நின்றும்*
*ஆகாசமும் ஸ்பர்சதந்மாத்ரையும் பிறக்கும், ....*
*இதில் நின்றும் ப்ருதிவீ பிறக்கும்"*

இக்கருத்தைத் தெளிவிப்பதே கீழ்வரும் பாசுரம்;

*"பூநிலாய வைந்துமாய்ப் புனற் களிந்த நான்குமாய்*
*நீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்*
*மீநிலாய தொன்றுமாகி வேறு வேறு தன்மையாய்*
*நீநிலாய வண்ணநின்னை யார்நினைக்க வல்லரே"*

அதாவது முன் இரண்டடிகளால் ப்ராக்ருத பூமி ஸம்பந்தப்பட்ட ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறது. சாதாரணமாக ப்ருதிவி (பூமி), அப்பு (நீர்), தேஜஸ் (ஒளி), வாயு, ஆகாயம் முறையே மணம், ரஸம், ரூபம், ஸ்பர்சம் (தொடு உணர்ச்சி), சப்தம் (ஒலி) என்றும் குணங்கள் உண்டு. ஆனால் "காரண வஸ்துவிலுள்ள குணங்கள் காரியத்தில் வந்து சேருகின்றன" என்றும், நியாயப்படி பூமிக்கு ஐந்தும், நீருக்கு நான்கும், ஒளிக்கு மூன்றும், வாயுவுக்கு இரண்டும், ஆகாயத்திற்கு ஒன்றும் என்று குணங்கள் சேருகின்றன என்பதைத் தைத்ரீய உபநிஷத்து *"ஆகாசாத் வாயு: வாயோக்நி, அக்நோராப: அத்ப்யப்ருதிவீ"* என்றும் உறுதி செய்கின்றது.



பூமி (ப்ருதிவி) – சப்தம் (ஒலி), ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம் – 5. நீர் – சப்தம், ஸ்பர்சம் (தொடு உணர்ச்சி), ரூபம் (வடிவு), ரஸம் (ருசி) – 4. தீ – சப்தம், ஸ்பர்சம், ரூபம் – 3. காற்று – சப்தம், ஸ்பர்சம் –2. ஆகாயம் – சப்தமொன்றே – 1. இதைப் பற்றி ஸ்ரீவிஷ்ணு புராணத்திலும் (1–2–50) காண முடிகிறது. இவற்றிற்குக் காரணமான எம்பெருமானை யாரால் சிந்தித்து அறிய முடியும் என்றபடி.

**ஆச்ரயணீயன் (அடையத்தகுந்தவன்) :**

*''ஸஹயஜ்ஞை: ப்ரஜாஸ் ஸ்ருஷ்ட் வா''* என்கிறபடியே காரணபூதனானாலே படைக்கப்பட்ட சேதநர்க்குக் கர்மயோகம் முதலானப் பரமபக்தி வரையிலான பகவத் ஸமாராதனத்துக்கும் சுலபமாகப் பற்றுகைக்கும் (சுபாச்ரயம்) அந்தப் பரபக்தியுடையவர்களுக்கு எல்லாவித போக்யமாகைக்கும் கிருஷ்ணனாய் வந்து காக்கும் அவனுடைய நீர்மையை (ஸௌலப்யம்) யார் நினைக்கவல்லவர்கள் என்று எம்பெருமானுடைய ஸௌலப்யத்தை அநுபவிக்கிறார் ஆழ்வார்,

இக்கருத்தை *''ஆறு மாறு மாறு மாய்''* என்னும் பாசுரத்தால் விவரிக்கப்படுகிறது.

*''ஆறுமாறு மாறு மாயோரைந்துமைந்துமாய்*
*ஏறுசீரிரண்டு மூன்று மேழுமாறு மெட்டுமாய்*
*வேறுவேறு ஞானமாகி மெய்யினோடுபொய்யுமாய்,*
*ஊறொடோசையாயவைந்து மாயவாய மாயனே!''*

ஆறும் – அதாவது தான் ஓதுதல், பிறரை ஓதுவித்தல், தான் வேள்வி செய்தல், பிறரை வேள்வி செய்வித்தல், தான்கொடுக்கை, பிறர் கொடுப்பதை ஏற்றுக் கொள்ளுதல் (முறையே அத்யயநம், அத்யா பநம், யஜநம், யாஜநம், தாநம், ப்ரதிக்ரஹம்) என்று ஆறு கருமங்கள் அந்தணர்கட்கு விதிக்கப்பட்டுள்ளன. அக்கருமங்களுக்கு எம்பெருமான் தலைவன்.

ஆறும் – ருதுக்கள் ஆறு. வசந்தம், கிரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம் என்பன அவை. இரண்டு மாதங்கள் கொண்டது ஒரு ருதுவாகும். இந்த ருதுக்களை எம்பெருமான் நடத்துபவன் என்றபடி.

ஆறும் – ஆக்நேயம், அக்நீஷோமீயம், உபாம்சுயாஜம், ஐந்த்ரம் இரண்டு, ஐந்த்ராக்நம் என்று ஆறு யாகங்கள். எம்பெருமானே எல்லா தேவதைகட்டும் சரீரியாயிருந்து கொண்டு தானே எல்லா யக்ஞ போக்தாவாயிருக்கிறான் என்பது.

ஐந்தும் – பஞ்சமஹாயஜ்ஞங்கள். அதாகிறது, தேவ, பித்ரு, பூத, மநுஷ்ய, ப்ரஹ்ம என்று ஐந்து மஹாயஜ்ஞங்களாகும். இவற்றிற்கும் எம்பெருமானே போக்தாவாகிறான்.

ஐந்தும் – ப்ராண, அபாந, வ்யாந, உதாந, ஸமாநங்கள் என்று ஐந்து ஆஹுதிகள். இவை ஐந்தும் அந்தர்யாமியான பரமாத்மாவுக்குச் சேரும் ஆராதநங்களாம்.

ஐந்தும் – ஐந்து அக்நிகளைச் சரீரமாகக் கொண்டவன் எம்பெருமான். அவையாவன : கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி, ஸப்யம், ஆவஸத்யம் என்பனவாம்.

ஏறுசீரிரண்டு – *''பாற்பால் மனஞ் சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு''* என்கிறபடியே பிராட்டியோடு கூடிய எம்பெருமானை பக்தி செய்யும் ஞானமும், பற்றினை விடுத்தலில் வெறுப்பும், எல்லா சாஸ்த்திரங்கட்கும் இவ்விரண்டில் தான் முக்கியமாதலால் ஏறுசீர் என்று சிறப்பித்து சொல்லப்பட்டது.

மூன்றும் – ஜ்ஞாந விரக்திகளின் பயனாக விளைகின்ற பரபக்தி, பரஜ்ஞாந, பரமபக்திகளைச் சொல்லுகிறது. அதன்றியே உபாஸநத்தின் பயனாக ஐச்வர்யம், கைவல்யம், பகவத் ப்ராப்திகளையும் சொல்லப்படுகிறது. இவற்றைக் கொடுப்பவன் எம்பெருமான் என்றபடி.

ஏழும் – விவேகங்கள் ஏழு – அவையாவன: விவேகம், விமோகம், அப்யாஸம், க்ரியை, கல்யாணம், அநவஸாநம், அநுத்தர்ஷம் என்று விவேகாதி ஸப்தகம் எனப்படும். இந்த ஏழினையும் நிர்வகிக்கக்கூடியவன் எம்பெருமான் ஒருவனே என்பதாம். எம்பெருமானைச் சிந்திப்பதற்குக் காரணமான மனத்தெளிவுக்கு இவை இன்றியமையாதனவாதலால் இவை உறுதியாகும்படி எம்பெருமான் அருள் செய்வான் என்பதாம். இவ்விதமாக எம்பெருமான் சேதநர்கட்கு ஆச்ரயணீயாக (அடையப்படுபவனாக) ஆகிறான் என்றபடி.

எம்பெருமான் ஆச்ரயணீயன் என்று *''கொண்டை கொண்ட கோதை மீது''* (49) என்னும் பாசுரத்திலும்

**வாசகர்களுக்கு அறிவிப்பு**

ப்ரதி மாதம் ஸப்தகிரி மாத இதழ் உங்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் கிடைக்காமல் போனால் ப்ரதான ஆசிரியர் அலுவலகத்தை பணி நாளில் கீழ்காணும் தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்டால் இவ் இதழினை உடனே அனுப்பி வைக்கப்படும். நீங்கள் கீழ் குறிப்பிட்ட விவரங்களை தொலைபேசியில் தெரிவியுங்கள். உங்கள் சந்தா எண், உங்கள் முகவரி, உங்கள் பகுதி அஞ்சல் எண், உங்கள் கைபேசி எண்... சரியாக தெரிவியுங்கள்.

பிரதான ஆசிரியர் அலுவலக தொலைபேசி எண்:
0877-2264543

திருவரங்கம் பெரிய கோயிலே ஆச்ரயணீய ஸ்தலமாக காட்டிக் கொடுக்க ஆழ்வார் இனிதாக அநுபவிக்கிறார்.

மாயன் : சென்ற பாசுரத்தில் எம்பெருமானின் நிலைமை (எளிமை)யையநுபவித்தார் ஆழ்வார். கீழ்வரும் பாசுரத்தால் கார்ய காரணங்களாகவும், ப்ரமான ப்ரமேயங்களாகவும், எல்லாமும் தன்னைச் சேர்ந்த படியாயிருக்கிற எம்பெருமான், புருஷார்த்த பயன் ருசி (விருப்பம்)யில்லாதார்க்கு விருப்பம் தோன்றும்படிச் செய்து இடைக்குலத்தில் வந்தவதரித்தது என்ன ஆச்சர்யம் என்று வியந்து கூறுகிறார்.

*"ஆதியாதியாதி நீயோரண்ட மாதியாதலால்,*
*சோதியா தசோதிநீய துண்மையில் விளங்கினாய்*
*வேதமாகிவேள்வியாகி விண்ணிணோடு*
*மண்ணுமாய்*
*ஆதியாகியாயனாய மாயமென்ன மாயமே."* (34)

*"ஸதே வஸோம்யேதகிர ஆஸித்*
*ஏகமேவாத்விதீயம்"*

என்கிறபடி ஒரு காரியம் செய்ய வேண்டுமென்றால் மூன்று வகையான காரணங்கள் உண்டு. அதாவது உபாதாந (முதற்) காரணம், ஸஹகாரி (துணைக்) காரணம், நிமித்த (காஸிய) காரணம் என்பனவாகும். குடம் செய்ய மண் உபாதாநகாரணம் என்னும் சக்கரம், தடி, நீர் முதலின ஸஹாகாரிகாரணம் என்றும், குயவன், காலம், அத்ருஷ்டம் முதலியன நிமித்த காரணம் என்றும் மூவகை காரணங்கள் உள்ளன.

எம்பெருமான் மூவகைக் காரணமாக விளங்குகிறான். ஆதி என்னும் சொல்லை மும்முறை சொன்னபடியாய் மூவகை காரணமும் எம்பெருமானே என்று உணர முடிகிறது. அண்டங்களில் தனிப்பட்டவனாக அந்தர்யாமியாயிருக்கிறான். எல்லா உலகத்துக்கும் காரண பூதனாகையாலே சோதிக்க (பரிக்ஷிக்க) வேண்டாதபடி ஒளி (தேஜஸ்) மயமாக இருக்கிறான். உண்மையில் அந்த ஒளியானது நித்யமாய், நிர்தோஷ (குறையற்ற) ப்ரமாண சித்தமாய் விளங்குகிறான் எம்பெருமான். வேதத்தினுடைய நித்ய நிர்தோஷத் துக்குத் தலைவனாயிருக்கிறான். யாகத்திற்கும் தலைவனாய், நித்ய விபூதி (பரமபதம்), லீலாவிபூதி (பூமி) ஆகிய இவை இரண்டிற்கும் தலைவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட மேன்மையுடைய எம்பெருமான் இடைச்சாதியிலே வந்தவதரித்த என் மாயமென்னு மாயம் (ஆச்சரியம்) என்று ஆழ்வார் வியந்து எம்பெருமானை அநுபவிக்கிறார்.

ஆயமாயன் என்பதை இடையர் குலத்தில் அவதரித்ததை "ஆயனாகிய மாயன்" என்கிறார். அதாவது தான் நின்ற நிலையிலேயே நின்று அடியார்களை நோக்குவதல்லாமல் தன்னுடைய திவ்ய மங்களத்தைக் காட்டிச் சுலபமாக அவனைப் பற்றுகைக்கு போக்யமாக்கிருக்கிறவன் என்பதாம். இவ்வாறாகத் திருமழிசையாழ்வார் எம்பெருமானின் கல்யாண குணங்களை எவரும் நினைக்க வல்லர் அல்லர் என்கிறார்.

திருமழிசையாழ்வார் திருவடிகளே சரணம்.

**திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி**

## 2020, மார்ச் மாத விழாக்களும், பண்டிகைகளும்

| | |
|---|---|
| 1-10 | தரிகொண்ட ஸ்ரீலக்ஷ்மி நரசிம்ம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 3 | திருக்கச்சி நம்பி சாத்துமுறை |
| 5 | குலசேகராழ்வார் திருநட்சத்திரம் |
| 5-9 | திருமலையப்ப ஸ்வாமி தெப்போத்ஸவம் |
| 9 | குமாரதார தீர்த்த முக்கோட்டி |
| 10 | ஸ்ரீலக்ஷ்மி ஜெயந்தி |
| 19-20 | ஸ்ரீநிவாசமங்காபுரம் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி புஷ்பயாகம் |
| 22-31 | திருப்பதி ஸ்ரீகோதண்டராம ஸ்வாமி பிரம்மோத்ஸவம் |
| 23-27 | நாகுலாபுரம் ஸ்ரீவேத நாராயண ஸ்வாமி ஆலயத்தில் சூரியசேவை |
| 25 | உகாதி-தெலுங்கு வருட பிறப்பு |

# திருமங்கையாழ்வார் போற்றும் திருமலை



கலைமாமணி, முனைவர்
இரா.வ. கமலக்கண்ணன்,
காஞ்சிபுரம், 9976366781

சென்ற இதழ் தொடர்ச்சி...



"குறவர் மாதர்களோடு வண்டு குறிஞ்சி மருளிசை பாடும் வேங்கடத்து
அறவனாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே" –2:1:2

குறப்பெண்களுடன் வண்டுகள் குறிஞ்சி, இந்தளம் என்னும் பண்ணைப்பாடுகிற திருமலையிலுள்ள அறவோனாகிய தலைவனுக்கு என் நெஞ்சே நீ இன்று அடிமைத் தொழில் பூண்டாயே. அப்பெண்களும் வண்டுகளும் இசைபாடி அடிமை செய்வது போல, நெஞ்சே நீயும் அடிமை செய்ய இழிந்தாய் என்கிறார். அறவன் – அறம், தருமம், அடியாரைக்காக்கும் தர்மம் உடையவன்.

"இண்டை ஆயின கொண்டு தொண்டர்கள் ஏத்துவார் உறவோடும் வானிடைக்
கொண்டு போய் இடவும் அது கண்டு என் நெஞ்சம் என்பாய்!
வண்டுவாழ் வடவேங்கடமலை கோயில் கொண்ட தனோடும் மீமிசை
அண்டம் ஆண்டிருப்பாற்கு அடிமைத் தொழில் பூண்டாயே" –2:1:3

"என் நெஞ்சமே! பூமாலைகளை ஏந்திக் கொண்டு போற்றும் அடியவர்களை அவர்களோடு தொடர்புடையவரோடும், திருநாட்டிலே கொண்டு போய் வைக்கவும், அதைக்கண்டு வண்டுகள் களித்து வாழும் திருமலையைக் கோயிலாகக் கொண்டு, அத்திருமலை இருக்கும் இவ்வையகத்தோடு மேல் உலகமாகிய திருநாட்டையும் ஆண்டு கொண்டிருப்பவனுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே!

இவர் அடிமை செய்யாவிட்டால் அவனுக்குக் குறையோ எனின், திருமலையில் வந்து புகுந்து இவரை அடிமை கொள்வதற்கு முன்பு, விண்ணாட்டையும்

76

## சாஸ்த்திர நீதிகள்



அபுக்த்வா ஆமலகம் பத்தியம்
புக்த்வாது பதரீ பலம் |
கபித்தம் சர்வதா பத்யம்
கதளீ ந கதான ச ||

காலையில் வெறும் வயிற்றில் நெல்லிக்காயை சாப்பிடுவதால் வியாதிகள் வராது! எப்போதும் இலந்தைப் பழம் சாப்பிட்டு வந்தால் வியாதிகள் குறையும். விளாம்பழம் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் முக்கியமாகிறது. வாழைப்பழம் ஒருபோதும் பத்தியம் ஆகாதாம்.

தொகுப்பு : திருநாங்கூர் உ.வே. ஸௌந்திரராஜபட்டர், புதுடில்லி.

மண்ணாட்டையும் பெற்று இருப்பதால் வந்த செல்வத்தை ஒன்றாக அவன் நினைக்கவில்லை. ஆழ்வாரைத் தேடிக்கொண்டு இருந்தான்.

*"பாவியாது செய்தாய் என் நெஞ்சமே! பண்டு தொண்டு செய்தாரை மண்மிசை*
*மேவி ஆட் கொண்டு போய் விசும் பேற வைக்கும் எந்தை*
*கோவி நாயகன் கொண்டல் உந்து உயர் வேங்கடமலை யாண்டு வானவர்*
*ஆவியாய் இருப்பாற்கு அடிமைத் தொழில் பூண்டாயே"*
– 2:1:4

"என் நெஞ்சமே! தடுமாறாமல் உறுதி கொண்டாய். முன்பு அடிமை செய்தவர்களை உலகில் பிறந்து அடிமை கொண்டு அழைத்துச் சென்று திருநாட்டிலே இருக்கச் செய்யும் என் தலைவனும், ஆய்ச்சியர்க்கு அன்பனும், மேகங்களைத் தள்ளும்படியான உயர்ந்த திருமலையை அரசாண்டு, ஞானிகளைத் தனக்கு உயிர் நிலையாக உடையவனுமாகிய பெருமானுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே!

வானவர் ஆவி–ஞானிகள்! "ஞானியானவன் எனக்கு உயிரே ஆவான்; இது என் கோட்பாடு" (கீதை 7:18) என்னும் அருள்மொழிப்படி இறைவன் ஞானிகளைத் தனக்கு உயிராய்க் கொண்டிருக்கிறான்.

*"எங்கும் வானவர் தானவர் நிறைந்தேத்தும் வேங்கடம் மேவி நின்றருள்*
*அங்கணாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே"*
–2:1:5

"என் நெஞ்சமே! பௌத்தரும் சமணரும் உலகெங்கும் நிறைந்து கிடக்க, நீ அச்சமயங்களில் புகாமல் தேவரும் அசுரரும் நெருங்கி வந்து துதிக்கின்ற திருமலையில் பொருந்தி இருந்தருள் புரியும் தலைவனுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே!

*"கவரி மாக்கணம் சேரும் வேங்கடம் கோயில் கொண்ட கண்ணார் விசும்பிடை*
*அமர நாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே!*
–2:1:6

எனக்குப்பாங்கான நெஞ்சமே! சமணருடன் சேராமல், கவரிமான்கள் கூட்டமாகச் சேர்ந்திருக்கும் திருமலையைத் தனக்குக் கோயிலாகக் கொண்ட நித்திய சூரிகளுக்குத் தலைவனான பெருமானுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே"

*"மருட்கள் வண்டுகள் பாடும் வேங்கடம் கோயில் கொண்டதனோடும் வானிடை*
*அருக்கன் மேவி நிற்பார்க்கு அடிமைத் தொழில் பூண்டாயே"*
–2:1:7

நெஞ்சமே! சமணருடன் சேராமல் வண்டுகள் மருள், இந்தளம் முதலிய இசைகளைப் பாடுகின்ற திருமலையில் கோயில் கொண்டு சூரியனின் உயிருக்கு உயிராய்ப் பொருந்தி இருப்பவனாகிய பெருமானுக்கு அடிமைத் தொழில் பூண்டாயே! மருட்கள் – மருள், இந்தளம் என்னும் பண்.

*"சேயன் அணியன் சிறியன் பெரியனென்பதும் சிலர் பேசக்கேட்டிருந்தே*
*என் நெஞ்சமென்பாய்! எனக்கு ஒன்று சொல்லாதே*
*வேய்கள் நின்று வெண்முத்தமேசொரி வேங்கடமலை கோயில் மேவிய*
*ஆயர்நாயகற்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே"*
–2:1:8

பரமபத நாதனைத் தொலைவில் உள்ளவன் என்று குற்றம் சொல்லியும், கோயிலில் உள்ள பெருமானை அருகிலிருப்பவன் என்று தள்ளியும், அவதரித்து வந்த கண்ணனை எளிமையைக் காட்டி நீக்கியும், பாற்கடல் நாதனை எட்டாதவன் என்று பெருமை கூறி விடுத்தும் –

இப்படி அறிவற்றார் சிலர் சொல்வதைக் கேட்டிருந்தும் எனக்கு ஒரு பேச்சும் சொல்லாமல், மூங்கில்களிலிருந்து முத்துக்கள் சொரியும் திருமலையைக் கோயிலாகக் கொண்டிருப்பவனாகிய இடையர் தலைவனுக்கு இன்று அடிமைத் தொழில் பூண்டாயே! இங்கு ஆழ்வார் திருமலைப் பெருமான் கண்ணனே! என்று குறிப் பிடுகிறார். முதலாழ்வார்களும் திருமலைப் பெருமாளைக் கண்ணனாகவே கருதிப் பாடியுள்ளனர். (முதல் திருவந்தாதி – 39; மூன்றாம் திருவந்தாதி 32, 68,71,73,89 ஆகிய பாசுரங்களைக் காண்க.)

*"ஆடுதாமரையோனும் ஈசனும் அமரர் கோனும்*
*நின்றேத்தும் வேங்கடத்து*
*ஆடு கூத்தனுக்கு இன்று அடிமைத் தொழில்*
*பூண்டாயே"* –2:1:9

பிரமனும், சிவனும், இந்திரனும் நின்று போற்று கின்ற திருமலையில், கோயில் கொண்டிருக்கும் குடக் கூத்தாடிய பெருமானுக்கு இன்று என் மனமே! அடிமைத் தொழில் பூண்டாயே.

*மின்னுமாமுகில் மேவு தண் திருவேங்கட மலை*
*கோயில் மேவிய*
*அன்னமாய் நிகழ்ந்த அமரர் பெருமானை*
*கன்னி மாமதிள் மங்கையர் கலி கன்றி இன்*
*தமிழாலுரைத்த இம்*
*மன்னுபாடல் வல்லார்க்கு இடமாகும் வானுலகே"*
–2:1:10

மின்னும் மேகங்கள் வந்து சேரும் திருமலையைக் கோயிலாகக் கொண்டு எழுந்தருளியிருக்கும் அன்ன வடிவில் அவதரித்து அமரர்களுக்குத் தலைவனாகிய பெருமாளைக் குறித்துத் திருமங்கை நாட்டுக்குத் தலைவரான ஆழ்வார் இனிய தமிழில் அருளிய இத்திரு மொழியை ஓதவல்லவர்களுக்கு இருப்பிடம் திருநாடாகும்.

(பெருமான் அன்னமாய் அவதரித்துப் பிரமனுக்கு வேதங்களை மீட்டுக் கொடுத்தான் என்பது புராண வரலாறு.)

தொடரும்...


## திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# சிறார் வாக்கு

### குழந்தைகளே ... நீங்கள் எழுதுங்கள் ! பெரியோர்களே ... நீங்கள் ஊக்குவியுங்கள் !!

சிறுவர் சிறுமிகளிடையே நம்முடைய பண்பாட்டின் மீதும், தர்மத்தின் மீதும், புராணத்தின் மீதும், பகவானின் மீதும், பெரியோர்களின் மீதும் ஒரு நல்ல எண்ணம் ஏற்படுவதற்கும், ஆன்மீகச் சிந்தனையை வளர்ப்பதற்கும் சிறார் வாக்கு எனும் தொடர் பிரதி மாதம் ஸப்தகிரி இதழில் மலர்கிறது.

**யாரெல்லாம் எழுதலாம்? என்ன எழுத வேண்டும்?**

பத்தாம் வகுப்பு அல்லது அதைவிடக் குறைந்த வகுப்பில் படிக்கும் மாணவ மாணவிகள் அனைவரும் எழுதலாம். நீங்கள் படித்த கதைகள், நீங்கள் கேட்ட தர்ம நீதிக்கதைகள், ஹரிகதைகள், புராணங்கள், இதிஹாசங்கள், நீதிசதகங்கள் முதலானவற்றில் உள்ள ஆன்மீகக் கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு நீங்கள் கதையாகவோ, கவிதையாகவோ, கட்டுரையாகவோ அல்லது பகவான் மீது உங்களுக்கு எழும் சிந்தனையினையோ எழுதலாம்.

**பெரியோர்கள் செய்ய வேண்டியன...**

குழந்தைகளிடம் நம்முடைய புராண, இதிஹாஸங்கள் மீது நல்அறிவினை வளர்ப்பதற்கு அவர்களுக்குத் தகுந்த அறிவுரைகளை வழங்கி, சிறிய சிறிய ஆன்மீக நூல்களை படிக்குமாறு அவர்களை ஊக்குவித்து எழுத வையுங்கள்.

**நிபந்தனைகள் :**

**படைப்பு இரண்டு பக்கத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். ஒரு வெள்ளைத்தாளில் ஒரு பக்கத்தில் மட்டுமே எழுத வேண்டும். முழு விலாசம், பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன், படைப்பு உங்கள் சொந்தமானது என்னும் உறுதிப்பத்திரத்தில் நீங்கள் பயிலும் பள்ளித் தலைமையாசிரியர் கையொப்பமிட்டு அனுப்ப வேண்டும். நீங்கள் படைப்பினை அனுப்பின பிறகு இறுதி முடிவு பிரதான ஆசிரியருடையதே. படைப்பின் மீது எத்தகைய கடிதப் போக்குவரத்துக்கும் இடமில்லை.**

*படைப்பினை அனுப்ப வேண்டிய முகவரி :*

பிரதான ஆசிரியர், ஸப்தகிரி அலுவலகம், கே.டி. சாலை, தி.தி. தேவஸ்தானம், திருப்பதி–517 507.



# திவ்விய திருத்தலம் — திருமலை



**திருவேங்கடமுடையானுக்கு உத்ஸவங்கள் :**

ஏழுமலையானுக்கு ஆண்டு முழுவதும் நாள்தோறும் ஏதோ ஒரு உத்ஸவம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும். அதனால்தான் திருமலையில் தினமும் திருவிழா கோலம் தான். பலவிதமான சிறப்பு பிரசாதங்களை ஸ்வாமிக்கு நிவேதனமாகப் படைப்பர்.

திருமலையில் 1) நித்யோத்ஸவம், 2) வாரோத்ஸவம், 3) மாதோத்ஸவம், 4) வருடோத்ஸவம் என்று 4 வகையான உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. அவற்றைப் பற்றி அறிந்து கொள்வோம்.

**நித்யோத்ஸவம் :**

நாள்தோறும் காலை முதல் இரவு வரை நடைபெறும் சேவைகளை நித்யோத்ஸவம் என்பர்.

**சுப்ரபாதம் :**

நாள்தோறும் அதிகாலை ஸ்வாமியை துயில் எழுப்பும் சேவையே சுப்ரபாதம். *"கௌசல்யா சுப்ரஜா ராமா..."* என்று சுப்ரபாத சுலோகத்தை அர்ச்சகர்கள் ஓத தங்க வாயிலைத் திறந்து ஸ்வாமியை துயில் எழுப்புவர்.

**தி.தி.தே. குறித்த தகவல்கள் அறிவதற்கு, திருப்பதியில் இரயில் நிலையம், ஆர்.டி.சி. பேருந்து நிலையம், அலிபிரி பேருந்து நிலையம், சத்திரங்கள், அலிபிரி டோல்கேட், ரேணிகுண்ட்டா இரயில் நிலையம் மற்றும் விமான நிலையம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட தி.தி.தே. தகவல் மையங்களை அணுகுங்கள்.**

**தோமாலை சேவை :**

சுப்ரபாத சேவை முடிந்தபின் மூலமூர்த்திக்கும், உத்ஸவ மூர்த்திகளுக்கும் நடைபெறும் புஷ்ப அலங்காரத்தை தோமாலை சேவை என்பர். மணம் மிக்க வண்ண மலர்கள் மற்றும் துளசி மாலைகளால் ஸ்வாமியை அலங்கரிப்பர்.

**கொலுவு :**

நாள்தோறும் தங்க சிம்மாசனத்தில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்து பஞ்சாங்கத்தை ஓதி, முந்தைய நாள் ஆலயத்தின் வரவு செலவு கணக்குகளை ஒப்புவிப்பர்.

**சஹஸ்ரநாம அர்ச்சனை :**

கொலுவுக்குப் பின்னர் ஸ்ரீநிவாச பகவானுக்கு துளசி தளங்களால் சஹஸ்ர நாம அர்ச்சனை நடைபெறும். அதன் பின் ஸ்வாமிக்கு நைவேத்தியம் சமர்ப்பிப்பர்.

**நித்ய கல்யாணோத்ஸவம் :**

ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கு நாள்தோறும் நண்பகல் 12 மணியளவில் கல்யாணோத்ஸவம் நடைபெறும். நாள்தோறும் நடைபெறும் கல்யாணோத்ஸவமே

தெலுங்கு மூலம் : திரு. ஜெ. பாலசுப்பிரமண்யம்
தமிழாக்கம் : திரு. வி. வேங்கடரமணா, 9885701696



திருமலைக்கு "நித்திய கல்யாணம் பச்சை தோரணம்" என புகழைத் தருகிறது.

**டோலோத்ஸவம் :**

ஸ்வாமி ஆலயத்தில் உள்ள கண்ணாடி மண்டபத்தில் நண்பகல் 2 மணிக்கு ஸ்வாமிக்கு டோலோத்ஸவம் நடைபெறும். கட்டணம் செலுத்திய பக்தர்களின் விருப்பத்தின் பேரில் மட்டுமே இவ்வுத்ஸவம் நடைபெறும்.

**ஆர்ஜித பிரம்மோத்ஸவம்-வசந்தோத்ஸவம் :**

ஆலயம் வெளியே உள்ள வைபவ மண்டபத்தில் கட்டணம் செலுத்திய பக்தர்களின் விருப்பத்தின்பேரில் மதியம் 3 மணிக்கு, ஸ்வாமிக்கு ஆர்ஜித பிரம்மோத்ஸவம் மற்றும் வசந்தோத்ஸவத்தை நிகழ்த்துவர்.

**சஹஸ்ர தீப அலங்கார சேவை :**

நாள்தோறும் மாலை 5 மணிக்கு ஆலயத்திற்கு வெளியே உள்ள கொலுவு மண்டபத்தில் ஸ்வாமிக்கு சஹஸ்ர தீப அலங்கார சேவை நடைபெறும்.

இந்த சேவையின் பின்னர் திருமாடவீதிகளில் ஸ்வாமியை எழுந்தருளச் செய்வர்.

**ஏகாந்த சேவை :**

ஸ்வாமி ஆலயத்தில் நாள்தோறும் இரவு கடைசியாக நடைபெறும் பவளிம்பு சேவையே ஏகாந்த சேவை. இச்சேவை நடைபெற்ற பின் ஆலயம் நடை மூடப்படும்.

**வாரோத்ஸவம் :**

ஸ்வாமிக்கு வாரத்திற்கு ஒரு முறை மட்டுமே நடைபெறும் உத்ஸவம் வாரோத்ஸவம்.

**விசேஷ பூஜை :**

ஒவ்வொரு திங்கட்கிழமை அன்றும் காலை 6 மணிக்கு ஸ்ரீதேவி பூதேவியுடன் திருமலையப்ப ஸ்வாமிக்கு விசேஷ பூஜை நடைபெறும்.

**அஷ்டதள பாத பத்மாராதனை :**

ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை அன்றும் காலை 6 மணிக்கு மூலமூர்த்திக்கு தங்க பத்மங்களால் அர்ச்சனை செய்வர்.

**சஹஸ்ர கலசாபிஷேகம் :**

ஒவ்வொரு புதன்கிழமை அன்றும் தங்க வாயிலின் முன்னராக போக ஸ்ரீநிவாச மூர்த்திக்கும், ஸ்ரீதேவி பூதேவி







உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கும், சேனாதிபதி விஷ்வக்சேனருக்கும் இவ்உத்ஸவம் நடைபெறும்.

**திருப்பாவாடை சேவை :**

ஒவ்வொரு வியாழனன்றும் காலை 6 மணிக்கு மூலமூர்த்திக்கு இச்சேவை நடைபெறும். இந்த சேவையில் தங்கவாயிலின் வெளியே ஸ்வாமியின் எதிரே புளியோதரையை ராசியாகக் கொட்டி நிவேதனம் செய்வர்.

**பூலங்கி சேவை :**

மூலமூர்த்திக்கு ஒவ்வொரு வியாழக்கிழமை அன்றும் காலை 8 மணிக்கு புஷ்ப அலங்கார சேவை நடைபெறும். இதுவே பூலங்கி சேவை ஆகும்.

**வெள்ளிக்கிழமை அபிஷேகம் :**

மூலமூர்த்திக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் காலை 5 மணிக்கு பசும்பால், ஆகாச கங்கை தீர்த்தம், புனுகு, சவ்வாது மற்றும் மணம் மிக்க திரவியங்களால் அபிஷேகம் நடைபெறும்.

**நிஜபாத தரிசனம் :**

ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் அபிஷேகத்திற்குப் பின்னர் ஸ்வாமியின் பாதங்களை எவ்வித அலங்காரமுமின்றி நேரடியாகத் தரிசனம் செய்யலாம். இச்சேவையே நிஜபாத தரிசனமாகும்.

**மாதோத்ஸவம் :**

ஸ்வாமிக்கு மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே நடைபெறும் உத்ஸவம் இது. ஒவ்வொரு மாதமும் அந்தந்த நட்சத்திரங்களுக்கேற்ப நடைபெறும். ஆகையால் இதனை நட்சத்திர உத்ஸவம் என்றும் கூறுவர்.

**ரோஹிணி நட்சத்திர உத்ஸவம் :**

ஸ்ரீகிருஷ்ணரின் அவதார நட்சத்திரம் ரோஹிணி. ஒவ்வொரு மாதமும் ரோஹிணி நட்சத்திரம் அன்று ஸ்வாமி ஆலயத்தில் உள்ள ருக்மணி ஸ்ரீகிருஷ்ணருக்கு சஹஸ்ரதீப அலங்கார சேவை, திருமாடவீதிஉலா ஆகியவற்றை நிகழ்த்துவர்.

**திருவாதிரை நட்சத்திர உத்ஸவம் :**

ஸ்ரீராமாநுஜர் பிறந்த நட்சத்திரம் திருவாதிரை. மாதந்தோறும் திருவாதிரை நட்சத்திரம் அன்று மாலை சஹஸ்ர தீப அலங்கார சேவைக்குப் பின் ஸ்வாமிக்கு






அபிமுகமாக ஸ்ரீராமாநுஜரின் உத்ஸவ மூர்த்தியை உலா வரச் செய்வர்.

**புனர்பூச நட்சத்திர உத்ஸவம் :**

ஸ்ரீராமரின் அவதார நட்சத்திரம் புனர்பூசம். மாதந்தோறும் புனர்பூச நட்சத்திரத்தன்று மாலை ஸ்வாமி ஆலயத்தில் உள்ள ஸ்ரீசீதாராம லக்ஷ்மணருடன் ஆஞ்சநேய ஸ்வாமிக்கு சஹஸ்ர தீப அலங்கார சேவை நடைபெற்ற பின்னர் திருவீதிஉலா நடைபெறும்.

**திருவோண நட்சத்திர உத்ஸவம் :**

திருவேங்கடமுடையான் அவதரித்த நட்சத்திரம் திருவோணம். மாதந்தோறும் இந்த நட்சத்திரத்தன்று ஸ்ரீதேவி பூதேவி உடனுறை திருமலையப்ப ஸ்வாமிக்கு சஹஸ்ர தீப அலங்கார சேவைக்குப் பின் திருவீதி உலா நிகழ்த்துவர். ஆனால் கன்ய மாதங்களில் (செப்டம்பர் – அக்டோபர்) மாதங்களில் வரும் திருவோண நட்சத்திரத்திற்கு முன் பத்து நாட்கள் ஸ்வாமிக்கு பிரம்மோத்ஸவத்தை நிகழ்த்துவர்.

**பௌர்ணமி கருட சேவை :**

மாதந்தோறும் பௌர்ணமி அன்று இரவு 7 மணிக்கு ஸ்வாமிக்கு தங்க கருடோத்ஸவம் நிகழ்த்துவர். இவ்வகையில் மாதந்தோறும் நிகழ்த்தும் உத்ஸவமே மாதோத்ஸவமாகும்.

திருமலை வைபவம் தொடரும்...



# ஸம்ஸ்க்ருதம் அறிவோம்

## பாடம் – 1

### स्वरवर्ण : (உயிர் எழுத்துக்கள்)


| | | | | |
|---|---|---|---|---|
| अ | आ | इ | ई | उ |
| அ | ஆ | இ | ஈ | உ |
| ऊ | ऋ | ॠ | ऌ | ए |
| ஊ | ரு | ரூ | லு | ஏ |
| ऐ | ओ | औ | अं | अः |
| ஐ | ஓ | ஔ | அம் | அஹ |

– திரு. உ.வே. பி.டி. சேஷாத்திரி,
சென்னை, 99404 28830

மேலும் வளரும்...

### व्यंजनवर्ण :(மெய் எழுத்துக்கள்)

| | | | | |
|---|---|---|---|---|
| क | ख | ग | घ | ङ |
| க | க$_2$ | க$_3$ | க$_4$ | ங |
| च | छ | ज | झ | ञ |
| ச | ச$_2$ | ச$_3$ | ச$_4$ | ஞ |
| ट | ठ | ड | ढ | ण |
| ட | ட$_2$ | ட$_3$ | ட$_4$ | ண |
| त | थ | द | ध | न |
| த | த$_2$ | த$_3$ | த$_4$ | ந |
| प | फ | ब | भ | म |
| ப | ப$_2$ | ப$_3$ | ப$_4$ | ம |
| य | र | ल | व | श |
| ய | ர | ல | வ | ச’ |
| ष | स | ह | ळ | क्ष |
| ஷ | ஸ | ஹ | ள | க்ஷ |



அன்றாட வாழ்வுக்கு ஆழ்வார்களின் அருளிச்செயல்

1

# நாமத்தின் மகிமை

சாஸ்திரங்களை நற்கலைகள் என்பர். இந்தச் சாஸ்திரங் களை ஸ்ருதி என்றும், ஸ்மிருதிகள் என்றும் கூறு வார்கள். ஆழ்வார்கள் ஸ்ருதி என்றும் ஸ்மிருதிகள் காட்டும் சாத்திர உண்மைகளை மிக எளிமையாகத் தங்கள் பாசுரங்களில் அருளிச் செய்திருக்கிறார்கள்.

அன்றாட வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளை ஆழ்வார்கள் தங்கள் பாசுரங் களில் அருளிச் செய்திருக்கிறார்கள். இப்பாசுரங்களை நாம் கற்றுத் தெரிந்து கொண்டு விட்டால் அதனைக் கடைப்பிடித்து மிகப் பெரிய உன்னதத்தை அடையலாம் என்கிற நோக்கத்தில் இக்கட்டுரைத் தொடர் துவங்கப் படுகிறது. பெறற்கரிய பிறவியான மனிதப் பிறவியில் பிறந்திருக்கிறோம். இந்த அரிய வாய்ப்பு நமக்கு கிடைத்திருக்கிறது. ஆனால் இந்தப் பிறவியை நாம் சரியாக பயன்படுத்திக் கொள்ளுகிறோமா என்பது சிந்திக்கத்தக்கது.

திருமங்கையாழ்வார் ''அந்தோ மானிடப் பிறவியை மதிக்கவில்லையே'' என்று பாடுகிறார். நாம் இங்கே பலப்பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால், அவைகள் எல்லாம் சரியான காரியங்கள் தானா? வாழும் போதும், வாழ்ந்து முடித்த பிறகும், நமக்கும் பிறர்க்கும் நன்மைகள் செய்கின்ற காரியங்கள் தானா என்பதை எதை வைத்து கொண்டு ஆராய்வது? சாத்திரங்களை வைத்துக் கொண்டுதான் ஆராய வேண்டும்.

பிறவியிலேயே மிக உயர்ந்த பிறவி மனிதப்பிறவி. அரிது அரிது மானிடராதல் அரிது என்று ஆன்றோர்கள் மனிதப் பிறவியின் பெருமையைப் பேசியிருக்கின்றார்கள். காரணம், இந்த மனிதப்பிறவி தப்பினால் கிடைப்பது அரிது. மனிதப் பிறவி ஒருவனுக்கு மிகப் பெரிய புகழையும், பெருமையையும், புண்ணியத் தையும், பிறவி இல்லாத பேரின்ப நிலையையும் (வீடு பேறு) தரவல்லது.

இப்பெருமை மற்ற பிறவிகளுக்குக் கிடையாது. ஏன் தேவர்களுக்கே கிடையாது. பல்வேறு உயர்ந்த நிலை களை அவர்கள் அடைந்தாலும், வீடுபேறு அடைய முடி யாது. வீடு பேறு மனிதப் பிறவிக்கே உரியது என்கின்றார் நம்மாழ்வார். ''வைகுந்தம் புகுவது மண்ணவர் விதியே'' என்பது அவர் வாக்கு.

எனவே, படிப்படியாக ஒருவன் பலப்பலப் புண்ணியங்கள் செய்து அடைந்த மனிதப் பிறவியை முறையாக வாழ வேண்டும். சாத்திர நெறி கொண்டு வாழ்ந்து பிறவியின் முடிவிலே புகழை அடைய வேண்டும். இந்த உயர்ந்த நோக்கத்திற்காகத்தான் வாழும் வகையை வகுத்தும் தொகுத்தும் கொடுத்து வழிகாட்டியாக விளங்குகின்றது சாஸ்திரங்கள்.

பேராசிரியர் எஸ். கோகுலாச்சாரி,
புவனகிரி, 94434 39963



ஓம் சதாவாயு-ஸ்துதாய நம:

- ➪ ஸ்வாமி பிரசாதத்தை வீணாக்காதீர்.
- ➪ புஷ்கரணியில் ஷாம்பு, சோப்பு உபயோகப் படுத்தாதீர்.
- ➪ பிளாஸ்டிக் பொருட்களை உபயோகப்படுத்தாதீர்.
- ➪ திறந்த வெளியில் துப்புதல் போன்ற அருவருப்பான செயல்களை செய்யாதீர்.
- ➪ க்யூ வரிசையில் மற்றவரை முந்திக்கொண்டும், நெருக்கிக் கொண்டும் செல்லாதீர்.

*''மம தர்மே மதிம் குர்யா: அதர்மாந் மாம் நிவர்தய லோகோ(அ) யமனுகூலே மே பவேத் த்வத்க்ருபையா ப்ரபோ''*

என்பது சாத்திர வசனம்.

"ப்ரபோ! அடியேன் வாழ்க்கை எப்பொழுதுமே தர்மத்தின் வழியில் இருக்கும்படியாக செலுத்துவாய். அதர்மம் செய்யாமல் என்னைக் காப்பாற்றுவாய். அறநெறி காட்டும் வழியில் செல்லுகின்ற எனக்கு உன்னுடைய கருணையினால் இந்த உலகமானது அனுகூலமாக விளங்கட்டும்"

ஒருவன் வாழ்க்கைச் சூழல்தான் அவன் வாழும் வாழ்க்கையை இன்பமயமாக்குகிறது. எல்லோரும் தர்ம நெறிப்படி வாழ்ந்து விட்டால் இந்த உலகமானது சொர்க்க பூமியாக இருக்கும். சொர்க்கமோ, நரகமோ பூமியின் புறச்சூழலில் இல்லை. எண்ணத்தில் உள்ளது.

நாம் வாழும் வாழ்க்கை நரகமாகவோ, சொர்க்க மாகவோ மாற்றும் வல்லமை நாம் கடைபிடிக்கும் வாழ்க்கை அமைப்பில்தான் அடங்கியுள்ளது. இதை ஒரு அழகான கதை மூலம் தொண்டரடிப்பொடியாழ்வார் நமக்குக் காட்டுகின்றார்.

*''நமனும் முற்கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க நரகமே சுவர்க்கமாகும் நாமங்கள் உடைய நம்பி''*

முன்காலத்தில் முற்கலன் என்று ஒரு பாவி இருந் தான். அவன் தர்மத்திற்கு மாறுபட்ட காரியங்களைச் செய்தான். அதனால் மிகவும் சிரமப்பட்டுக் கடைசியில் காலகதி அடைந்தான். ஆனால், அதற்கு முன் யாரோ சொன்னார்கள் என்று, ஒரு முறை, எள்ளினால் பசுவாக உருவம் செய்து, கிருஷ்ணார்ப்பணம் என்று சொல்லி தானம் செய்தான். யம தூதர்கள் காலகதி அடைந்த அவனை நரகத்திற்குக் கட்டிச் சென்ற போது யமன் எதிர் கொண்டழைத்தானாம்.

"பாவியான என்னை நீ இப்படி உபசரிக்க என்ன காரணம்?" என்று கேட்க, யமன் சொன்னான். "நீ ஒரு முறை பகவான் நாமத்தைச் சொன்னாய். அதனால் இந்த வரவேற்பு"

நரகத்தில் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தவர் கள், யமன் இப்படி பகவான் திருநாம சிறப்பைச் சொல்ல, தங்கள் துன்பம் நீங்கி சந்தோஷம் அடைந்தார்கள்.

ஒரு நாமத்தினால் நரகமே சொர்க்கமாக மாறியது. நரகம் என்கிற இடம் மாறவில்லை. அதே நேரத்தில் இறைவனுடைய திருநாமத்தைப் பாடியதால் அந்த இடமே சொர்க்கமாக மாறியது என்பது இதன் தத்துவம்.

திருநாமசங்கீர்த்தனமும் ஒரு தர்மமே. அதனால் உய்வதற்கு ஒரு வழியாக பகவானைப்பாடு என்று பல முறை ஆண்டாள் நாச்சியார் பாடுகின்றார். ஒவ் வொருவரும் தர்மத்தை அனுசரிக்க வேண்டும். இந்த உலகம் தர்மத்தின் வழியில் தான் சென்று கொண்டிருக் கின்றது.

பெரியவர்கள் சொல்வார்கள். *''நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை''* ஒரே ஒரு நல்லவன் இருந்தாலே, இந்த உலகம் மிகுந்த இன்பம் உடையதாக மாறி விடுகிறது. பருவ காலங்கள் சரியாக நடக்கின்றன என்று சொன்னால், எல்லோருமே தர்ம வழியை அனுசரித்தால், இந்த உலகம் எப்படி இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

தர்ம வழியில் நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு நாம் என்னவெல்லாம் செய்ய வேண்டும்? ஆழ்வார்கள் இதற்கு எப்படி வழி காட்டித் தந்து இருக்கிறார்கள் என்பதைப் பற்றி நாம் அடுத்தடுத்த மாதங்களில் தொடர்ந்து சிந்திப்போம்.

அருளிச்செயல் தொடரும்...

## ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ஸப்தகிரி எழுத்தாளர்களுக்கு அளிக்கும் சம்பாவணையை தங்கள் வங்கிக் கணக்கில் செலுத்த தி.தி.தே. முடிவு எடுத்துள்ளது.ஸப்தகிரி எழுத்தாளர்கள் தங்களுடைய கட்டுரையுடன் வங்கி புத்தகத்தின் முதல் பக்கம் மற்றும் வங்கியின் விவரங்களை (Your Bank A/c No., Bank Name with IFSC Code No.) இணைத்து அனுப்புதல் வேண்டும். தவறினால் உங்கள் கட்டுரை அச்சிட இயலாது.

– பிராதன ஆசிரியர்

# ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமி திருக்கோயில் ஸ்ரீநிவாஸ மங்காபுரம்

இத்திருத்தலம் திருப்பதியிலிருந்து சுமார் பத்து கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. திருப்பதி–மதனபள்ளி பிரதான சாலையை ஒட்டியுள்ள இக் கிராமம் ஒரு காலத்தில் மிக பிரசித்தமான தலமாக விளங்கியது. இதற்கு சித்தர் கூடம், ஸ்ரீநிவாசபுரம், அலமேலு மங்காபுரம் என பல பெயர்கள் உண்டு. 19ஆம் நூற்றாண்டில் தரிகொண்ட வெங்கமாம்பா காலத்தின் கல்வெட்டின்படி அடர்ந்த காடுகளுக்கிடையே பிரதான தலமாக இது விளங்கியது. ஸ்வர்ண முகி நதியின் கிளை நதியான கல்யாணி நதிக்கரையில் இக்கிராமம் அமைந்து உள்ளது.

**தல புராணம் :**

ஸ்வர்ணமுகி நதிக்கரையில் தற்போது ஸ்ரீநிவாச மங்காபுரம் என வழங்கப்பெறும் இத்திருத்தலத்தில் அகஸ்திய முனிவர் ஒரு ஆசிரமம் அமைத்து தங்கியிருந்தார். நாராயண வனத்தில் திருக்கல்யாணம் முடிந்த பின்னர் ஸ்ரீநிவாசப் பெருமானும், ஸ்ரீபத்மாவதி தேவியும் கல்யாணத் திருக்கோலத்தில் மஞ்சள் வஸ்திரத்துடன் அகஸ்திய முனிவரிடம் ஆசி பெற வந்தார்கள். புது மணத்தம்பதிகளை ஆசிர்வதித்த முனிவர், புதுமணத் தம்பதியர் ஆறு மாத காலத்திற்கு திருமலைக்குச் செல்ல வேண்டாமென்றும், ஆறு மாத காலம் இத்திருத்தலத்திலேயே தங்கியிருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ள எம்பெருமானும் சம்மதித்தார்.

இங்கிருந்து "ஸ்ரீவாரி மெட்டு" வழியாக திருமலைக்குச் செல்வது எளிதான வழி.

அகஸ்திய முனிவரின் யோசனைப் படி ஆறுமாத காலத்திற்குப் பின்னர் தம்பதியர் இருவரும் ஸ்ரீவாரி மெட்டு வழியாக திருமலைக்கு நடந்துச் சென்றனர். திருவேங்கடமுடையானோடு தாயாரின் திருப்பாதங்களும் பட்ட ஸ்ரீவாரி மெட்டு வழியும் மிகவும் புனிதத் தன்மை வாய்ந்த தாயிற்று.

இக்கோயிலுக்கு வடக்கே ஆறு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் இந்த வழியை "ஸ்ரீவாரி மெட்டு" என்றும், "ஸ்ரீபதி மெட்டு" என்றும் அழைக்கலாயினர். இந்த வழியையே, சந்தரகிரி மன்னர்கள் உபயோகித்த காரணத்தால் "சந்தரகிரி சோபான மார்க்கம்" என்றும் கூறுவர். சாக்ஷாத் திவ்ய தம்பதியான ஸ்ரீநிவாசப் பெருமானும், ஸ்ரீபத்மாவதி தாயாரும் நடந்து சென்ற இந்த ஸ்ரீவாரி மெட்டு வழியையே புனிதமானதாகக் கருதி இக் காலத்திலும் பக்தர்கள் இந்த வழியாக திருமலைக்கு நடந்துச் செல்வதையே பாக்யமாக எண்ணுகிறார்கள். ஆகாசராஜனும், தொண்டைமான் சக்கரவர்த்தியும், சந்தரகிரி மன்னர்களும், விஜய நகரப் பேரரசர்களும் ஸ்ரீநிவாசப் பெருமாளைத் தரிசிக்க உபயோகித்த இந்த ஸ்ரீவாரிமெட்டு வழியாக நேத்ரகிரி கோட்டையிலிருந்து, திருமலை வரை வழியெங்கும் பெரிய மணிகள் கட்டப்பட்டு காலையும், இரவும் ஸ்ரீநிவாசப் பெருமானுக்கு நைவேத்தியம் நடைபெறும் வேளையில் இந்த பெரிய மணிகள் அடுத்தடுத்து ஒலிக்கும் மணி யோசையை கேட்ட பின்னரே அரச குலத்தவர் உணவு உட்கொள்வது அவர்கள் காலத்தில் வழக்கமாக இருந்து வந்தது. அதற்கு வழி காட்டியது இந்த "ஸ்ரீவாரி மெட்டு" பாதை தான் என்பதில் சந்தேகமே



திருமலை திருப்பதி தேவஸ்தானம்

## தலைக்கவசம்! உயிர் கவசம்!!



திருப்பதி – திருமலை மலைவழிச்சாலையில் இருசக்கர வாகங்களில் பயணம் செய்யும் பக்தர்கள் மலையை ஏறும் போதும், இறங்கும் போதும் தலைக்கவசம் (ஹெல்மெட்) அணிதல் அவசியமாகும்.

**வாகனம் மலைவழிச் சாலையில் ஏறும் பொழுது 28 நிமிடமும் மலைவழிச் சாலையில் இறங்கும் பொழுது 40 நிமிடத்திற்கு முன்னதாக சென்றால் மீண்டும் மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படமாட்டாது.**

**வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஓட்டுனர் உரிமம் இருந்தால் மட்டுமே மலைவழிச் சாலையில் செல்ல அனுமதிக்கப்படும்.**

– கண்காணிப்பு மற்றும் பாதுகாப்புத் துறை

இல்லை. தொடர்ஆண்டு 1433ல் இந்த ஆலயம் மிக உயர்ந்த நிலையில் இருந்ததாக 22–11–1433 அன்றைய கல்வெட்டு கூறுகின்றது. சுமார் 100 வருடங்களுக்குப் பிறகு சிதிலமடைந்த இக்கிராமத்தை 1540 ஆம் வருடம் செப்பனிட்டு விஜய நகர மன்னரான அச்சுத தேவராயர் ஒரு அக்ரஹாரம் ஏற்படுத்தி, தாளப்பாக்கத்தைச் சேர்ந்த கவிஞர்களுக்கு மான்யமாக அளித்தார்.

தாளப்பாக்க அன்னமாசார்யாரின் பேரனான திரு சின்ன வெண்கலநாதன் சிதைந்து போன விக்ரகங்களுக்குப் பதிலாக ஆகம சாஸ்திரப்படி புதிய விக்ரகங்களைப் பிரதிஷ்டை பண்ணி, நித்ய பூஜைகள், நிவேதனங்கள் நடைபெறும்படி செய்தார். ஒரு சமயம் கல்யாணி நதியில் ஏற்பட்ட பெரும் வெள்ளப்பெருக்குக் காரணமாக இக்கோயில் மறுமுறையும் சிதிலமடைந்தது. விக்ரகங்கள் அனைத்தும் வெள்ள நீரில் மூழ்கிப் போக, 10 அடி உயரமுள்ள ஸ்ரீகல்யாண வேங்கடேசரின் விக்ரகம் மட்டும் முட்புதர்களுக்கிடையே பாதுகாப்பாக இருந்தது.

தொடர் ஆண்டு 1906இல் இத்திருத்தலத்திற்கு வெர்ரி பாகுளம்மா என்கிற ஒரு பெண்மணி வந்தாள். அவள் அந்த கிராமத்திலிருக்கும் வீடுகளுக்குச் சென்று அரிசி, பருப்பு, எண்ணெயை கொண்டு அகல் விளக்கு ஏற்றி அந்த ஸ்ரீநிவாச மூர்த்திக்கு நிவேதனம் செய்து, மற்றவர்களுக்கும் கொடுத்து மிகுந்ததை தானும் உண்டாள். சிதிலமைடந்த அந்த கோயிலே அவளது வாஸஸ்தலம். ஒரு நாள் திடீரென ஊரிலுள்ளவர்களை அழைத்து “இனி தன்னை இந்த ஊரில் காண முடியாது என்றும், கோயிலை நிர்வகிக்க ஒரு பிராம்மணர் வருவார்” என்றும் கூறி விட்டு சென்றார்.

அடுத்த நாளே காஞ்சிபுரத்தில் இருந்து சுந்தராஜ ஸ்வாமி, இக்கோயிலுக்கு வந்தார். இவ்வூர் மக்களிடையே தனது கனவில் இந்த எம்பெருமான் வந்து, தான் முட்புதருக்கு நடுவே இருப்பதாகவும், தனக்கு முறைப்படி பூஜைகள் செய்யுமாறு அருள் வாக்கு அளிக்க, தான் இங்கு வந்ததாகக் கூறினார். சுமார் நூறு வருடங்களுக்குப் பிறகு விக்ரம ஆண்டு ஆடி மாதம், சுக்லபக்ஷ



## ஸ்ரீமத்பாகவதம் வினாக்கள்

விடைகளுக்கு 34ம் பக்கம் பார்க்கவும்

1. பாகவதம் யாரால் இயற்றப்பட்டது?
2. பாகவதம் எந்த நதிக்கரையில் இயற்றப்பட்டது?
3. வியாசர் பாகவதத்தை யாருக்கு முதலில் உபதேசம் செய்தார?
4. சுகமுனி பாகவதத்தை விரிவாக யாருக்கு உபதேசம் செய்தார்?
5. உத்ரேயின் கர்ப்பத்தில் இருந்த சிசு யார்? அந்த சிசுவை கர்ப்பத்தில் இருந்த போது காப்பாற்றியவர் யார்?
6. பரிக்ஷித் ராஜா எந்த முனிவரின் ஆசிரமத்திற்குச் சென்றார். தன் கோபத்தால் செய்த காரியம் யாது?
7. பாகவதம் எத்தனை அத்தியாயம் கொண்டது?
8. தன் ஆயுட்காலம் ஒரு முகூர்த்த காலம் என்று அறிந்து கடவுளை தியானித்து முக்தி அடைந்தவர் யார்?
9. உத்தவரின் பிரார்த்தனைபடி மைத்ரேயர் பாகவதத்தை எந்த இடத்தில் உபதேசம் செய்தார்?
10. பிரம்ம தேவர் பரமாத்மாவின் ஆணைபடி சிருஷ்டித்த நான்கு மானஸ புத்திரர்கள் யார்?

திருமதி. என். ஹேமா, திருப்பதி,
90945 68800



சப்தமியில், உத்திர நட்சத்திரம் கூடிய சுப தினத்தில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமிக்கு ஆகமப்படி பூஜைகள் ஆரம்பமாகியது. 11–7–1940லிருந்து ஒவ்வொரு வருடமும், இன்று வரை அந்த நன்னாள் கொண்டாடப்படுகிறது.

அதன் பின்பு 1980ல் திருமலை திருப்பதி தேவஸ்தானம் இந்த ஆலயத்தைத் தங்கள் பொறுப்பில் ஏற்றுக் கொண்ட பிறகும், இந்த உற்சவம் அதே நாளில் மூன்று நாள் உற்சவமாக ஸ்ரீவைகானச ஆகமப்படி சாக்ஷாத்கார வைபவ உத்ஸவமாக நடத்தப்பட்டு வருகின்றது.

## ஆலய நிர்மாணம் :

தொடர் ஆண்டு 1980–ல் திருமலை திருப்பதி தேவஸ்தானத்தின் மேற்பார்வையில் இந்த ஆலயம் வந்த பிறகு 10 அடி உயரமுள்ள ராஜகோபுரம், பலிபீடம், துவஜஸ்தம்பம் ஆகியவை ஏற்படுத்தப்பட்டது. சுற்றிலும் நான்கு பிராகாரங்களோடு, 10 அடி உயரத்தில் பெரிய மண்டபத்தில் ஸ்ரீகல்யாண வேங்கடேஸ்வர ஸ்வாமியின் சன்னிதி நிர்மாணிக்கப்பட்டது. இந்த ஆலயம் முக மண்டபம் (மணி மண்டபம்), அர்த்த மண்டபம், சயன மண்டபம், அந்தராளம், கர்ப்பாலயம் என விரிவுப்படுத்தப் பட்டது. இந்த ஆலய பிராகாரத்தின் தென்மேற்கில் எம்பெருமானுக்கு கல்யாண மண்டபமும் ஏற்படுத்தப் பட்டு, கல்யாண உற்சவமும் நடைபெறத் தொடங்கியது. அந்தராளத்தில் தெற்கு பக்கம் உள்ள சுவருக்கு அருகே, வடபகுதியில் ஸ்ரீலக்ஷ்மி நாராயண ஸ்வாமி விக்ரகம் உள்ளது.

| | |
|---|---|
| ஆதாரம் | : நித்திய கல்யாண புரம் ஸ்ரீநிவாசமங்காபுரம் (தெலுங்கு) |
| தமிழாக்கம் | : திருமதி டி.கே. லக்ஷ்மி கிருஷ்ணஸ்வாமி, திருப்பதி. 9440120758 |

ஸ்ரீரங்கநாதப் பெருமாள் கொலுவிருக்கும் விக்ரகமும் உள்ளது. அந்தராளம் முடிந்து குலசேகரப்படி தாண்டியதும் ஸ்ரீகல்யாண வேங்கடவனின் மூலஸ்தானம் உள்ளது. மூலமூர்த்தி நான்கு திருக்கரங்களுடன், மேல் இரண்டு கரங்களில் சங்கு, சக்கரமும், வலது திருக்கரத்தால் தனது திருப்பாதங்களைக் காட்டிக் கொண்டு, இடது திருக்கரத்தை முழங்காலில் ஊன்றிக் கொண்டு, திருமலையில் திருவேங்கடத்து எம்பெருமான் நின்ற கோலத்தில் சேவை தருவது போலவே தரிசனம் தருகிறார். ஆகவே தான் இவரை ஸ்ரீநிவாசப் பெருமானின் பிரதிவடிவம் என்கிறோம்.

## உற்சவங்கள், சேவைகள் :

நித்யோத்ஸவத்தில் சுப்ரபாதம், தோமாலை சேவை, சஹஸ்ரநாம அர்ச்சனை, நித்ய கல்யாணோத்ஸவம், ஆர்ஜித பிரம்மோத்ஸவம் ஆகியவை நடைபெறுகின்றன. இந்த ஆர்ஜித பிரம்மோத்ஸவத்தில் கருட சேவை, அனுமன் வாகனம், குதிரை வாகனம் மட்டுமே நடந்தப் படுகின்றன. முடிவாக இரவில் ஏகாந்த சேவையும் நடைபெறுகிறது.

வாரோத்ஸவத்தில் ஸ்வர்ணபுஷ்ப அர்ச்சனை, சஹஸ்ர கலசாபிஷேகம், திருப்பாவாடை சேவை, நேத்ர தரிசனம், பூலங்கி சேவை, அபிஷேகம், வஸ்த்ராலங்கார சேவை போன்றவை நடைபெறுகின்றன. மாஸோத்ஸவத்தில் திருவோண நட்சத்திரத்தின்போது மட்டும் ஊஞ்சல் சேவை நடைபெறுகிறது. வருடோத்ஸவத்தில் யுகாதி ஆஸ்தானம், ஸ்ரீராம நவமி, தனுர்மாத பூஜை, மாசி மாதத்தில் பிரம்மோத்ஸவம், ஆடிமாதம், சுக்ல பக்ஷ சப்தமியில் உத்திர நட்சத்திரத்தில் மூன்று நாள் வைபவமாக சாக்ஷாத்கார வைபவ உத்ஸவம் நடைபெறுகிறது. தக்ஷிணாயண புண்யகாலத்திற்கு முன்பாக ஆனிவர ஆஸ்தானம், ஐப்பசி மாதம் வளர்பிறை ஏகாதசி தொடங்கி பவித்ரோத்ஸவம் ஆகிய உற்சவங்களும் விமரிசையாக நடைபெற்று வருகிறது.

## வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு (2020 ஜனவரி 06) திருவேங்கடமுடையான் ஆலய அலங்காரம், தங்கத்திருத்தேர் திருக்காட்சிகள்









பக்தர்களுக்கு வைகுண்ட ஏகாதசி நல்வாழ்த்துக்களை தெரிவிக்கும் தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு.ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள்



ஸ்வாமி புஷ்கரணியில் சக்கரஸ்நானம்

திருமலை திருப்பதி தேவஸ்தானம்
ஸப்தகிரி
சமய மாத இதழ்
பிப்ரவரி 2020



# சூர்ய அஷ்டோத்திர சதநாமாவளி

ஓம் அருணாய நம:
ஓம் சரண்யாய நம:
ஓம் கருணாரசசிந்தவே நம:
ஓம் அசமானபலாய நம:
ஓம் ஆர்தரக்ஷகாய நம:
ஓம் ஆதித்யாய நம:
ஓம் ஆதிபூதாய நம:
ஓம் அகிலாகமவேதினே நம:
ஓம் அச்யுதாய நம:
ஓம் அகிலக்ஞாய நம: 10
ஓம் அநந்தாய நம:
ஓம் இனாய நம:
ஓம் விஷ்வரூபாய நம:
ஓம் இஜ்யாய நம:
ஓம் இந்த்ராய நம:
ஓம் பானவே நம:
ஓம் இந்திராமந்திராப்தாய நம:
ஓம் வந்தநீயாய நம:
ஓம் ஈஸாய நம:
ஓம் சுப்ரஸன்னாய நம: 20
ஓம் சுசீலாய நம:
ஓம் சுவர்சஸே நம:
ஓம் வசுப்ரதாய நம:
ஓம் வசவே நம:
ஓம் வாசுதேவாய நம:
ஓம் உஜ்ஜ்வலாய நம:
ஓம் உக்ரரூபாய நம:
ஓம் ஊர்த்வகாய நம:
ஓம் விவஸ்வதே நம:
ஓம் உத்யத்கிரணஜாலாய நம: 30
ஓம் ஹ்ருஷீகேஷாய நம:
ஓம் ஊர்ஜஸ்வலாய நம:
ஓம் வீராய நம:
ஓம் நிர்ஜராய நம:
ஓம் ஜயாய நம:
ஓம் ஊருத்வயாபாவரூபயுக்த
சாரதயே நம:

ஓம் ருஷிவந்த்யாய நம:
ஓம் ருக்கந்த்ரே நம:
ஓம் ருஷிசக்ரசராய நம:
ஓம் ருஜுஸ்வபாவசித்தாய நம: 40
ஓம் நித்யஸ்துத்யாய நம:
ஓம் ரூகாரமாத்ருகாவர்ணரூபாய நம:
ஓம் உஜ்ஜ்வலதேஜஸே நம:
ஓம் ருக்ஷாதிநாதமித்ராய நம:
ஓம் புஷ்கராக்ஷாய நம:
ஓம் லுப்ததந்தாய நம:
ஓம் சாந்தாய நம:
ஓம் காந்திதாய நம:
ஓம் கனாய நம:
ஓம் கனத்கநகபூஷாய நம: 50
ஓம் கத்யோதாய நம:
ஓம் லூநிதாகிலதைத்யாய நம:
ஓம் சத்யாநந்தஸ்வரூபிணே நம:
ஓம் அபவர்கப்ரதாய நம:
ஓம் ஆர்தசரண்யாய நம:
ஓம் ஏகாகினே நம:
ஓம் பகவதே நம:
ஓம் ஸ்ருஷ்டிஸ்தித்யந்தகாரிணே நம:
ஓம் குணாத்மனே நம:
ஓம் க்ருணிப்ருதே நம: 60
ஓம் ப்ருஹதே நம:
ஓம் ப்ரஹ்மணே நம:
ஓம் ஐஸ்வர்யதாய நம:
ஓம் ஸர்வாய நம:
ஓம் ஹரிதஸ்வாய நம:
ஓம் ஸௌரயே நம:
ஓம் தசதிக்ஸம்ப்ரகாஸாய நம:
ஓம் பக்தவஸ்யாய நம:
ஓம் ஓஜஸ்கராய நம:
ஓம் ஜயினே நம: 70
ஓம் ஜகதாநந்தஹேதவே நம:
ஓம் ஜன்மம்ருத்யுஜராவ்யாதி
வர்ஜிதாய நம:

ஓம் ஔனத்யபாதசன்சார
ரதஸ்தாய நம:
ஓம் அசுராரயே நம:
ஓம் கமனீயகராய நம:
ஓம் அப்ஜவல்லபாயா நம:
ஓம் அன்தர்பஹி:ப்ரகாஸாய நம:
ஓம் அசிந்த்யாய நம:
ஓம் ஆத்மரூபிணே நம:
ஓம் அச்யுதாய நம: 80
ஓம் அமரேஸாய நம:
ஓம் பரஸ்மைஜ்யோதிஸே நம:
ஓம் அஹஸ்கராய நம:
ஓம் ரவயே நம:
ஓம் ஹரயே நம:
ஓம் பரமாத்மநே நம:
ஓம் தருணாய நம:
ஓம் வரேண்யாய நம:
ஓம் க்ரஹாணாம்பதயே நம:
ஓம் பாஸ்கராய நம: 90
ஓம் ஆதிமத்யாந்தரஹிதாய நம:
ஓம் ஸௌக்யப்ரதாய நம:
ஓம் சகலஜகதாம்பதயே நம:
ஓம் சூர்யாய நம:
ஓம் கவயே நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் பரேஸாய நம:
ஓம் தேஜோரூபாய நம:
ஓம் ஸ்ரீம் ஹிரண்யகர்பாய நம:
ஓம் ஹ்ரீம் ஸம்பத்கராய நம: 100
ஓம் ஐம் இஸ்டார்ததாய நம:
ஓம் ப்ரஸன்னாய நம:
ஓம் ஸ்ரீமதே நம:
ஓம் ஸ்ரேயஸே நம:
ஓம் பக்தகோடிஸௌக்ய
ப்ரதாயினே நம:
ஓம் நிகிலாகமவேத்யாய நம:
ஓம் நித்யாநந்தாய நம:
ஓம் சாயாஉஷாதேவீ சமேத
ஸ்ரீசூர்யநாராயண
ஸ்வாமினே நம:




திருவேங்கடமுடையான் ஆலயத்தில் (25 நாட்கள்) நடைபெற்ற அத்யயனோத்ஸவ திருக்காட்சிகள்




திருவேங்கடமுடையான் ஆலயத்தில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு
தி.தி.தே. நிர்வகித்த கோயில் ஆழ்வார் திருமஞ்சனம் (ஆலய சுத்தி) திருக்காட்சிகள்




அண்மையில் திருப்பதி ஸ்ரீபத்மாவதி கல்லூரிகளில் மகளிரை உத்தேசித்து உத்தம சமுதாயத்தை உருவாக்கிட மகளிருக்கு கல்வி முக்கியம்
என தெளிவுபடுத்திய தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு உறுப்பினர் டாக்டர். சுதாநாராயண மூர்த்தி அவர்கள்



டிசம்பர் மாதத்தில் திருமலை குமாரதாரா, பசுபுதாரா அணைகளில் கங்கை பூஜை நிர்வகிக்கும் தி.தி.தே. செயலாட்சித்தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ்.



# மஹா சிவராத்திரி

மாசி மாதம், கிருஷ்ண பக்ஷ சதுர்தசி சிவ பக்தர்கள் அனைவரது சிந்தனையும் ஈர்க்கப்படும் சிறப்பான நாள்...! இந்த நாள் குதூகலமான கொண்டாட்டத்திற்கு உரியதா? அல்லது உடலை வருத்தி, உமா மகேஸ்வரனை துதித்து, உளம் மகிழ, ஆத்மா நெகிழ அனுசரிக்கப்பட வேண்டிய விரதமா?

சிந்தையில் இந்த உணர்ச்சிகளை அலசினால், இது ஆடிப்பாடி கொண்டாட வேண்டிய நிகழ்வல்ல... ஆழ்ந்த பக்தி உணர்வுடன், அன்று முழுவதும், முழு இரவும், ஆழமான சிவ சிந்தனையுடன், அடுத்த நாள் ஆதவன் எழும் உதயம் வரை அனுஷ்டிக்கப்பட வேண்டிய ஒரு விரதமே என்ற தெளிவு பிறக்கும். இதன் பெருமை என்ன? பின்னணி என்ன? பின்னிப்பிணைந்திருக்கும் வரலாறு என்ன? இது தான் அது...! என்று இன்று வரை மூன்று விதமான ஐதீகங்கள் உரிய வரலாற்றுப் பின்னணியுடன் தொடர்ந்து நிலை பெற்றுள்ளன.


முதலாவதாக, பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆயிரக்கணக்கான பரம்பரைகளாக பக்த கோடிகள் மனத்தில் நிலை பெற்றுள்ள ஒரு நிகழ்வு.

தற்போது நடப்பில் இருக்கும் ஸ்வேத வராஹ கல்பம் தோன்றுவதற்கு முற்பட்ட காலம். ஸ்ருஷ்டி கர்த்தாவான பிரம்ம தேவனுக்கு திடீர் என்று ஓர் ஆணவம் கலந்த எண்ணம் தோன்றியது. தன்னுடைய சக்தியான "படைத்தல்" எனப்படும் கர்மா நிகழாவிட்டால் இந்த உலகத்தில் இயக்கமே கிடையாதே. சூன்யமே நிலை கொண்டு இருக்கும். காக்கும் கடவுளான வைகுண்ட நாதனுக்கும், அழிவுக்கு ஆதார சக்தியான ஈஸ்வரனுக்கும் எந்த விதமான கர்ம பந்தமும் இருக்காதே என்று இறுமாப்பு தோன்றியது. புழு பூச்சி முதல் விரிந்து பரந்த பிரபஞ்சம் முழுவதும் காக்கும் பரமபத நாதன் இதை அறியாமல் இருப்பாரா? பிரம்ம தேவனின் அகந்தைதனை அழித்து அவருடைய மனம் இயல்பாக நிலைகொள்ள வேண்டி, பிரம்மனை அழைத்தார். யாருடைய நாபிக்கமலத்தில் இருந்து தோன்றினாரோ, அவரிடமே வந்து தன்னுடைய அகந்தை தலை தூக்கிய நிலையில், தன்னுடைய பெருமையை வெளியிட்டார் பிரம்மதேவன்.

பரமபதநாதன், அவருக்கு பாடம் புகட்ட நினைத்தார். அவரை அழிவின் சக்திக்கு ஆதாரமான சர்வேஸ்வரனிடம் சென்று, தனது பெருமைக்கு அங்கீகாரம் கோரலாம் என உபதேசம் செய்தார். இருவரும் ஈஸ்வரனிடம் சென்றனர். ஈஸ்வரனிடம் சென்ற பிரம்ம தேவன் தனது பெருமையைக் கூறி, தன்னுடைய "படைத்தல்" என்ற நிகழ்வு இல்லாவிட்டால் காத்தல், அழித்தல் என்ற இரு இயக்கங்களும் வெறும் சூன்யமே அல்லவா என்று இறுமாப்புடன் வினவினார்.

சர்வேஸ்வரனை சுற்றி திடீரென்று ஓர் பேரொளி தோன்றியது. பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து நிலை

இதிஹாசமயம் வி. சீதாராமன், சென்னை,
98945 26302



கொள்ளாமல் விரிந்த வண்ணம் இருந்தது. அந்த ஒளியினிடையே அற்புதமான தேஜஸுடன் தோன்றிய சிவபெருமான், "தன்னுடைய அடியையும் முடியையும் யார் காண்கின்றனரோ அவரே அனைத்து சக்திகளிலும் உயர்ந்த அரிய நிலை கொண்டவர்" என்று உரைத்து பிரபஞ்சம் முழுவதும் வளர்ந்து நின்றார். அவரது திருவடி பூமியை குடைந்து கொண்டு பாதாளம் தாண்டி சென்ற வண்ணமும், முடி விண்ணை நோக்கி மேலும் மேலும் வளர்ந்த வண்ணமும் இருந்தன.

பிரம்ம தேவன், ஓர் அன்னபக்ஷியின் உருவத்தை எடுத்துக்கொண்டார். சிவபெருமானது முடியைக் காண மேலே, மேலே பறந்து சென்ற வண்ணம் இருந்தார். வைகுண்டநாதன் வெண்மையான வராஹ ரூபம் கொண்டு பூமியை குடைந்து பாதாளம் நோக்கிச் சென்றார். இவ்வண்ணம் பரமபதநாதன் பூமியை கீறிக்கொண்டு தேடத் துவங்கிய நாளே "ஸ்வேத வராஹ கல்பம்" எனப்படும் நடப்பு கல்பத்தின் துவக்கம்.

அன்ன பக்ஷியின் உருவம் கொண்டு, பறந்து பறந்து மேலே சென்றவர் பறந்த வண்ணம் இருந்தார். ஈசனின் திருமுடியைக் காண முடியவில்லை. அப்போது ஒரு தாழம்பூ கீழே வந்து கொண்டு இருந்தது. "எங்கிருந்து வருகிறாய்?" என்று அன்னபக்ஷியாய் இருந்த பிரம்மன் வினவினார். ஈசனின் திருமுடியில் இருந்து வருகிறேன் என்றது தாழம்பூ. எவ்வளவு காலம் ஆனது என்று வினவினார்? திருமுடியினில் இருந்து புறப்பட்டு பல யுகங்கள் ஆகி விட்டன என்றது தாழம்பூ. அதிர்ந்து போனார் பிரம்மன். நானும் உன்னுடன் இருந்து முடியைக் கண்டதாக சாட்சி கூறுமாறு பணித்தார். பிரம்ம தேவனே தன்னிடம் உதவி கோரும் நிலையை பெருமையாகக் கொண்டு, பொய் சாட்சி கூறிய தாழம்பூ சிவ பூஜைக்கு உதவாது என்று ஈஸ்வரனிடம் சாபம் பெற்றது.

இவ்வாறாக சிவபெருமான் பிரபஞ்சத்தின் எல்லைகளுக்கு புலப்படாமல் விரிந்து உயர்ந்து நின்ற நாளே "மஹா சிவராத்திரி" என்று பெருமை கொண்டது. ஈசனின் முடியே இப்போது நாம் காணும் திருவண்ணாமலை. யுகந்தோறும் இந்த மலை (ஈசனின் தலைப்பகுதி) ஞானிகளுக்கு பலவாறாக க்ருத யுகத்தில் அக்னி மலையாகவும், த்ரேதா யுகத்தில் மாணிக்க மலையாகவும், துவாபர யுகத்தில் ஸ்வர்ண மலையாகவும், கலியுகத்தில் மரகத மலையாகவும் பாமர மக்களுக்கு கல்மலையாகவும் காட்சி அளிக்கிறது என்பதும் தவ வலிமை மிகுந்த மஹான்கள் பலரால் உணரப்பட்டு, வெளி உலகத்திற்கு அறிவிக்கப்பட்ட ஐதீகம்.

இவ்வாறாக ஈசன் வானுக்கும் பூமிக்கும் கீழே பாதாளத்திற்கும் உயர்ந்து விரிந்து நின்ற காட்சியே "லிங்கோத்பவம்" எனப்படும். ஆகம சாஸ்திரப்படி கட்டப்பட்ட அனைத்து சிவாலயங்களிலும் மூலவரின் கர்ப்ப கிரகத்திற்குப் பின்புறம் இந்த சந்நிதி அமையப் பெற்று இருக்கும்.

இதுவே மிகப் பெரும்பான்மையான பக்தர்கள், புராணங்கள் வாயிலாகவும், ஆன்மீக உபன்யாசங்கள் வாயிலாகவும் மற்றும் செவிவழி செய்தியாகவும் பரம்பரையாக அறியப்பட்டுள்ள வரலாறு.

**இரண்டாவதாக மற்றொரு கூற்றுப்படி,**

ஒரு காலத்தில் மஹாப்பிரளயம் உருவானது. அனைத்து உலகங்களும் நீரில் அமிழ்ந்து மறைந்தன. வாழ்ந்த அத்துணை உயிர்களும், புழு பூச்சி தாவரங்கள் உள்பட "சிவத்தில்" ஒடுங்கின. மஹா பிரளயத்தில் இருந்து அனைத்து வகையான

ஸ்ருஷ்டிகளையும் மீட்டு பிரபஞ்சமானது சூன்யம் இன்றி இயங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, சர்வேஸ்வரனை, அம்பிகை உக்கிர மாக வழிபட்டு தவம் செய்ய, சர்வேஸ்வரன், தன்னுள் அடங்கி இருந்த அனைத்து உயிர்களையும், உலகங்களையும் மீட்க திருவுள்ளம் கொண்டு எழுந்தார். அப்போது அம்பிகை, ஈஸ்வரனிடம் ஓர் வரம் வேண்டினாள்.

"தான் தவம் இயற்றி, இறைவனின் திருவருள் பெற்ற காலம் "சிவராத்திரி" என உருப்பெற வேண்டும். அன்று முழுவதும், முழு இரவு பொழுது நிறைவுறும் வரை, ஈசனை மனதில் ஒருங்கே தியானம் செய்து, உரிய பூஜை விதிகளுடன், ஆத்மார்த்தமான ஈடுபாட்டுடன் விரதம் அனுஷ்டிக்கும் அனைத்து உயிர்களும், இம்மை, மறுமை இரண்டிலும் பூரணமான அனுக்கிரகம் பெற்று, அனைத்து பாவங்களும் விலகி, ஈசனின் திருவடிகளை அடையும் நேரம், மறு பிறப்பில்லா முக்தி அடைதல் வேண்டும்" என்று கோரினாள். அவ்வாறே ஈஸ்வரன் அருளிய வண்ணமே, "சிவராத்திரி" எனப்படும் விரதம் உருபெற் றது. முதன் முதலாக நந்தி தேவரும், சனகாதி முனிவர் களும், இவ்விரதத்தை, செவ்வனே அனுஷ்டித்து விரும் பியவாறே தங்களின் இச்சை நிறைவேறப் பெற்றனர்.




**மூன்றாவதாக, மற்றுமொரு கூற்றுப்படி,**

வைகுண்ட நாதனின் ஆணைப்படி, மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்ற கொடிய விஷம் கொண்ட நாகத்தை கயிறாகவும் கொண்டு, பாற்கடல் கடையப்பட்டது. அவ்வமயம் முதன்முதலாக பாற் கடலில் இருந்து வெளி வந்தது "ஆலஹாலம்" என்று அறியப்பட்ட கொடிய விஷம். அக் கொடிய விஷத்தின் தாக்கம் கதிர் வீச்சு – அனைத்து தேவர்களையும், அசுரர் களையும் தாக்கி பெரும் துன்பத்திற்கு உள்ளாக்கியது. அனைவரும் திக்கு முக்காடி திணறியபோது, சர்வேஸ் வரன் அவர்களை காப்பாற்றத் திருவுள்ளம் கொண்டு, அந்தக்கொடிய விஷத்தை, எடுத்து விழுங் கினார். இதை கண்ணுற்ற பார்வதி, ஈசனை விஷம் தாக்கி விடுமோ என்று அஞ்சி, அவரின் கழுத்தினை பிடித்து அழுத்த, நஞ்சானது அவருடைய கண்டத்திலேயே நின்றது. (ஈசன் "நீலகண்டன்" என்ற திருநாமம் கொள்ள இதுவே காரண மானது.).

இவ்வாறாக, சர்வேஸ்வரன், தேவர்கள், அசுரர்கள் மற்றும் அனைத்து விண்ணுலகவாசிகள் உட்பட அனை வரையும் காப்பாற்றிய காலமே / நிகழ்வே "சிவராத்திரி" என்ற ஒரு ஐதீகமும் உண்டு. ஆனால் இது போன்ற கருத்து பிரபலம் அடையவும் இல்லை.



இந்த மூன்று பின்னணிகளில் முதலில் கூறப்பட்ட "லிங்கோற்பவம்" என்ற நிகழ்வே வலுவான ஆதாரங் கள் கொண்ட வண்ணம் திகழ் கிறது. இந்த தலைப்பு தொடர்பாக திரு வண்ணா மலை யில் வாழ்ந்த தவ வலிமை மிகுந்த ஸ்ரீரமண மகரிஷி அவர்கள் அருளிய வரி கள் எத்துணை வலிமை சேர்க்கின்றது என்றும் காண்போம்!

*"ஆதி அரு ணாசலப்பேர் அற்புதலிங்கத்தருக்கொள்
ஆதிநாள் மார்கழியில் ஆதிரையச் - சோதியெழும்
ஈசனைமால் முன் அமரர் ஏத்தி வழி பட்ட நாள்
மாசி சிவராத்திரியா மற்று."*

மஹாசிவராத்திரி கற்பம் என்று ஒரு வழிபாட்டு நூல் பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த – திருக்கைலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதினத்தில் தோன்றிய "மறை ஞான சம்பந்தரால்" அருளப்பட்டது.

இந்நூல் நித்ய சிவராத்திரி, பக்ஷ சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மஹாசிவராத்திரி என்ற நாட்களைப் பற்றியும், அதனதன் சிறப்புக்களையும் விரிவாகக் கூறுகின்றது.

விரதம் அனுஷ்டிக்கும் பக்தர்கள், மஹா சிவராத்திரி அன்று இரவு நான்கு ஜாமங்களில் வழிபட வேண்டிய நெறிகளைப் பற்றியும், மூர்த்தங்கள், பூஜை திரவியங் கள், துதிக்கப்பட வேண்டிய தியானங்கள், ஸ்தோத் திரங்கள், ஒவ்வொரு ஜாமத்திற்குரிய நைவேத்தியங்கள் போன்ற அனைத்து வழிகாட்டுதலையும் இந்நூலில் விரிவாகக் காணலாம்.

இன்னும் மஹா சிவராத்திரியின் மகத்துவம் பற்றி, வேடன் ஒருவன் புலிக்கு பயந்து வில்வ மரத்தில் ஏறி... தூங்காவண்ணம் இருக்க, ஒவ்வொரு வில்வ இலை களைப் பறித்து கீழே போட, அன்று மஹா சிவராத்திரி யாக இருந்த நாளில், அங்கிருந்த சிவலிங்கத்தின் மீது வீழ்ந்ததனால் – அசாத்தியமான புண்ணியம் கிட்டியது.



## ஸ்ரீமத்பாகவதம் விடைகள்

1. வியாச பகவான்.
2. ஸம்ய ப்ராஸ இடத்தில், சரஸ்வதி நதிக் கரை.
3. தன் மகனான சுகமுனிவருக்கு (சிவனின் அவதாரம்)
4. பரிக்ஷித் மஹாராஜனுக்கு.
5. பரிக்ஷித் மஹாராஜா, ஸ்ரீகிருஷ்ண பகவான்.
6. சமீகரருஷி, இறந்த பாம்பை ரிஷியின் கழுத்தில் போட்டார்.
7. 12 அத்தியாயங்கள்.
8. கட்வாங்க ராஜா.
9. ஹரித்துவாரம் மிக புண்ய க்ஷேத்ரம்.
10. 1) சனக, 2) சனந்தன, 3) சனத்குமார, 4) சனத்சுகாதா.


தொகுப்பு : திருமதி. என். ஹேமா, திருப்பதி

இது போன்ற பல க்ஷேத்திர வரலாறுகள் ஏராளமாக உள்ளன. பக்தர்கள், வாய்ப்பு கிடைக்கும் போது ஆல யங்களுக்குச் சென்றோ, பல கோணங்களில் பரி மளிக்கும் ஆன்மீக தொடர்புகள் மூலமாகவோ, மேலும் பல வரலாற்றினை அறிந்து இறைவனது அருளுக்குப் பாத்திரமாகலாம்.

*"சிவாய நம: என்று சிந்தித்திருப்போருக்கு அபாயம் ஒரு நாளும் இல்லை"* என்பது ஆன்றோர் வாக்கு.

இத்துணை மகத்துவம் வாய்ந்த மஹா சிவராத்திரி அன்று ஆன்மீக அன்பர்கள் அனைவரும், செய்த பாபங்கள் அனைத்திற்கும் பரிகாரமாக, தங்களால் முடிந்த அளவு விரதத்தினை அனுஷ்டித்து இக பர சுகம் அடைந்து இன்புறுவார்களாக.

# வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் - 42



**இடமிருந்து வலம்**

1. காவேரி கொள்ளிடம் இடையில் உள்ள திருத்தலம்......(5)
3. வரதராஜரின் வாசஸ்தலம்.....(6)
5. மகாமகம் நடக்கும் நகர்....(6)
8. இமயத்தில் நாராயணன்.....(5)
12. ஸ்ரீகிருஷ்ணர் ஆட்சி புரிந்த நகர்...(4)
16. தஞ்சை அருகே ஹரவிமோசனப் பெருமாள்....(5)
21. கடலோரத்தில் பார்த்தசாரதி....(8)
22. திருச்சி நகரில் நாச்சியாருடன் திருமால் உள்ள திருத்தலம்....(5)
23. சென்னைக்கு அருகே மலை மேல் உள்ள கோயில்.....(6)

**வலமிருந்து இடம்**

2. எழில் மிகு ஏழுமலை.....(7)
4. நாராயணனின் நகர்....(6)
7. அரக்கோணம் அருகே உள்ள திருக்கடிகை....(7)
10. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடைவரை கோயில்.....(5)
19. மதுரை நகரில் கூடலழகர்....(6)
22. மதுரைக்கு அருகில் காளமேகப் பெருமாள் வாசம் செய்யும் நகர்......(5)
23. குடந்தைக்கு அருகே நின்ற திருக்கோலத்தில் சாரநாதன்....(5)

**மேலிருந்து கீழ்**

1. ஆழ்வார் திருப்பதிகளில் பரமபதம் நகர்.....(6)
6. யமுனை நதி தீர்த்தமாக உள்ள திருத்தலம் ...(4)
9. ஸ்ரீகிருஷ்ண ஜன்ம பூமி.....(3)
11. சமுத்திரம்........(5)
13. சிவனின் பெரிய கோயில் உள்ள நகரில் உள்ள மூன்று திவ்ய தேச பெருமாள் கோயில்கள் ....(5)
14. ஸ்ரீராம ஜன்ம பூமி....(4)

தொகுப்பு : திரு. பட்டுக்கோட்டை டி.ஆர். மனோகர், தஞ்சாவூர், 8124930259

விடைக்கு 41 ஆம் பக்கம் பார்க்கவும்.

**கீழிருந்து மேல்**

15. தில்லை நகர்.......(6)
17. வடமாநிலத்தில் வனம்....(7)
18. ஆழ்வார் நவத்திருப்பதிகளில் ஒன்று...(5)
20. நாகூர் அருகே பட்டிணம்....(4)
22. அனந்த பத்மநாப சுவாமி அருளும் ஊர்....(9)
23. கேரளாவில் ஸ்ரீவல்லபன் கோயில் கொண்ட ஊர்.....(5)

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

**ஸப்தகிரி வாசகர்களுக்கு விண்ணப்பம்**

உங்கள் வாழ்க்கையில் நடந்த திருவேங்கடவன் லீலைகள், துணுக்குகள், சிறார் எழுதும் கதைகள், கட்டுரைகள், குறுக்கெழுத்துப் புதிர்கள் வரவேற்கப்படுகின்றன. சந்தேகங்கள் தெளிதல் பகுதிக்கான ஆன்மீக சந்தேகங்கள் வரவேற்கப்படுகின்றன.

–ப்ரதான ஆசிரியர்

ஓம் க்ருஷ்ணாய நம:



# நேர்மைக்குப் பரிசு

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். எல்லா வளமும் நிறைந்து பிறநாட்டவரும் பொறாமை கொள்ளும் அழகான செல்வமிகு நாடு. ஆனால் நாட்டு மன்னனுக்கோ குழந்தையில்லை என்ற பெருங்கவலை.

இதைக்கண்ட அமைச்சர் மன்னரிடம், மன்னா! கவலை வேண்டாம். சிறந்த வழி ஒன்றை நடைமுறைப்படுத்தலாம் என்றார். அமைச்சரின் ஆலோசனைக்கு மன்னரும், ஊர் தோறும் சென்று நம் மக்களில் சிறந்த பத்து பேரைதேர்ந்தெடுங்கள். அவர்களில் ஒருவரை அடுத்த மன்னராக தேர்ந்தெடுக்கலாம் என்றார். வேண்டாம் மன்னா! பத்து பேருக்கும் ஏதேனும் போட்டி வைத்து அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுப்போம் என்றார் அமைச்சர்.

அப்படியே செய்யலாம் என அரசனும் கூறினார். அமைச்சரும் தன் குழுவோடு சென்று நாடு முழுமையும் தேடி தேர்ந்த குணநலமும், அறிவிற்சிறந்த பத்து பேருடன் நாடு திரும்பினார். ஆண்கள் ஒன்பது பேர். ஒரு பெண்.

அனைவரும் போட்டிக்குத் தயாராக இருந்தனர். மன்னர் அனுமதியுடன் அமைச்சர் அவர்கள் அனைவரிடமும் அரைக் காணி நிலத்திற்கான கோதுமையை வழங்கினார். இதை விதைத்து, விளைவித்து அறுவடை காலத்தில் எங்களை அழைத்துக் காட்டுங்கள் என்று கூறி வழியனுப்பினார்.

ஒன்பது ஆண்களும் அவரவர் இடங்களுக்குச் சென்றனர்.ஒரே பெண்ணான அமிர்தவல்லி தன் ஊரில் வயலில் விதைகளை விதைத்தாள். காத்திருந்தாள். காத்திருந்தாள். எதுவுமே முளைக்கவில்லை. அவளின் வீட்டார்கள் வேறு கோதுமை வாங்கி விதைக்கலாம். மன்னனுக்கு இது எந்த கோதுமை எனத் தெரியப்போவதில்லை என யோசனை கூறினர். பலரும் இதை ஆமோதித்தனர். அமிர்தவல்லி இதற்கு சம்மதிக்கவே இல்லை. ஏமாற்றி கிடைக்கும் வெற்றி எனக்குத் தேவையில்லை. உண்மையை மறைத்து, பிறரை ஏமாற்றுவதில்லை என்பதில் உறுதியாக இருந்தாள்.

போட்டிக்கான ஆண்கள் ஒன்பது பேரும் மன்னருக்குச் செய்தி அனுப்பினர். மன்னரும் அமைச்சரும் மக்களும் அவர்களின் ஊருக்குச் சென்று பார்வையிட்டனர். வயலில் கோதுமை மிக நன்றாக செழித்து வளர்ந்திருந்தது. பிறகு அனைவரும் புறப்பட்டு அமிர்தவல்லி நிலத்தை அடைந்தனர். வயல் பொட்டல் காடாய் காட்சியளித்தது. சோகமான முகத்துடன் அனைவரையும் வரவேற்றாள். மக்கள் அனைவரும் வருந்தினர்.

மன்னர் மிகுந்த மகிழ்ச்சியோடு அமிர்தவல்லியை நாட்டின் அரசியாகத் தேர்ந்தெடுத்து பரிவாரங்களோடு அரண்மனைக்கு அழைத்துச் சென்றார். அரசியிடம் அமிர்தவல்லியை மகிழ்வுடன் ஒப்படைத்தார். உடன் சென்ற ஊர் மக்கள் திகைத்தனர். காரணம் தெரியாமல் குழம்பி, கூடிக் கூடிப் பேசினர். அனைவர் முன்னிலையில் அமைச்சர் தோன்றி புதிய அரசியை அறிமுகப்படுத்தினார்.

இவரே சிறந்த அரசி என்றார். எப்படி? என்றனர் ஊர் மக்கள். ஆம். நாங்கள் விதைக்கக் கொடுத்த கோதுமை விதைகள் வேகவைத்த விதைகள். அது எப்படி முளைக்கும்? என்றார் அமைச்சர். அனைவரும் வியந்தனர். மற்ற ஒன்பது பேரும் ஏமாற்றினர். உண்மையை எதிர் கொண்டவர் புது அரசியான அமிர்தவல்லி மட்டுமே என்று அமைச்சர் கூறினார்..

**கதை நமக்கு உணர்த்துவது :**

நேர்மை ஒன்றே நம்மை எல்லா நிலையிலும் உயர்த்தும். நாம் மருத்துவராகலாம், பொறியாளராகலாம் எந்தத் துறையை வேண்டுமானாலும் மனதிற்குப் பிடித்தபடி தேர்ந்தெடுக்கலாம். எதுவாக நினைக்கிறீர்களோ அதுவாக ஆகலாம்! ஆனால் அதில் உண்மை, பிறரை ஏமாற்றாமை, நியாயம் என்ற நேர்மை மிக மிக அவசியம். நண்பர்களே! நாமும் நேர்மையின் வழியில் சிறந்தவர்களாவோம்.



செல்வி. பா. பூஜாஹாசினி
5ஆம் வகுப்பு,
ஸ்ரீ.ஆர்.எம். ஜெயின் வித்யாஸ்ரம்
திருவள்ளூர்.

தொடர் கதை

ஹரே ராமா! ஹரே கிருஷ்ணா!!

# ஸ்ரீமத்பாகவத கதை சாகரம்

## இந்திரனுக்கு ஏற்பட்ட இழிநிலை



தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : டாக்டர். சி. கோவிந்தசாமி-9676695443

ஸ்ரீமத் பாகவதத்தில் ஆறாம் ஸ்கந்தத்தில் இந்திரனின் இச்சரிதம் அமைந்துள்ளது. மூன்று லோகத்திற்கும் அதிபதியாக விளங்கிய காரணத்தினால் இந்திரனுக்கு கர்வம் உண்டானது. ஒரு சமயம் இந்திர சபையில் இந்திரன் தன் மனைவி இந்திராணியுடன் கொலுவீற்றிருந்தான். தேவர்கள் சேவைகள் செய்து வந்தனர். மேலும், அவனைப் புகழ்ந்து பாடினார்கள். அழகிய தேவமாதர்கள் நாட்டியம் ஆட, கந்தர்வர்கள் கானம் செய்து கொண்டிருந்தனர். அந்த வேளையில் தேவ குருவான பிரகஸ்பதி சபையில் பிரவேசித்தார்.

குருவைப் பார்த்தபோதும் இந்திரன் எழுந்து நின்று அவருக்கு மரியாதை செய்யவில்லை. அதுமட்டும் இன்றி அவரை வரவேற்கவும் இல்லை; தகுந்த ஆசனம் கொடுத்து அமரச் செய்யவும் இல்லை. அவ்வாறு அவன் வேத மரியாதையை மீறியவனானான். இந்திரன் செல்வச் செருக்கோடு இருக்கிறான் என்பதை பிரகஸ்பதி உணர்ந்தார். அவனுடைய செருக்கை ஒழிப்பதற்கு அவனைக் கடுமையாக சபிக்கக் கூடியவராக இருந்தும், அவர் மிகவும் பொறுமையைக் கடைபிடித்து அங்கிருந்து திரும்பி சென்றார். அப்படியாக ஒன்றும் பேசாமல் மௌனமாக பிரகஸ்பதி திரும்பிச் சென்றவுடன் இந்திரனுக்கு தான் செய்த தவறு புரிந்தது. கடவுளுக்கு நிகரான குருவை அவமதித்ததற்கு மிகவும் மனம் வருந்தினான். தான் செய்த தவறுக்கு அனைவர் முன்பும் தன்னை தானே நிந்தித்துக் கொண்டான். எனவே, தவற்றிற்கு வருந்தி மன்னிப்புக் கேட்டு, அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி மீண்டும் அவரைச் சபைக்கு அழைத்து வர வேண்டும் என்று அவன் விரும்பினான். உடனே அவரைத் தேடி அவர் இல்லத்திற்குச் சென்றான்.

இந்திரன் தன்னைத் தேடிக் கொண்டு வருவதை பிரகஸ்பதி உணர்ந்தார். இந்திரனைக் காட்டிலும் மிகவும் சக்திசாமார்த்தியம் உடையவர் பிரகஸ்பதி என்பதினால், அவர் தன்னுடைய யோக மகிமையால் ஒருவருக்கும் தெரியாதவாறு தன்னை மறைத்துக் கொண்டு விட்டார். இந்திரன் எங்குத் தேடியும் அவரைக் காண முடியவில்லை. எனவே இனி தனக்குத் தீமையே உண்டாகப் போகிறது என்பதைப் புரிந்துக் கொண்டான். அவனைச் சுற்றி தேவர்கள் சூழ்ந்திருந்தபோதும் அவனுடைய மனம் மட்டும் மிகவும் கலக்கத்துடன் இருந்தது. குரு காணாமல் போனதை எண்ணி மிகவும் வருந்தி, இனி என்னென்ன தீமைகள் உண்டாகப் போகிறதோ? என்ற அச்சம் கொண்டவனாய் மன நிம்மதியின்றி காணப்பட்டான்.

இந்திரனின் பரிதாப நிலையை அறிந்து கொண்ட அசுரர்கள் தங்கள் குருவான சுக்கிராச்சாரியரின் ஆணைக்கு இணங்க தேவர்கள் மேல் படையெடுத்தனர். அவர்களை எதிர்த்து தேவர்கள் கடுமையாக

போராடினார்கள். இருப்பினும் குருவின் ஆசிர்வாதம் கிடைக்காமல் போன காரணத்தினால் மிகவும் மோசமான தோல்வியை சந்திக்க வேண்டி வந்தது. எனவே, வெட்கத் தால் தலை குனிந்தவர்களாகி அங்கிருந்து வெளியேறி பிரம்மாவிடம் சென்றனர். எல்லா வல்லமையுடைய வராகிய பிரம்மா தேவர்களின் இந்த இழி நிலையைப் பார்த்து அவர்களிடம் இப்படியாகக் கூறினார்.

"தேவர்களே! செல்வச் செருக்காலும் பதவி மோகத் தாலும் நீங்கள் குருவை அவமதித்தீர்கள். அவர் சபைக்கு வந்தபோது மரியாதை தந்து எழுந்து நின்று வரவேற்கத் தவறினீர்கள். குருவினிடம் நீங்கள் செய்த மன்னிக்க முடியாத குற்றத்தினால்தான் இன்று அசுரர்களிடம் இப்படி தோல்வியுற்று வந்து நிற்கிறீர்கள். இந்திரனே! அசுரர்கள் தங்களுடைய குருவான சுக்கிராச்சாரி யருக்குத் தகுந்த மரியாதையும், தகுந்த இடத்தையும் கொடுத்து கௌரவித்து ஆதரித்து வருகின்றனர். எனவே, அவர்கள் மிகவும் வலிமையுடையவராக விளங்கு கின்றனர்.

எவரொருவர் அந்தணர்களையும், பசுக்களையும், கோவிந்தன் மீது கொண்ட பக்தியோடு வணங்கி வருகின் றார்களோ அவர்கள் தங்கள் இருப்பிடங்களைக் காத்துக் கொள்வதோடு, நிலையான இடத்தை தக்கவைத்துக் கொள்வார்கள். இதுவே வெற்றியின் இரகசியம் என்பதை தெரிந்து கொள்வாயாக. இப்பொழுது நீங்கள் துவஷ்டாவின் புதல்வரான விசுவரூபன் என்பவரிடம் சென்று அவரை குருவாக ஏற்றுக் கொள்ளுங்கள். அவர் மிகவும் தவவலிமையுடைய அந்தணன். எனவே, உங் களுக்கு நன்மையைச் செய்வார். அவருக்கு அசுரர்கள் மீது சற்று இரக்கம் உண்டு. இருப்பினும் அதை நீங்கள் பொறுத்துக் கொண்டு அவருடைய மனதில் இடம் பிடிக் கும் வகையில் நடந்துக் கொண்டால் அவர் உங்களு டைய எண்ணத்தை நிறைவேற்றி வைப்பார் என்று கூறினார்.

தேவமாதா அதிதிக்கும் கஸ்யபருக்கும் பிறந்த பிள்ளைகளில் துவஷ்ட பிரஜாபதியும் ஒருவனாவான். அசுர குலத்தை சேர்ந்த ரனா என்பவள் துவஷ்ட பிரஜா பதிக்கு மனைவியானாள். அவர்களுக்குப் பிறந்தவர் களே சன்னிவேஷன், விஷ்வரூபன். பிரம்ம தேவரின் கட்ட ளைப்படி தேவர்கள் நிர்மலமான மனதுடன் துவஷ்ட பிரஜாபதியின் பிள்ளையாகிய விஷ்வரூபனிடம் சென்று எங்களுக்கு புரோகிதனாக இருக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்.

அதற்கு அவர்களைப் பார்த்து "தேவர்களே! உலகை யாளும் உங்களுடைய வேண்டுகோளை யார் நிராகரிப் பார்கள். இதில் எனக்கு சிறிது இடர்பாடுகள் இருந்த போதும், தவறாமல் உங்களுக்கு நீங்கள் கேட்டதை செய்ய கடமைப்பட்டுள்ளேன். நீங்கள் யாவரும் எனக்கு குருவைப் போன்றவர்கள். எனவே என் உயிரைக் கொடுத் தாவது உங்கள் வேண்டுகோளை நிறைவேற்றுகிறேன்" எனக் கூறித் தேவர்களின் வேண்டுகோளை நிறைவேற்றத் தொடங்கினான். தேவகுருவாக இருந்து அவர்களுக்கு இதமான காரியங்களை தனது தபோபலத்தினால் செய்யத் தொடங்கினான்.

தேவேந்திரனுக்கு நாராயண மந்திர கவசம் என் கின்ற வித்தையைக் கற்றுக் கொடுக்க எண்ணினான். நாராயண மந்திர கவசத்தை எப்படி உச்சரிக்க வேண்டும் என்ற முறையை இந்திரனுக்கு விளக்கிச் சொன்னான். இப்படியாக நாராயண கவச மந்திரத்தை இந்திரனுக்கு எடுத்துக் கூறி விஸ்வரூபன் இவ்வாறு கூறினான்.

"இந்திரனே! அற்புதமான நாராயண கவசத்தை நான் உனக்கு உபதேசித்தேன். இந்த மந்திர சக்தியினால் எவ்வளவு பலசாலியாக இருக்கும் அசுரனையும் நீ எளிமையாக வெல்லக்கடவாய். மேலும், இந்த மந்திர கவசத்தைத் தரித்தவர்களின் பார்வைப்பட்டவர்களும் அல்லது அவர்களுடைய பாதம் தொட்டவர்களும் எல்லா விதமான ஆபத்துகளிலிருந்தும் காக்கப்படுவார்கள். இந்தக் கவச பிரபாவத்தால் மனிதன் அச்சங்களிலிருந்து விடுபட்டு அனைவராலும் வணங்கத்தக்கவன் ஆவான்.

விஸ்வரூபனின் அனுக்கிரகத்தால் நாராயண கவச மந்திரத்தைப் பெற்ற இந்திரன் மிகவும் பக்தியோடு அதை உபாசித்து மிகுந்த பலசாலியாக விளங்கினான். மேலும் அசுரர்கள் மேல் படையெடுத்து அவர்களை வெற்றிக் கொண்டான். அவ்வாறாக தான் இழந்த அனைத்து செல்வங்களையும் மீண்டும் பெற்றான். குருவை அவ மதித்த காரணத்தினால் அனைத்தையும் இழந்து நின்ற இந்திரன், பிரம்மாவின் அறிவுரைப்படி விஸ்வரூபனைக் குருவாகக் கொண்டு பழைய வைபவத்தைப் பெற்று விளங்கினான்.

பாகவத கதை சாகரம் தொடரும்...

தொடர்

# அப்பிள்ளை அருளிய ஆழ்வார் ஆசார்யர்கள் வாழித்திருநாமமும் உரையும்


உ.வே. டாக்டர் மாடபூசி வரதராஜன் ஸ்வாமி, சென்னை, 9841884972

**திருமங்கையாழ்வார் வாழித்திருநாமம் தொடர்ச்சி...**

(நாலைந்தும் ஆறைந்தும் நமக்கு உரைத்தான்) – நாலைந்து என்று இருபது பாசுரங்கள் கொண்ட திருக்குறுந்தாண்டகத்தைச் சொன்னபடி. தாண்டகம் என்பது தமிழில் ஒரு வகை பிரபந்தம். குறுந்தாண்ட கமாவது ஆறு சீர்கள் கொண்டு விரும்பிய தலைவனான எம்பெருமானைப் புகழ்ந்து பாடுவதாகும். குறுந்தாண்ட கத்தில் ஒவ்வொரு மெய்யெழுத்தோடு கூடிய பதி னைந்து எழுத்துக்களுக்குக் குறையாமல் இருபத்தாறு எழுத்துக்கு மிகாமல் இருக்க வேண்டும் என்பது நியதி. ஆழ்வாருடைய இரண்டாவது பிரபந்தமாகிய இதில் எம்பெருமானை அனுபவிக்க வேண்டி ஆசை மிக, ஆழ்வாருக்கு அவன் முகம் காட்டாமையாலே தாகம் மிகுந்தவன் உடம்பிலும் முகத்திலும் நீரை வாரி இரைப் பான் போலே, எம்பெருமானை முக்கரணங்களாலும் அனுபவித்து உகந்தார்.

இந்த இனிமை திவ்யதேசங்களை அநுபவித்ததால் வந்தது என்று இவற்றை அநுபவிக்கப் பெற்றவர்கள் பாக்கியசாலிகள் என்று கொண்டாடுகிறார். ஆறைந்து என்றது – எண் சீர் கொண்டு அடிதோறும் இருபத்தாறு எழுத்துக்களுக்குக் குறையாமல் முப்பது பாசுரங்கள் மூலமாக இஷ்ட தெய்வத்தைப் புகழ்ந்து பாடுவது திருநெடுந்தாண்டகம் என்னும் பிரபந்தமாகும். ஆழ்வார் அருளிய கடைசி பிரபந்தமான இப்பிரபந்தத்தில் எம்பெருமான் ஆழ்வாருக்கு இயற்கை இன்னருளாலே அறிவில் பொருள், அறிவுள் பொருள், ஈச்வரன் ஆகிய முப்பொருளையும் காட்டிக் கொடுக்கக் கண்டு அநு பவித்து, அது உள்ளடங்காமையாலே அலைந்து கூப்பிட்டு, பின்னர், நம்மாழ்வார் திருவாய்மொழியைப் பாடி வீடுபெற்றாற்போல, இவ்வாழ்வாரும் திருநெடுந் தாண்டகம் பாடி அவாவற்று வீடு பெற்று நிறைவு பெற்றபடியைப் பேசி முடிக்கிறார். இப்பிரபந்தத்தில் முதல் பத்து ஆழ்வார் தாமான பாசுரம் என்றும், இரண்டாம் பத்து திருத்தாயார் பாசுரம் என்றும், மூன்றாம் பத்து பெண்பிள்ளை பாசுரம் என்றும் உரைப்பர். மேலும் முதல் பத்தாலே திருமந்திரப் பொருள், இரண்டாம் பத்தாலே துவயத்தின் பொருள், மூன்றாம் பத்தாலே சரமச்லோகப்பொருள் சொல்லப்பட்டது என்று கூரத் தாழ்வான் திருக்குமாரரான பட்டர் வாய்மொழியை அவர் சீடரான பரகால நல்லான் என்னும் ஆசாரியர் ஏடுபடுத் தினது காணலாம்.

(இலங்கெழு கூற்றிருக்கை இருமடல் ஈந்தான்) – திருஎழுகூற்றிருக்கை – ஆழ்வார் அருளிய மூன்றாவது



பிரபந்தம். இலங்குகை – பிரகாசிக்கை. திருஎழு கூற்றிருக்கைக்கு பிரகாசமாவது – திருக்குறுந்தாண்டகத்தில் அநுபவம் விடாயை மேலும் மிகுதியைப் பிறப்பிக்க, இப்பிரபந்தம் வாயிலாக திருக்குடந்தை ஆராவமுதனி டம் ஆர்த்தியோடு சரணம் புகுதலாகும். இந்த பிரபந்தம் ரதபந்த வகையில் அமைந்ததாகும். ஆசு கவி, விஸ்தார கவி, மதுரகவி, சித்ர கவி ஆகிய நாலு வகைகளில் வல்லவரான இவ்வாழ்வார் இப்பிரபந்தத்தை சித்ர கவியில் பாடியுள்ளார்.

இருமடல் – சிறிய திருமடலும், பெரிய திருமடலும், மடல் – "மடலூறுகை தான் உண்ணாமல் குளிக்காமல் உகந்த விஷயத்தை ஒரு படத்திலே எழுதி அத்தைக் கொண்டு திரிகையும், அறவிளைந்தால் அதின் காலிலே விழுகையும், விழுந்தால் அங்ஙனே செல்லரிக்கக் கிடக்கையும் அவ்வாறே முடிகையும்" என்று கூறுவர் பெரிய வாச்சான்பிள்ளை. மேலும் மடலூறுதலாவது நெல்லை அடைய முடியாத ஒருவன் நெற்கதிர்ப்போரை வழியல்லா வழியில் கொளுத்தி அதில் வெந்த நெற்பொறிகளைக் கொறிப்பதற்கு ஒப்பாகும் என்பர் பிள்ளை.

சரணம் புகுந்த பின்பும் ஆழ்வார் வாக்கினால் இன்னும் சில திவ்வியப் பிரபந்தங்களைப் பெற விரும்பி முகம்காட்டாமல் இருந்தான் எம்பெருமான். அவனுக்கும் தமக்கும் நிதியான கோயில்களில் நின்ற நீர்மையையும் அழிக்கிறேன் என்கிறார் ஆழ்வார் பெரிய திருமடலில். சிறிய திருமடலில் மடல் எடுக்கக் காரணம் விபவத்தில் கண்ணன் குடக்கூத்தைப் பரகால நாயகி கண்ட நிகழ்ச்சியாகப் பாடியதாகும். பத்தொன்பது திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்துள்ளார். பெரிய திருமடலில் திருநரையூர் எம்பெருமானைப் பிராட்டியுடன் சேவித்தமை பற்றியதாகும். இதில் பதினாறு திவ்ய தேசங்களை மங்களாசாசனம் செய்துள்ளார்.

(இம்மூன்றில் இருநூற்றிருத்தேழீந்தான்) திருஎழுகூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மூன்று பிரபந்தங்கள் சேர்ந்து 227 பாடல்கள். அதில் திருஎழுகூற்றிருக்கை ஒரு பாட்டாகவும், சிறிய திருமடல் ஈரடி கண்ணிகளைக் கொண்டு 77.5 பாட்டாக வும், பெரிய திருமடல் 148.5 பாட்டாகவும் கொண்டு மொத்தம் 227 பாடல்களாய் ஆழ்வார் அருளினபடி. இது மூன்றாமாயிரத்தில் சேர்ந்ததாகும். இரு மடலும் கலி வெண்பாவில் அமைந்துள்ளது.

(வலம் திகழும் குமுதவல்லி மணவாளன்) – குமுதவல்லி – பரகாலனுக்கு விசேஷ ஞானத்தை உண்டுபண்ண வேணும் என்று எம்பெருமான் நினைத்து பரமபதத்தில் எம்பெருமானுக்கு சாமரம் சேவிக்கும் திவ்விய பெண்களோடு சேர்ந்தவளான ஒருத்தியைப் பூமியில் அவதரிக்க நியமித்தான். திருவெள்ளக் குளத்திலுள்ள ஒரு குளத்தில் அல்லி மலரில் தோன்றியவள். திருவாலி நாட்டில் உள்ள ஒரு தாமரைப் பொய்கையிலே சில அப்ஸரஸ்ஸுக்கள் வந்து நாளும் ஜலக்கிரீடை பண்ணுவார்கள். அவர்களிலே திருமாமகள் என்னும் இந்த அப்ஸரஸ்ஸு குமுதமலர் கொய்ய முற்படுகையிலே அவர்களும் இவளை விட்டுச் சென்றனர். இவளும் மனித உருக்கொண்டு தனித்து நிற்க, அப்போது திருநாங்கூரில் எம்பெருமானை சேவித்திருப்பவன் ஒரு மருத்துவனான



## ஆதிசங்கரர் அருளிய பஜகோவிந்தம்

*திநமபி ரஜநீ சாயம் ப்ராத:*
*ஸிஸிர வசந்தௌ புநராயாத: ।*
*கால: க்ரீடதி கச்சத்யாயு:*
*ததபி ந முஞ்சத் யாசாவாயு: ॥*

**"காலம் என்பது விளையாடுகிறது" என்கிறது இந்த சுலோகம். பகல் பொழுதும் இரவுப் பொழுதும் மாறி மாறி வந்து கொண்டே இருக்கிறது. ஸிஸிர ருதுவும் வசந்த ருதுவும், (அதாவது குளிர்காலமும் கோடைகாலமும்) மாறி மாறி வந்து கொண்டே இருக்கிறது. காலம் இப்படி சுழல்வதால் நமது ஆயுளும் போய்க் கொண்டே இருக்கிறது. இப்படி இருந்த போதிலும் ஆசையாகிய காற்று நம்மை விடுவதில்லை.**

**கருத்து : காலம் என்பது யாருக்காகவும் காத்து இருப்பது கிடையாது. பகலும் இரவும், பருவ காலங்களும் என்பதே சுழன்று காலத்தை நீடித்து வரும் போது, நமக்கு விதிக்கபட்ட ஆயுள் குறைந்து கொண்டே வருகிறது. இந்த உண்மை அனைவரும் நன்கு அறிந்ததே. உயிர்க்காற்று நமது உடலில் இருந்து நீங்கும் வரை... "ஆசை" எனும் காற்று நம்மை விட்டு நீங்காமலே உள்ளது. ஆசைப்பட்டது அனைத்தும் கடைசி மூச்சு வரையே நிலைக்கும்... எந்த சத்தியத்தை உணர்ந்து, ஆசைகளை துறந்து, மனதை பக்குவப்படுத்திக் கொண்டு வாழ வேண்டும் என்பதே ஆசார்யாளின் தத்துவ உபதேசம்.**

**– திரு. சீதாராமன், சென்னை.**

பாகவதோத்தமன் அனுட்டானம் பொருட்டு வந்தான். இப்பெண்ணைக் கண்டு அவள் யார், தனித்திருக்கக் காரணம் ஆகியவற்றைக் கேட்டான். அவளும் கூட வந்த பெண்கள் தன்னை விட்டுச் சென்றதாகக் கூறினாள்.

"ஸ்ரீமந்நாராண அம்சமாகப் பிறந்த கபிலாசார்யருடைய கோபத்தாலே மானிட வேடத்தைத் தரித்து பெண்ணாய் சுவர்க்கத்துக்குப் போக சக்தியில்லாமல் இருக்கிறேன்" என்றாள். மருத்துவரும் அவள் வரலாற்றைக் கேட்க, அவள் சொன்னது பின்வருமாறு – அடியேன் ஸுமங்களை என்கிற பெயருடைய வளாய் தன் தோழிகளான அப்ஸரஸ் ஸுக்களுடன் அவர்களுக்குத் தலைவி யாய் திவ்ய வடிவோடு திரியும்போது, ஒரு நாள் இமயமலையிலுள்ள வைப வங்களையெல்லாம் பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு ஸித்தாச்ர மத்தில் கபிலாசார்யர் மஹரிஷி களுக்கு பகவத் வைபவம் சொல்ல, நான் அதில் ஒரு குரூபியான ஸித்த புருஷைக் கண்டு பரிஹாஸம் பண்ண, கபிலரும் நீ மநுஷ்டையாய் நீசனுக்கு மனைவி யாகக் கடவாய்" என்று சபித்தார்.

நான் மிக்க வருத்தத்தோடே வேண்ட, அவரும் நேரில் வந்து பெண்ணெ! – உலகக்காப்பின் பொருட்டு என்னுடைய சார்ங்க அம்ச ராய் பிறக்கும் பரகாலன் அவதரித்து ராஜ்யாதிபதியாய் இருக்கிறார். அவ ருக்கு மனைவியாய் அவரை பாகவ தோத்தமராகப் பண்ணினால் உன் குறைவு நீங்கிப்போகும் என்றார். அத னால் இப்படி வந்தேன்" என்று தான் வந்த முறையை மருத்துவருக்குச் சொல்ல அவரும் தனக்குப் பெண் பிள்ளை இல்லாதவராகையாலே இவளை தம் ஊருக்கு அழைக்க, அவ ளும் கூடவே வந்தாள். குமுதமலர் கொய்வதுவே அடையாளமாகையாலே அவளுக்கு குமுதவல்லியார் என்று பெயரிட்டார். (வலம் திகழும்) வலமாவது பலம். பலமாவது ஆழ் வாரை பாகவதோத்தமராக்கியது. அதாவது சங்கு சக்கரம், திருமண் காப்பு. தாஸ்யநாமம், மந்த்ர உபதேசம்.

திருவாராதனம் ஆகிய ஐந்து ஸம்ஸ்காரங்களால் தூய்மை அடைந்த ஸ்ரீவைஷ்ணவராக்கி கணவராக்கிக் கொண்டாள். மேலும் 1008 ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு தாம்பூலத்தோடு தக்ஷிணை கொடுத்து அறுசுவை உணவை இடவும் ஆணையிட்டாள். முதலில் திருநறையூர் சென்று அங்குள்ள எம்பெருமானான நம்பியாலேயே பஞ்ச ஸமஸ்காரத்தைப் பெற்றார். தினமும் பாகவதர்கள் ஆயிரம் பேருக்கு ததீயாராதனை செய்து குமதவல்லி நியமனத்தை நிறைவு செய்தவராகையாலே வலந்திகழும் குமுதவல்லி என்றபடி.

(குமுதவல்லி மணவாளன்) மணம் – விவாகம். அதனை ஆள்பவன் – பெற்றவன் – மணவாளன். திருமங்கையாழ்வார் குமுதவல்லியின் உறுதியான ஆணையை நிறைவேற்றுவதாக உறுதி மொழி கூற அந்த மருத்துவனும் தம் பெண்ணான குமுதவல்லியை பலவகைச் செல்வங்கள் நிறைந்த ஆழ்வாருக்கு உதகபூர்வமாக விவாகம் செய்து கொடுத்தார். அதனால் குமுதவல்லி மணவாளன் என்றபடி.

வாழித்திருநாமம் வளரும்...

## வைணவக் குறுக்கெழுத்துப் புதிர் – 42க்கான பதில்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஸ்ரீ | ர | ங் | க | ம் | ட | க | ங் | வே | ரு | 2 தி | |
| வை | 3 கா | ஞ் | சி | பு | ர | ம் | த | ப | ம | ர | 4 ப |
| 5 கு | ம் | ப | 6 கோ | ண | ம் | ர | பு | க | ங் | ளி | 7 சோ |
| ண் | ய | | கு | | ர | 8 ப | த் | ரி | நா | த் | |
| ட | ண் | றை | ல | | பு | ம் | ய | 9 ம | ரு | 10 தி | |
| ம் | ர | பே | ம் | | த | த | 11 பா | 12 து | வா | ர | கை |
| 13 த | சா | ப் | கை | 14 அ | ந் | 15 சி | ற் | ரா | | | |
| ஞ் | மி | ரு | நா | யோ | ன | லா | 16 க | ண் | டி | யூ | ர் |
| சா | 17 நை | 18 தி | ரு | த் | வ | ல் | ட | கூ | க் | ரு | 19 தி |
| வூ | | | 20 தி | 21 தி | ரு | வ | ல் | லி | க் | கே | ணி |
| ர் | ர் | கூ | மோ | ரு | 22 தி | ரு | க் | கோ | ழி | | |
| | | றை | சே | ச் | ரு | 23 தி | ரு | நீ | ர் | ம | லை |

# 108 திவ்விய தேசவைபவம்



# திருமெய்யம்

– திரு. உருபட்டூர் சௌந்தரராஜன்,
சென்னை.

**புராண வரலாறு :**

பிரம்மாண்ட புராணம் விரிவாகக் கூறுகிறது. சத்யமஹரிஷி இமயமலையில் புஷ்பபத்ரை நதிக் கரையில் சித்ரசிலை என்கிற பாறையில் அமர்ந்து, பத்ரவடம் என்கிற ஆலமரத்தின் அடியில் தபஸ் செய்ய, பகவான் தோன்றி அவருக்கு அருள, நான் நினைத்த போதெல்லாம் உம்மை சேவிக்க வேண்டும் என்று முனிவர் கேட்க, பகவான், திருமெய்யம் சென்று தபஸ் செய்யுமாறு சொன்னார்.

ரிஷி இமயமலையிலிருந்து திருமெய்யத்துக்குப் புறப்பட்டபோது புஷ்பபத்ரை நதி சத்ய புஷ்கரணி ஆகவும், சித்ர சீலை என்கிற பாறை மலையாகவும், பத்ரவடம் என்கிற ஆலமரம் பலாமரமாகவும் மாறி முனிவருடனே வந்ததாகவும், இப்படி இந்த ஊர், சத்ய க்ஷேத்ரமாக மாறியதாகச் சொல்வர்.

ஆதிசேஷன் தான் செய்யும் கைங்கர்யத்தை நினைத்து சிறிது கர்வப்பட்டதாகவும், உடனே பகவானை நினைத்து, அந்த நினைவை அகற்றினாலும் குற்ற உணர்ச்சியால் பகவானை வேண்ட, பகவான், இவ் வூருக்கு வந்து தன்னை வழிபடச் சொன்னதாகவும், ஆதி சேஷன் இங்கு சத்ய தீர்த்தத்தில் குளித்து, தபஸ் செய்ததாகவும், பகவான், ஸ்ரீஹயக்ரீவனாகக் காட்சிக் கொடுத்து, என்றும் சத்வ குணம் நிலைத்திருக்கச் செய்த தாகவும் சொல்வர்.

நானும் இங்கு கைங்கர்யம் செய்ய வேண்டும் என்று ஆதிசேஷன் வேண்ட, திருப்பாற்கடலில் சயனித் திருப்பதைப் போல், ஆதி சேஷன் மீது பள்ளிக் கொண் டார். பகவானை, அசுரர்கள் கவர்ந்து செல்ல முயற்சித்த போது, தன் மூச்சின் நச்சுக் காற்றால் அவர் களை விரட்டி அடித்ததாகவும், மலையின் குகைப் பகுதியில் பள்ளிக் கொண்ட இவ்வெம்பெருமான் மிகப் பெரிய வடிவுடன் ஆதிசேஷனை அணைத்த வண்ணம் படுத்துள்ளார் என்றும் சொல்வர். திருவடி அருகே பூதேவி, கருடன் இங்கு அஷ்டாக்ஷரத்தை ஜபித்து, பகவான் அநுக்ரகம் பெற்று தேவலோகத்திலிருந்து அமுத கலசத்தைக் கொணர்ந்து, தாயை, அடிமை என்கிற நிலையில் இருந்து மீட்டார். கருடன் பிரார்த்தனைப்படி பகவான் இங்கு சத்யமூர்த்தி ஆனார்.

புரூருவஸ் என்கிற பாண்டிய மன்னனை, இந்த ஊர் வரை, மா வராக உருவில் இழுத்து வந்து சத்ய ரிஷியிடம் சொல்லி, மன்னன் மூலமாக திருக்கோயிலைக் கட்டப் பெற்றார் என்றும் சொல்வர்.

திருமங்கை ஆழ்வார், சில க்ஷேத்ரங்களைச் சேவித் தால் தான் துன்பம் அகலும் என்று பட்டியல் இடும்போது, திருக்கண்டியூர், திருவரங்கம், திருக்கச்சி, திருப்பேர், திருக்கடன்மல்லை என்று சொல்லி, ஆறாவதாக திரு மெய்யத்தைத் திருக்குறுந்தாண்டகத்தில் சொல்கிறார்.

**சிறப்புகள் :**

ஸ்ரீ மணவாளமாமுனிகள் இளமையில் இந்தத் திவ்ய தேசத்தில் இருந்தார்.

| | |
|---|---|
| பெருமாள் | – மூலவர் : சத்யமூர்த்தி. |
| உத்ஸவத்திருமேனி | – மெய்யப்பன். |
| தாயார் | – உய்யவந்த தாயார், உஜ்ஜீவனத்தாயார். |
| புஷ்கரணி | – கதம்ப புஷ்கரணி. |
| விமானம் | – உத்யகிரி விமானம். |
| தீர்த்தம் | – சத்ய தீர்த்தம். |
| தல விருக்ஷம் | – பலா மரம், அரசு. |
| ப்ரத்யக்ஷம் | – ஆதிசேஷன், சத்ய தேவதைகள். |
| ஆகமம் | – வைகானஸம். |
| மங்களாசாஸனம் | – திருமங்கை ஆழ்வார். |
| விசேஷம் | – மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட தலம். |

**த்யான ச்லோகம்**

*ஸ்ரீமாந் ஸத்ய தராதரேந்தர ரமண: ஸ்ரீஸத்ய நாமாங்கிதோ,*
*நித்யம் ஸத்ய விமாந மண்டத தநுஸ் ஸத்யாக்ய தீர்த்தாந்திகே ।*
*ப்ராக் வாராந்நிதி வீக்ஷண: ப்ரதிதினம் ஸத்ய ப்ரஸந்நோ ஹறி:*
*மத்வாமே ஹ்ருதயம் விஹார ஸதனம் தேவோவஸத் வாதராத் ॥*

**பாசுரம்**

*“நிலையாளா! நின்வணங்க வேண்டாயே யாகிலும், என்*
*முலையாள ஒருநாள் அகலத்தால் ஆளாயே?*
*சிலையாளா! மரமெய்த திறலாளா! திருமெய்ய*
*மலையாளா! நீயாள வளையாள மாட்டோமே.*

– திருமங்கை ஆழ்வார்

*ஆளாய், உனக்கு அன்பாய், ஆசையாய் நாண் இலியாய்*
*வாளா மனைவி என்று வாழ்வேனைக் - கேளாய்*
*திருமெய்ய மாயா! சிலைகால் வளைத்து*
*வரும், எய்ய மாயா மதன்*

– பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்

**நாமாக்கள்**

401. *ஓம் அநய: நம:*
(பகைவர்கட்குப் பகைவனே)
*ஓம் திவ்யமால்யாயை நம:*
(இரு பூதமாலைகட்கு, அபிமான தேவதையாய் வைஜயந்தி வடிவுடன் பகவானை அலங்கரிப்பவளே)

402. *ஓம் வீர: நம:*
(பகைவர்களை நடுங்கச் செய்பவரே)
*ஓம் திவ்யாயுதாயை நம:*
(நித்ய ஸூரிகளால் திருவாயுத வடிவம் தாங்கிச் சேவிக்கப் பெறுபவளே)

403. *ஓம் ஸ்ரேஷ்ட: நம:*
(தேவர்கட்கும் தேவனே)
*ஓம் விஸாகாயை நம:*
(தன் காந்தியால் எங்கும் பரவியிருப்பவளே)

404. *ஓம் தர்ம: நம:*
(தர்மமே உருவானவனே)
*ஓம் சித்ரவாகனாயை நம:*
(அன்னம் போன்ற அழகிய வாகனங்களை உடையவளே)

405. *ஓம் தர்ம விதுத்தம: நம:*
(தர்மம் தெரிந்தவர்களில் சிறந்தவனே)
*ஓம் அம்பிகாயை நம:*
(ஜகன்மாதாவே)

406. *ஓம் வைகுண்ட: நம:*
(இடையூறுகளை அகற்றி பக்தர்களை தன்னிடம் சேர்த்துக் கொள்பவனே)
*ஓம் ஸிந்துதநயாயை நம:*
(சமுத்ர ராஜனின் குமாரத்தியே)

407. *ஓம் புருஷ: நம:*
(உலகங்களுக்கு முதலாமவனே)
*ஓம் ஸுஸ்ரோண்யை நம:*
(அழகிய இடுப்பை உடையவளே)

408. *ஓம் ப்ராண: நம:*
(எல்லாவற்றுக்கும் உயிர்களை உயிர்ப்பிக்கின்றவனே)
*ஓம் ஸுமஹாஸிந்யை நம:*
(சர்வலோகலோகேச்வரி ஆதலால் பெரிய சிம்மாசனத்தில் வீற்றிருப்பவளே)

409. *ஓம் ப்ராணத: நம:*
(உயிரை அளிப்பவனே)

ஓம் ஸாமப்ரியாயை நம:

(ஸாமகானம் சொல்பவரின் ப்ரியம் உள்ளவளே)

410. ஓம் ப்ரணம: நம:

(சராசரங்கள் எல்லாம் வணங்கும் பெருமானே)

ஓம் நம்ரிதாங்க்யை நம:

(அடியவர் குறைகளைக் கேட்க குனிந்த திருமேனி உடையவளே)

ஸ்ரீமதேஸத்யநாயிகா ரக்ஷணாய உஜ்ஜீவன நாயிகா ஸமேத ஸ்ரீஸத்யகிரிநாத பரம்ரஹ்மணே நம: குஹாஸயாய ஸ்ரீஸத்யமூர்த்தி பரப்ரஹ்மணே நம:

புதுக்கோட்டையிலிருந்து சுமார் 12 கி.மீ., காரைக்குடியில் இருந்து சுமார் 26 கி.மீ., திருமெய்யம் ரயில் நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது.

திவ்ய தேச வைபவம் வளரும்...




# புத்தக மதிப்புரை

| | | |
|---|---|---|
| புத்தகத்தின் பெயர் | : | **“அரங்கமா நகருளானே”** |
| ஆசிரியரின் பெயர் | : | வேதா டி. ஸ்ரீதரன் |
| கிடைக்குமிடம் | : | 2வது மாடி, 64, மதுரை சாமி மடம் தெரு, பெரம்பூர், சென்னை – 11. தொ.பே. 044–22425447. |
| விலை/பக்கங்கள் | : | ரூ.300/– / பக்.270 |

**பூலோக வைகுந்தமான திருவரங்கத்தைப் பற்றிய அரிய தகவல்களைக் கொண்ட “அரங்கமா நகருளானே” என்னும் தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரத்தைத் தலைப்பாக வைத்து இப்புத்தகத்தை வெளியிட்டுள்ளார்.**

**திருவரங்கனின் முதலாவது பிரம்மோத்ஸவத்தைச் சொல்லி, ஸ்ரீவேதாந்த தேசிகரின் பாசுரத்தையும் குறிப்பிடப் பட்டுள்ளது (பக்.89). கிளி காட்டிய வழி, உங்களுக்குத் தெரியுமா? அருணாசலக்கவிராயரின் பாடல், கோயிலொழுகு, ரங்க கீதை, பாரதியாரின் பாடல் (பக்.10–19) என்று வரிசைப்படுத்தியுள்ளது மனதை கவர்கின்றது. திருவரங்கம் ஏழு பிராகாரங்களைக் கொண்டது. அந்த ஏழுப் பிராகாரங்களும் (திருச்சுற்று) ஏழு பெயர்களால் அழைக்கப்படுகிறது என்பது அறிய வேண்டிய உண்மை (பக்.28–29). ஆங்காங்கே கண்ணைப் பறிக்கும் வண்ணப் படங்களின் தொகுப்பு இந்தப் புத்தகத்தை மிளிரச் செய்கின்றது. தினசரி பெருமாள், தாயார், சக்கரத்தாழ்வார் முதலிய ஸந்நிதிகளில் சேவாகாலங் களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது (பக்.52–53). நம்பெருமாளின் ரத்ன அங்கி, முத்தங்கி முதலான அலங்காரங்களையும் புகைப்படங்கள் வாயிலாக அறியலாம்.**

**“அரங்கனின் அஜ்ஞாதவாசம், பெருமாள் வெளியேறுதல் (ப.87), பெருமாள் பயணித்த பாதை (ப.96) வரை படம் போன்ற அரிய செய்திகள், திருவரங்கன் உலா, தாயாரின் இரு மூலவரின் செய்தி (ப.103) முதலியவற்றை இப்புத்தகத்தில் காணலாம். வெள்ளி, தங்கப் பாத்திரங்களின் புகைப்படங்கள், பண்டைக்கால திருச்சியின் அமைப்புகளும் காணமுடிகிறது (ப.116). “கொஞ்சம் தமிழ் கொஞ்சும் ஸ்ரீவைஷ்ணவத்தில் ஸம்ஸ்க்ருதமும், தமிழும் இரண்டிற்கும் சம அளவு முக்கியத்துவம் தரப்படுவதையும் மங்களம் எது? அமங்களம் எது? என்பதையும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது (பக்.116–117).**

**“கோயில் தமிழ்” என்பதனை விவரிக்கப்பட்டுள்ளது (பக்.124–125), மற்றும் கோபுரங்களின் கம்பீரத் தோற்றம், பழைய காலப்புகைப்படங்கள் இப்புத்தகத்தை மெருகு கூட்டுகின்றன. நம்பெருமாளின் பிரம்மோத்ஸவத்தில் பல வாகனங்களில் எழுந்தருளுகின்ற காட்சிகளை வண்ணப் படங்களின் வாயிலாகப் பார்க்க முடிகிறது (பக்.128–129). மேலும் தைத்தேர், கோரதம், கைத்தல சேவை, விஜய தசமியன்று வன்னி மரத்தில் அம்பு விடுதல், வேடுபறி உத்ஸவம், நவராத்ரி கொலு போன்ற பல உத்ஸவ வைபவங்களையும் சேவிக்க ப்ராப்தமாகிறது.**

**திருவாளர் வி.என். ஹரிராவ் (எஸ்.வி. பல்கலைக் கழகம்) அவர்கள் எழுதியுள்ள “ஸ்ரீரங்க இன்ஸ்க்ரிப்ஷன்” என்னும் புத்தகத்தை ஒத்திருந்தாலும் இன்றளவும் உள்ள அரிய செய்திகளைக் கொடுத்துள்ளமை மிகவும் பாராட்டுக்குரியது. இந்தப் புத்தகம் ஒவ்வொருவரிடம் இருக்க வேண்டிய ஒன்று.** **– டாக்டர். கே.கே.ஏ. ரங்கராஜன் ஸ்வாமி, திருப்பதி.**



பகவத் கீதை – இளைய சமுதாயம்

# தெய்வீக குணமே துன்பத்தை போக்கும்

தெலுங்கு மூலம் : டாக்டர். வைஷ்ணவாங்கிரி சேவக் தாஸ்.
தமிழாக்கம் : திரு. வ.ஓ. சுரேஷ்- 6304428489

மனிதன் தன் வாழ்க்கையின் இயல்பான நிலையைக் கண்டு மகிழ்ச்சியடைகிறான். அன்போடு கலந்து இருக்கின்றான். அன்பினை பகிர்ந்து கொள்வதே அவனின் இயல்பான நிலையாகும். இது சாதாரணமாக அவன் தன் ஆன்மா தன்னிறைவாயிற்று என அறிந்து கொள்ளும் போது தான் சாத்தியமாகின்றது. ஆனால் சாதாரணமாக நூற்றிற்கு தொண்ணூறு விழுக்காடு மக்கள் ஏதோ ஒரு காரணத்தால் துன்பத்தில் மூழ்கியிருப்பது போல் காணப்படுவர். அத்துன்பம் சில தானே ஏற்படுத்திக் கொண்டவைகளாகவோ அல்லது தானாகவே ஏற்பட்டவையாகவோ இருக்கலாம்.

எவ்வாறாயினும் அனைவரும் துன்பத்தில் மூழ்கியிருப்பது போன்றே காணப்படுவர். குருக்ஷேத்திரத்திற்கு அர்ஜுனன் துன்பத்தையும் கொண்டு வந்திருந்தான். எவ்வாறு எனில், தான் போர் புரியப் போவது உறவினர்களோடு என்பதை 14 ஆண்டுகளுக்கு முன்னதாகவே அவனுக்குத் தெரியும். ஆனால் போர்க்களத்திற்கு வந்த பிறகு துன்பப்படுவதில் அர்த்தமில்லையல்லவா?

எனவே தான் பகவத் கீதை துன்பத்திலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியினை கூறுகின்றது. அவற்றில் ஒன்று தெய்வீக குணங்களை பெற்றிருப்பது. தெய்வீக குணத்தை பெற்றிருப்பவனிடம் ஆத்ம சக்தி விழிப்புணர்வுடன் இருக்கும். ஆத்ம சக்தி விழிப்புடன் இருந்தால் மனிதருக்கு எதிரிகளே இருக்க மாட்டார்கள். அவன் அனைத்திலும் வெற்றியடைந்து முன்னோக்கிச் செல்வான். சரி, தெய்வீக குணம் என்றால் என்ன? “பயம் இன்றி இருத்தல், புலன்களை முற்றிலும் தூய்மையாகப் பெற்றிருத்தல், தத்துவ ஞானம் பெறுவதற்காக தியான யோகத்தில் இடையறாது உறுதியாக இருத்தல், தானம் செய்தல், புலனடக்கத்துடன் இருத்தல், யாகம் செய்தல், வேதம் சாஸ்திரங்கள் கற்றல், அகிம்சை, சத்தியம், கோபமின்றி இருத்தல், தியாகம், அமைதி, மற்றவருக்கு தீங்கு இழக்காமை, உயிரினங்களிடம் கருணை, பொறாமை இன்றி இருத்தல், மென்மையானவனாக இருத்தல், பொலிவு, பொறுமை, உறுதியான சக்தி, புறத்தூய்மை, எவரிடமும் பகைமை பாராட்டாமை, தற்பெருமை கொள்ளாமை” இவையாவும் தெய்வீக குணங்கள் என்று பகவத்கீதை *(16.1–3)* கூறுகின்றது.

இந்த தெய்வீக குணங்களில் முதலாவது பயமின்றி இருத்தல். இவ்வுலகில் அனைவரும் பயத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அதாவது மானசீகமான நிலையில் பயத்துடன் வாழ்கின்றனர். ஆனால் யார் ஆத்ம நிலையில் இருக்கின்றனரோ அவர்களில் அன்பும் வாழ்கின்றது. பல அற்புதங்களை சாதித்தவர்கள் வாழ்க்கையில் பயமின்றி இருந்திருப்பவர்களேயாவர். அதாவது அவர்களில் தெய்வீக குணங்கள் இருந்ததே காரணமாகும். அவர்களில் தெய்வீக குணங்கள் இருந்ததினாலேயே துன்பத்திலிருந்து விடுபட்டனர். இந்திய தேசத்திற்கு சுதந்திரம் பெற்றுத் தந்தது மகாத்மா

காந்தியாகவே இருக்கலாம், நிலவில் முதலில் காலடி வைத்தவர் நீல் ஆம்ஸ்ட்ராங்காகவே இருக்கலாம், முதன்முதலில் எவரெஸ்டை ஏறியவர் எட்மண்ட ஹிலாரியாகவே இருக்கலாம், வேறு யாராவதும் கூட அற்புதங்களை செய்திருக்கலாம்.

ஆனால் இவர்கள் அனைவரிலும் பயம் என்பது இல்லாமல் இருந்தது. எனவே இளைஞர்கள் முதலில் அறிந்து கொள்ள வேண்டியது பயமின்றி இருத்தலேயாகும். தோற்று விடுவோமோ, எள்ளி நகையாடுவாரோ, நஷ்டமடைவோமோ அல்லது வேறேதாவது ஏற்படுமோ எனும் எண்ணங்கள் இருப்பதும் பயமேயாகும். “மனிதன் முதலில் வெற்றி பெற வேண்டியது மனதிலேயே தவிர வெளியேயல்ல” என சாணக்கியர் கூறுகின்றார். போர்க்களத்திற்குப் புறப்படும் வீரனோ அல்லது நேர்முகத் தேர்விற்குச் செல்லும் இளைஞனோ அல்லது தேர்விற்குச் செல்லும் மாணாக்கர்களோ இவர்களின் வெற்றியும் தோல்வியும் முன்னராகவே தீர்மானிக்கப்படுகின்றன. அது அம்மாணாக்கர்களின் மனதில் தீர்மானிக்கப் படுகின்றது. வெற்றி பெற்றே தீருவேன் என்று புறப்படுவோர் நிச்சயமாக வெற்றியுடன் திரும்புவர். அவன் பயத்தை தொலைத்து தெய்வீக குணத்தோடு விளங்குவதால் வெற்றியைப் பெறுகின்றான்.





திருமலை திருப்பதி தேவஸ்தானம்

பிரதி மாதம் முதல் வெள்ளிக்கிழமை போனில் மட்டுமே!
செயலாட்சித் தலைவருடன் பேசுங்கள்!

டயல் யுவர் ஈ.வோ.

பக்தர்களுக்கு அறிய வாய்ப்பு!

எந்த மாநிலத்திலிருந்தும்,
எம்மொழியிலும்
நீங்கள் நேராக
செயலாட்சித் தலைவருடன் பேசலாம்!
திருமலையான் ஆர்ஜித சேவைகள்,
வசதி வாய்ப்புகள் குறித்த
உங்களிடையே எழும் சந்தேகங்கள்,
கருத்துகள், ஆலோசனைகளை செயலாட்சித்
தலைவருடன் பகிர்ந்து கொள்ளலாம்.

டோல் நெம்பர் : 0877-2263261

நேரம் : காலை 8.30 மணி முதல் 9.30 மணி வரை.

*இந்த வாய்ப்பினை அனைவரும்
பயன்படுத்திக் கொள்ளவும்.*


“என்னால் சாதிக்க முடியும்” என்பது அல்லது “என்னால் சாதிக்க இயலாது” என்பது இரண்டும் உண்மையே என்று உலகப் புகழ் பெற்ற மோட்டார் கார் தொழிலதிபர் ஹென்றின்போர்ட் கூறுகின்றார். அதாவது வெற்றி தோல்வியை நீயே தீர்மானிக்கின்றாய். கீதையின் வாயிலாக தெய்வீக குணங்களைப் பெற்றால் வெற்றி உனதாகின்றது. அப்படி இல்லையெனில் மானசீக நிலையில் பயத்துடன் இருந்தால் நிச்சயமாக தோல்வி உன்னை வந்தடையும். பகவத்கீதையில் 16வது அத்தியாயத்தில் உள்ள முதல் மூன்று சுலோகங்களை தினமும் இரண்டு மூன்று முறை படித்து வந்தால் தெய்வீக குணம் உன்னில் உண்டாகும். அப்பொழுது நீங்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வெற்றிச் சிகரத்தை அடைவீர்கள்.

பகவத்கீதை தொடரும்...

# கந்தகோட்டமும் வள்ளலாரும்

– பனையபுரம் அதியமான், சென்னை,
94448 00935



தைப்பூசம் என்றதும் நம் நினைவிற்கு வருபவர்கள், முருகப் பெருமானும், வள்ளலார் எனும் வடலூர் இராமலிங்க சுவாமிகளும் தான். இந்த இனிய தருணத்தில் கந்தகோட்டம் முருகனையும், அவரைப் பல்லாண்டு காலம் வணங்கி வழிபட்ட வள்ளலாரையும் இக்கட்டுரை யில் காண்போம்.

**சென்னை கந்தகோட்டம் :**

தைப்பூசத்தை முன்னிட்டு பிரம்மோத்ஸவம் நடைபெறும் முக்கிய ஆலயமாக விளங்குவது, சென்னையில் அமைந்துள்ள கந்தகோட்டம் முத்துக்குமார சுவாமி திருக்கோயில் ஆகும்.

கந்தகோட்டம் என்ற பெயரே வள்ளலாரின் பாடல்கள் மூலம் இவ்வாலயத்திற்குப் புகழைப் பெற்றுத் தந்தது. இவ்வாலயம் சுமார் 350 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. தைப்பூசத்திற்கு 10 நாட்கள் முன்பாகவே கொடியேற்றப்பட்டு, வெகு விமரிசையாக விழா நடைபெறும்.

இக்கோயில் தோன்ற மூல காரணமாக விளங்கியவர், முருகன் அடியாரான வேளூர் மாரிசெட்டியார் ஆவார். திருப்போரூர் முருகன் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்த இவர், தன் நண்பர் கந்தப்ப பண்டாரத்தோடு கிருத்திகைதோறும் நடைப் பயணமாக திருப்போரூர் சென்று வருவார்.

ஒரு சமயம் இந்தச் சூழலில் கிருத்திகைக்கு நடைப் பயணமாக வந்த மாரி செட்டியார் திருப்போரூர் சென்றதும் களைப்படைந்து அங்குள்ள வேப்ப மரத்தடியில் அயர்ந்து உறங்கினார். அப்போது அவரின் கனவில் வந்த கந்தப் பெருமான் தன்னைப் பாதுகாப்பாகச் சென்னைக்கு அழைத்துச் செல்லுமாறு கேட்டுக் கொண்டு தான் மறைந்திருக்கும் புற்றினையும், அடையாளம் காட்டி மறைந்தார்.

அதன்படி, அங்குள்ள புற்றை அகற்றிப் பார்த்தபோது முருகப் பெருமான் சிலையாகக் காட்சியளித்தார். அவர் சுமக்கும் விதமாக எளிய வடிவான முருகப்பெருமானை, தோளில் சுமந்தபடி, சென்னை பெத்துநாயக்கன் பேட்டை, ராசப்பசெட்டித் தெருவில் உள்ள முத்துநாயக்கன் தோட்டத்திற்

> பாளையக்காரர்கள் மீது பகைமை கொண்ட மராட்டியர்கள் அவர்களுடன் போர் புரிந்தனர். இப்போர்ச்சூழலைப் பயன்படுத்தி கலகக்காரர்கள் திருப்போரூர் முருகன் கோயில் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கொள்ளையடித்தனர். அப்போதைய அறங்காவலர் பொன்னம்பல தம்பிரான் முருகப் பெருமானைக் கல்திரையிட்டுப் பாதுகாத்தார். அமைதி திரும்பியவுடன் கல்திரையை நீக்கியபோது முருகன் தெரியவில்லை. இதனால் வேறு வடிவம் நிறுவப்பட்டது. இத்தகு சூழலை விரும்பாத முருகப்பெருமான் மாரி செட்டியாரின் வருகைக்காகக் காத்திருந்தார்.
>
> பொறுப்பு ஏற்றவரிடம் முருகன் தன் இருப்பிடத்தைக் கனவில் காட்டினான். ஊர் மக்கள் கனவிலும் காட்டினான். அவர்கள் தம்பிரானிடம் கூற, அதை அவர் செவிமடுக்காததால் மாரிசெட்டியார் கனவில் தோன்றி அவருடன் செல்ல விரும்பியதாகத் தலவரலாறு கூறுகிறது.

குள் அமைந்துள்ள சர்வசித்தி விநாயகர் கோயிலில் எழுந்தருளச் செய்தார். பல்வேறு அடியார்கள் ஆதர வுடன் கோயில் எழுப்பப்பட்டது. அது முதல் பேரிச் செட்டியார் சமூகத்தினரால் சிறந்த முறையில் நிர்வகிக் கப்பட்டு வருகிறது.

இத்தலத்து முருகனை வள்ளலார், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், பாம்பன் சுவாமிகள் என பல்வேறு மகான்கள் பாடிப் பரவி வழிபட்டுள்ளனர். இனி இவ்வாலயத்துடன் வள்ளலாருக்கு ஏற்பட்ட உற வினைக் காணலாம். தொடர் ஆண்டு 1823இல் சிதம்பரம் அருகேயுள்ள மருதூர் என்ற ஊரில் இராமையா பிள்ளை – சின்னம்மையார் தம்பதியினருக்கு ஐந்தா வது மகனாகத் தோன்றியவர் வள்ளலார் எனும் இராமலிங்கம்.

பிறந்த ஆறு மாதத்தில் தந்தையார் இறக்க, குடும்பத்தாருடன் தாயாரின் சொந்த ஊரான பொன் னேரியை அடுத்த சின்னக் காவணம் வந்தனர். அண்ணன் சபாபதிக்கு திருமணம் முடித்து சென்னை ஏழு கிணறு பகுதிக்குக் குடியேறினர். அண்ணியாரால் அர வணைக்கப்பட்ட இராமலிங்கம், பக்தி இலக் கியங்களை முறையாகக் கற்றார்.



இந்நிலையில், இராமலிங்கம் கந்த கோட்டம் சென்று நாள்தோறும் முருகப் பெருமானை வழிபட்டு வரலானார். அப் போது இவர் கந்தகோட்டம் முருகன் மீது தெய்வமணிமாலை எனும் 31 பாடல்க ளைக் கொண்ட நூலை எழுதினார். அதில் எட்டாவது பாடலாக வரும் பாடலே முருகன் அடியார்களால் பாராய ணம் செய்யப்படும் பாடலாகும்.

*“ஒருமையுட னினதிரு மலரடி நினைக்கின்ற*
*உத்தமர்தம் உறவு வேண்டும்*
*உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவா*
*ருறவு கலவாமை வேண்டும்.*
*பெருமைபெறும் நினது புகழ் பேச வேண்டும்*
*பொய்மைபேசா திருக்க வேண்டும்.*
*பெருநெறி பிடித்தொழுகவேண்டு மதமான*
*பேய்பிடியா திருக்க வேண்டும்*
*மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும்*
*உனைமறவா திருக்க வேண்டும்*
*மதிவேண்டும் நின்கருணை நிதி வேண்டும்*
*நோயற்ற வாழ்வுனான் வாழ வேண்டும்*
*தருமமிகு சென்னையிற் கந்தகோட்டத் துள்வளர்*
*தலமோங்கு கந்தவேளே*
*தண்முகத்துய்யமணி யுண்முகச் சைவமணி*
*சண்முகத் தெய்வமணியே”*

–தெய்வமணிமாலை.

இந்நிலையில், நாள்தோறும் முருகப் பெருமானை நினைந்து தியானத்தில் ஆழ்ந்த அவருக்கு தன் அறை யில் மாட்டியிருந்த கண்ணாடியில் முருகப் பெருமான் காட்சி தந்தார். இதனை தமது அருட்பாவில் குறிப் பிட்டுள்ளார். இதேபோல, இராமலிங்கம் ஒன்பது வயதில் சிதம்பரம் நடராஜரை தரிசித்த போது, இறைவன் இவரை ஆட்கொண்டருளினார். 12 வயதில் சிவபெருமான் சிவமாலை அணிவித்து ஞான உபதேசம் செய்தார்.

சுவாமிகள் சென்னையில் இருந்து சிதம்பரம் வந்தபோது இப்பகுதி மக்கள் மழையின்றி, பசியிலும் பஞ்சத்திலும் வாடியதைக் கண்டு மனம் வருந்தினார். இதனைப் போக்க இவர் தொடர் ஆண்டு 1867இல் உருவாக்கியதே பசிப்பிணி போக்கும் சத்திய தரும சாலையாகும்.

அன்று இவர் துவக்கி வைத்த அடுப்பு இன்றும் தொடர்ந்து எரிந்து கொண்டேயிருக் கிறது. வடலூருக்கு எப்போது சென்றாலும் ஏதாவது ஒரு சாப்பாடு நம் பசியைத் தீர்க் கும்.

தொடர் ஆண்டு 1872 இல் சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞான சபையைத் திறந்து வைத்தார். தைப்பூசத்தன்று இதில் ஏழு திரைகள் நீக்கப்பட்டு, அதன் பிறகு முழுமையான ஜோதி தரிசனம் காட்டப்படும். உருவ வழிபாடு இல்லாத ஜோதி வழிபாட்டை இவர் வலியுறுத்தினார். ஜீவகாருண்யத்தை வலியுறுத்தினார். பலரின் பசிப்பிணி உடற்பிணி நீக்கினார்.

சுவாமிகள் மறைந்தாலும் அவர் விட்டுச் சென்ற சமரச சன்மார்க்க நெறி இப்போது உல கம் முழுவதும் மெல்ல மெல்ல மேலோங்கி வருகிறது. பசிப்பிணி நீக்கும் அறக்கொடைகளும் அதிகரித்து வருகின்றது.

தொடர்



# ஆயுர் வேதம்
# வெந்தயம்



"சரக சம்ஹிதா" என்ற ஆயுர்வேத நூலில்

*"ப்ராணா: ப்ராணப்ருதாமன்னம் மன்னம் லோகோபிதாவதி"*

என்று கூறப்பட்டுள்ளது. அதாவது உயிர் உள்ள ஒவ்வொருவருக்கும் "அன்னம் மிக அவசியம்" என்பது பொருள். மேலும் நல்ல சத்துள்ள உணவுகளால் உடல் ஆரோக்கியமும், சக்தியற்ற உணவுகளால் உடலில் நோயும் ஏற்படுகின்றன என்று சரக மஹரிஷி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

"உணவே மருந்து, மருந்தே உணவு"

இவ்வளவு மகிமை வாய்ந்த உணவு தயாரிப்பில் சிலவற்றை ருசிக்காகவும் வாசனைக்காகவும் பயன்படுத்துகின்றோம். அதில் ஒன்றான வெந்தயத்தின் சிறப்புகளையும், மருத்துவ குணங்களைப் பற்றியும் அறிந்து கொள்வோம்.

வெந்தயத்தை சமஸ்கிருதத்தில் "மேதிகா" என்று கூறுகின்றனர். *"மேதிகா வாதசமனி ஸ்லேஷ்மக்னி ஜ்வர நாசினி"* என்று பாவ மிஸ்ரன் தன் பாவபிரகாசம் என்ற ஆயுர்வேத நூலில் உடலில் காய்ச்சலைப் போக்கும், வெப்பத்தைத் தணிக்கும் செரிமான பிரச்சனைகள் தீரும் என்று கூறுகிறார்.

ஆங்கிலத்தில் Fenu Greek என்று கூறப்படுகின்ற வெந்தயத்தின் அறிவியல் பெயர் Trigonellafoenum graecum.

வெந்தயத்தை மருந்தாகப் பயன்படுத்தும் போது நன்கு வறுத்து உபயோகிக்க வேண்டும்.

### சிறுநீரகக் குழாய் கற்கள் நீங்க :

வெந்தயப்பொடி 100 கிராம், கறுப்பு கொள்ளு 100 கிராம் ஆகியவற்றை நன்கு வறுத்து பொடி செய்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் இரண்டு வேளை 50 மி.லி. முள்ளங்கி இரசத்தில் 2 அல்லது 3 கிராம் பொடியை கலந்து குடித்து வந்தால் சிறுநீரகக் குழாயில் கற்கள் நீங்கும்.

தெலுங்கு மூலம் : டாக்டர். சி. மதுசூதன சர்மா.
: 90007 61390.
தமிழாக்கம் : திருமதி. வி. உஷா.
99850 03156

### சர்க்கரை வியாதி கட்டுக்குள் இருக்க :

நாள்தோறும் இரவு 200 மி.லி. நீரில், 10 கிராம் வெந்தயத்தைப் போட்டு ஊற வைத்து, காலை வெறும் வயிற்றில் வெந்தயத்தை நன்கு மென்று, நீரை குடித்து வந்தால் சர்க்கரை வியாதி கட்டுக்குள் இருக்கும்.

இண்டியன் கௌன்சில் ஆப் மெடிக்கல் ரீசர்ச் மற்றும் நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆப் நியூட்ரிஷனத்தார் வெந்தயத்தைப் பற்றி பரிசோதனை மேற்கொண்டு வெந்தயத்தின் நற்பயன்களை கூறியுள்ளனர்.

### வாய்ப்புண் குறைய :

இரவு 200 மி.லி. நீரில் 10–15 கிராம் வெந்தயத்தைப் போட்டு ஊற வைத்து, காலை அந்நீரை வடிகட்டி வாய் கொப்பளித்தால் வாய்ப்புண் குறையும்.

### தாய்ப்பால் அதிகரிக்க:

100 கிராம் வெந்தயத்தை நெய்யில் நன்கு வறுத்து பொடி செய்து கொண்டு, அதனுடன், கோதுமை மாவு 100 கிராம், சர்க்கரை 200 கிராம் கலந்து வைத்துக் கொண்டு, 200 மி.லி. பாலுடன் இந்த பொடியை 10 கிராம் கலந்து 2 டீஸ்பூன் நெய் ஊற்றி நன்கு கொதிக்க வைத்து அந்த பாலை தாய் உட்கொண்டால் தாய்ப்பால் அதிகரிக்கும்.

குழந்தைக்கும், எவ்வித சிறு சிறு வியாதிகள் வராமல் தடுக்கும்.

**தும்மல் நீங்க :**

வெந்தயம், ஓமம், மிளகு ஆகியவற்றை 25 கிராம் அளவு எடுத்துக்கொண்டு தனித்தனியாக வறுத்து பொடி செய்து கொண்டு, அதனை நன்கு கலந்து, நாள்தோறும் காலை ஒரு வெற்றிலையில் 1 கிராம் அளவு பொடி இட்டு, அரை டீஸ்பூன் தேன் உடன் குழைத்து, இலையை நன்கு சுற்றி முழுவதும் மென்று விழுங்கினால் நோய் தடுப்பு ஆற்றல் அதிகரித்து, தும்மல் குறையும்.

**தலைமுடி நன்கு வளர :**

வெந்தயம், உளுத்தம் பருப்பு, நெல்லிக்காய் ஆகியவற்றை ஒவ்வொன்றையும் 100 கிராம் அளவு எடுத்துக்கொண்டு, அனைத்தையும் நன்கு பொடி செய்து கொண்டு, ஒரு சீசாவில் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். வாரத்திற்கு 2 முறை இரவு நேரம் போதுமான அளவு பொடியை எடுத்துக்கொண்டு அதில் எலுமிச்சை பழம் இரசத்தை நன்கு ஊற வைத்து, காலை தலைக்குப் பூசி, இரண்டு மணி நேரம் கழித்து சிகைக்காய் போட்டு தலைக்குளியல் செய்ய வேண்டும்.

கர்ப்பிணிகள் வெந்தயத்தை உபயோகிக்காமல் இருந்தால் நல்லது.

**கொழுப்பு சம்பந்தபட்ட உபாதைகளுக்கு :**

150 கிராம் வெந்தயம் பொடி, 50 கிராம் சுக்கு பொடி ஆகியவற்றை கலந்து வைத்துக் கொண்டு, காலை மாலை இரண்டு அல்லது மூன்று கிராம் பொடியை தகுந்தளவு தேனுடன் கலந்து உட்கொண்டால் உடம்பில் உள்ள கொழுப்புச் சத்து குறையும். அதுமட்டுமின்றி இம்மருந்தை உட்கொள்வதால் முழங்கால் வலி, தசை வலி ஆகியவையும் குறையும்.

**அதிக வேர்வை குறைக்க :**

வெந்தயம், கறுப்பு கொள்ளு, கசோரம், கரக்காய் பொடிகளை ஒவ்வொன்றையும் 100 கிராம் வீதம் எடுத்து, கலந்து வைத்துக் கொண்டு, நாள்தோறும் நம் உடம்பிற்கு போதுமான அளவு பொடியை எடுத்துக் கொண்டு, தண்ணீருடன் நன்கு கலந்து உடம்பில் பூசிக்கொண்டு, 2 மணி நேரம் கழித்து குளித்தால் உடம்பில் அதிகமாக வரக்கூடிய வேர்வை குறையும். உடம்பின் துர்நாற்றமும் குறையும்.

**குறிப்பு :**

மருந்துகளை உபயோகிப்பதற்கு முன்பு ஆயுர் வேத மருத்துவரை அணுகி, ஆலோசனைப் பெறவும். இக்கட்டுரை வாசகர்கள் பொது அறிவை வளர்த்துக் கொள்ளவே தவிர நோய்களுக்கு நிரந்தர தீர்வு அல்ல.

ஆயுர்வேதம் வளரும்...

## திருமலைக்கு வரும் பக்தர்களின் கவனத்திற்கு...

- தங்களுடைய முகவரியையும், தொலைபேசி எண்ணையும் ஒரு சிறு காகிதத்தில் எழுதி உங்களுடன் பயணிக்கும் குழந்தை மற்றும் முதியோரிடம் வைத்துக் கொள்ளும்படி அளியுங்கள். ஒரு வேளை அவர்கள் காணாமல் போனால் அவர்களை தங்களிடம் சேர்ப்பதற்கு இது உதவியாக அமையும்.
- திருமலையில் இருக்கும் போது தங்களுடன் பயணிப்போர் எவரேனும் தவறி காணாமல் போனால் காவல் வளாகத்திற்கு (1வது டவுன் காவல் நிலையம், 2வது டவுன் காவல் நிலையம், குற்றவியல் காவல் நிலையம்) வந்து சேர வேண்டும் என்று முன் கூட்டியே தகவலை பகிர்ந்துக் கொள்ளவும்.
- திருமலையில் அறைகள், தரிசனம், பிரசாதங்களுக்கு தளாரிகளை நம்பாதீர்கள். தி.தி.தே. கௌண்ட்டர்கள் மூலமாக மட்டுமே பெற்றுக் கொள்ளுங்கள்.
- அன்னியர் தரும் உணவு பொருட்களை வாங்க வேண்டாம். அவர்கள் கூறும் வார்த்தைகளை நம்பி ஏமாறாதீர்கள்.
- உங்களுடைய விலையுயர்ந்த பொருட்கள், நகைகள், பணம் ஆகியவற்றை அறையிலோ, வாகனத்திலோ வைத்து விட்டுச் செல்ல வேண்டாம்.
- திருமலை நடைபாதையில் நடந்துச் செல்லும் போது பக்தர்கள் குழுவாகச் செல்லவும்.



# 2020
# பிப்ரவரி மாத ராசி பலன்

திரு. பராசரம் பாலசுப்ரமண்யம், திருச்சானூர், 9949922677

| | | | |
|---|---|---|---|
| சுக்ரன் | யுரேனஸ் சந்திரன் | | ராகு |
| புதன் நெப்ட்யூன் | **பிப்ரவரி-2020**<br>13 – சூரியன் –கும்பம்<br>17 – புதன் –வ.ஆ.<br>25–ப்ளூட்டோ –மகரம்<br>28 – சுக்ரன் –மேஷம் | | |
| சூரியன் சனி | | | |
| ப்ளூட்டோ செவ்வாய் குரு கேது | | | |

**மேஷம்**

ராசிநாதன் செவ்வாய் ஒன்பதாமிடத்தில் குருவுடன் இணைந்து உலவிடுவதால் மிகச் சிறப்பான நற்பலன்கள் ஏற்படும். நான்கிற்குரிய சந்திரன் ராசியில் அமர இம்மாதம் தொடங்குவதால் வந்த துயரங்கள் நீங்கும். சூரியனின் சஞ்சார பலத்தால் வீடு, மனை, வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**ரிஷபம்**

ராசி நாயகன் சுக்ரன் லாபஸ்தானத்தில் உச்ச பலம் பெற்று சஞ்சரிப்பதால் கலை, இசை, சினிமா, நாடகம் போன்றவற்றில் ஈடுபாடு அதிகரிக்கும். மூத்த உடன் பிறப்புகளின் ஆதரவு உண்டு. அலுவலகப் பணியாளர்கள் உழைப்புக்கும் திறமைக்கும் ஏற்ற லாபம் அடைவார்கள்.

**மிதுனம்**

சிறந்த பேச்சாற்றல் மிக்கவர் எனப் பாராட்டப்படுவீர்கள். அதன் மூலம் நல்ல ஆதாயம் காண்பீர்கள். குடும்பத்தில் குதூகலம் நிறைந்திருக்கும். மகப்பேறு உண்டாகும். ராசிநாயகன் சகாயஸ்தானாதிபதியும் இணைவதால் வருங்கால நலன் கருதி தீட்டிய திட்டங்கள் நிறைவேறும்.

**கடகம்**

ராசி நாதன் பத்தில் அமர, குரு ராசியை நோக்க இம்மாதம் ஆரம்பமாகிறது. வெற்றிகள் கிடைக்கும் விதத்திலும், கைநிறைய பொருள் குவியும் விதத்திலும் கிரக நிலைகள் உள்ளன. துணையாக புதனின் சஞ்சாரத்தால் குடும்பத்தில் சுப விரயங்களைச் சந்திக்கக் கூடிய சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்**

ராசிநாதன் சூரியன் மாத முற்பாதி வரை ஆறாமிடத்திலும் பின்னர் ஏழிலும் உலவிடுவார். விரய வீட்டை குரு நோக்குவதால் வீண் விரயங்கள் குறையும். ஆக்கபூர்வமான முதலீடுகள் செய்வீர்கள். வீடு கட்டும் முயற்சியில் ஏற்பட்ட சுணக்கம் அகலும். குழந்தைகளுக்குத் திருமணம் செய்வித்து மகிழ்வீர்கள்.

**கன்னி**

ராசி நாயகன் புதன் ஆறில் உலவிடினும் யோகக்காரர்கள் சனி, சுக்ரன் ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. புதன் வக்ரம் பெறுவதால் குடும்பத்தில் மூத்தவர்களின் ஆலோசனைப்படி நடந்துக் கொண்டால் பிரச்சனைகள் எழாது.

**துலாம்**

ராசியை யோகக்காரகனாகிய சனி நோக்குகிறார். சுகக்குறைவு நீங்கும். குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும். மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்குவார்கள். பொருளாதார வளர்ச்சி காணலாம். சகாயஸ்தானத்தில் செவ்வாயும் குருவும் சஞ்சரிப்பதால் உற்சாகம் உள்ளத்தில் குடி கொள்ளும்.

**விருச்சிகம்**

2–ல் செவ்வாய், குரு, 3–ல் சூரியன் சனி, ஐந்தில் சுக்ரன் ஆகியோரது சஞ்சாரம் மிகவும் சிறப்பாக உள்ளது. தொட்ட காரியங்கள் யாவும் வெற்றியில் முடியும். மகத்தான காரியங்கள் சிலவற்றை செய்து முடிக்கப் போகிறீர்கள். மாற்றுக் கருத்துடையவர்கள் உங்களுக்கு நல்ல ஒத்துழைப்பைத் தருவார்கள்.

**தனுசு**

சொல்லை செயலாக்கிக் காட்டும் வல்லமை உண்டாகும். ஆரோக்கிய பாதிப்பு அகலும். பொருள் வரவு அதிகரிக்கும். மாத ஆரம்பத்தில் செவ்வாய் ராசியில் உலவிடுவதால் பிள்ளைகள் வழியில் சுபச்செலவுகளைச் சந்திக்க வேண்டி இருக்கும். பொருட்சேர்க்கையும் வரும்.

**மகரம்**

மாதத் தொடக்கத்தில் ராசிநாதன் யோகக்காரர்கள் சுக்ரன், புதன் ஆகியோரது சஞ்சாரம் சிறப்பாக உள்ளது. தந்தை வழியினரின் செல்வமும், சொத்தும் பெறக்கூடிய யோகம் உள்ளது. செவ்வாயும், குருவும் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் செலவினங்கள் சற்று கூடவே செய்யும்.

**கும்பம்**

லாபஸ்தானத்தில் உலவிடும் கூட்டு கிரக யோகத்தால் தொழிலில் முன்னேற்றம், நல்ல லாபம் கிடைக்கும். ராசியில் புதன் வக்ரம் பெறுவதால் ஆரோக்கியத்தில் அக்கறைக் காட்ட வேண்டி வரும். பாக்கியாதிபதி சுக்ரன் இரண்டில் வலுப்பெற்றிருப்பதால் நிலம், வீடு, வாகனம் போன்ற ஸ்திர ஆஸ்திகள் சேரும்.

**மீனம்**

தொழில் வீட்டில் குருவும், செவ்வாயும் உள்ளது சிறந்த ராஜ யோக அமைப்பு, புகழ் பெற்றவர்களின் பட்டியலில் இடம் பெறப் போகிறீர்கள். பணப்பெருக்கம் ஏற்படும். கடன்கள் முழுமையாகத் தீரும். உடல் நலம் சீராகும். குடும்பத்தில் சுப நிகழ்வுக்கான பேச்சு வார்த்தைகளில் முன்னேற்றம் காணலாம்.

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி

# ஸப்தகிரி

(சமய மாத இதழ்)

## சந்தாதாரர் விண்ணப்பப்படிவம்

1. பெயர் மற்றும் முகவரி : ________________
(பெரிய எழுத்துக்களில்) ________________
________________
________________
________________

மாவட்டம் & பின்கோடு எண் __________ ☐☐☐☐☐☐

அலைபேசி எண் ☐☐☐☐☐☐☐☐☐☐

2. தேவையான மொழி : ☐ தெலுங்கு ☐ தமிழ் ☐ கன்னடம் ☐ இந்தி ☐ ஆங்கிலம் ☐ சமஸ்க்ருதம்

3. வருட / ஆயுள் சந்தா : ☐ ரூ. 60/- ☐ ரூ. 500/-

4. சந்தா புதுப்பித்தல் :

(அ) சந்தா எண். :

(ஆ) மொழி :

5. செலுத்திய தொகை :

6. செலுத்திய வழி :

பணவிடை

(எம்.ஒ.கூபன் (எண்) : தேதி:

வங்கி கேட்பு வரைவோலை

(டி.டி. எண்.) : தேதி:

இடம் :

நாள்: *சந்தாதாரர் கையொப்பம்*

திருமலை திருப்பதி தேவஸ்தானம், திருப்பதி.

## தகவல் மையம்

## தி.தி.தே. கால்சென்டர்

**உங்களுக்காக**

**24 மணி நேரமும்**

திருமலை திருப்பதி தேவஸ்தானம் பக்தர்களின் வசதிக்காக திருப்பதியில் தகவல் மையம் ஆரம்பித்துள்ளது. பக்தர்கள் தங்களுக்கு வேண்டிய அனைத்து விவரங்களையும் அறிய இந்த மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

ஸ்ரீவாரி ஆர்ஜித சேவை டிக்கெட், தங்கு வசதி, நன்கொடை திட்டங்கள் குறித்து அறிய..... இங்ஙனே பல்வேறு சேவைகள் குறித்து.... தேவஸ்தானத்திற்குத் தொடர்புடைய அனைத்து விவரங்களையும் நீங்கள் உங்கள் ஊரிலிருந்தே தெரிந்து கொள்ளலாம்.

*இம்மையம் 24 மணி நேரமும் பணிபுரியும் எப்பொழுது வேண்டுமானாலும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.*

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்கள் :
**0877-**
**2233333**
**2277777**

- ஸப்தகிரி வருடச் சந்தா ரூ.60/- ஆயுள்சந்தா ரூ.500/-டி.டி.ஐ பிரதான ஆசிரியர், ஸப்தகிரி, தி.தி.தேவஸ்தானம். திருப்பதி எனும் பெயருக்கு எடுத்தல் வேண்டும்.
- ஸப்தகிரி சந்தாதாரராக சேர/சந்தா புதுப்பிக்க விரும்புவோர் இக்கூபனை பூர்த்தி செய்தோ அல்லது வெள்ளைத்தாளில் மேற்குறிப்பிட்ட விபரத்தை எழுதியோ அனுப்பலாம்.
- கீழே குறிப்பிட்டுள்ள முகவரியை மட்டுமே அணுகவும்.
- தி.தி.தேவஸ்தான ஆசிரியர் அலுவலகத்தைத் தவிர வேறு எங்கும் பணத்தை செலுத்தி ஏமாறாதீர்கள்.
- மணியார்டர் அனுப்புவோர் அதில் உங்கள் சந்தா விவரங்களை எழுதி கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்.
- சமஸ்க்ருதம் மொழி ஸப்தகிரி பத்திரிக்கைக்கு ஆயுள் சந்தா இல்லை. வருடச்சந்தா மட்டுமே உண்டு.

**எங்கள் முகவரி :**

பிரதான ஆசிரியர்,
ஸப்தகிரி அலுவலகம்,
தி.தி.தேவஸ்தான அச்சக வளாகம்,
கபிலதீர்த்தம் சாலை,
திருப்பதி – 517507.









# பக்தர்கள் சேவையில்...

## விசாகா சாரதா பீடாதிபதியுடன்...

டிசம்பர் 19, 2019 வியாழக்கிழமை அன்று திருவேங்கடமுடையான் தரிசனத்திற்காக திருமலைக்கு வருகை புரிந்த விசாகா சாரதா பீடாதிபதி ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஸ்வரூபானந்தேந்த்ர ஸ்வாமிகளை தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள், செயலாட்சித் தலைவர் திரு. அனில் குமார் சிங்ஹால், ஐ.ஏ.எஸ். அவர்கள், கூடுதல் செயலாட்சித் தலைவர் திரு. ஏ.வி. தர்மா ரெட்டி அவர்கள் மரியாதைபூர்வமாக சந்தித்தனர். அதுபோது பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் உரையாற்றும் போது சனாதன தர்ம பிரச்சாரத்தின் ஒரு பகுதியாக ஒவ்வொரு மாதமும் திருமலை அல்லது திருப்பதியில் பீடாதிபதிகளுடன் தார்மீக நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்வோம் என்றார்.

## அலிபிரியில் தங்கு வசதி...

டிசம்பர் 27, 2019 வெள்ளிக்கிழமை அன்று திருவேங்கடமுடையானை தரிசிக்க வரும் பக்தர்கள் திருப்பதியில் தங்குவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதன் ஒரு பகுதியாக தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் அலிபிரி அருகில் பொறியாளர்களுடன் சேர்ந்து இடத்தை பரிசீலித்தார்.

இது குறித்து ஊடகத்தாரிடம் பேசும்போது, பக்தர்களுக்கு அலிபிரியில் தங்கு வசதியை ஏற்பாடு செய்தால் திருமலையில் கூட்டம் அதிகமாக இருக்கும் சமயங்களில் நேரம் ஒதுக்கீடு அளித்து திருப்பதியிலேயே தங்கு வசதி ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பு உண்டு என்றார்.

மேலும், அலிபிரியில் நிர்மாணிக்க உள்ள தங்கு வசதிக்கூடத்தில் அன்னப் பிரசாதம், தார்மீக நிகழ்ச்சிகள், பஜனை, தியானம், பக்தி சங்கீர்த்தனை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்ய இருப்பதாக தெரிவித்தார்.





## நீர்நிலைகளை பார்வையிட்டபோது...

டிசம்பர் 27, 2019 வெள்ளிக்கிழமை அன்று நீர்தேக்கங்களை பார்வையிட்டு, திருமலையில் உள்ள நீர்தேக்கங்களில் உள்ள நீரானது இரண்டு வருடங்களுக்கு போதுமானதாக இருக்கும் என தி.தி.தே. பொறுப்பாண்மைக் குழுத்தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் கூறினார். மேலும் குமாரதார, பசுபுதார நீர்த்தேக்கங்களையும் அதிகாரிகளுடன் சேர்ந்து ஆய்வு நடத்தினார்.

மேலும் இதனை குறித்து ஊடகத்தாரிடம் பேசும் போது கடந்த 10 ஆண்டுகளில் முதன்முறையாக திருமலையில் உள்ள அணைகள் அனைத்தும் முழுக்கொள்ளளவை எட்டியுள்ளன என்றார். திருவேங்கட முடையானின் அருளால் இவ்வருடம் பரவலாக மழை பெய்தது என்றார். அதன் மூலம் திருமலையில் குமாரதார, பசுபுதார, ஆகாச கங்கை, பாபவிநாசனம், திருப்பதியில் கல்யாணி அணையிலும் முழு கொள்ளளவில் நீர் வரத்து உள்ளது என்றார். மேலும், மழைக்கான வாய்ப்பு மேலும் உள்ளதால் நீர் மட்டம் மேலும் அதிகரிக்கும் என்றார். இவற்றுடன் திருமலையில் நிரந்தரமாக நீரின் தேவையை தீர்க்க ரூ.400 கோடியில் பாலாஜி நீர்தேக்கத்தின் மூலமாக நீரை வினியோகிக்க தி.தி.தே. பொறுப்பாண்மைக்குழு தீர்மானத்தை கொண்டு வந்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

திருமலைக்கு வரும் பக்தர்கள் ஜலப்பிரசாதம் நீரை பயன்படுத்த மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாக தெரிவித்தார். வரும் பொங்கல் முதல் திருமலையில் பிளாஸ்டிக் பாட்டில்கள், பிளாஸ்டிக் பைகள் தடை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



## ஸ்வாமியின் ஓவியப்படத்தை வெளியிட்டபோது...

டிசம்பர் 28, 2019 சனிக்கிழமை அன்று வேங்கடாச்சல மஹாத்மியத்தில் உள்ள ஸ்ரீநிவாசனின் சரித்திரத்தை தெரிவிக்கும் வண்ணம் உருவாக்கப்பட்ட ஸ்வாமியின் ஓவியப்படத்தை தி.தி.தேவஸ்தான பொறுப்பாண்மைக்குழுத் தலைவர் திரு. ஒய்.வி. சுப்பாரெட்டி அவர்கள் திருமலையில் உள்ள அன்னமய்யா பவனில் வெளியிட்டார்.

*Edited and Published on behalf of T.T.Devasthanams by* ***Dr. K. Radha Ramana****, M.A., M.Phil., Phd., Chief Editor, T.T.D. and Printed at T.T.D. Press by* ***Sri. R.V. Vijayakumar****, B.A., B.Ed., Dy. E.O. (Publications & Press), T.T.D. Press, Tirupati - 517 507.*

திருமலை திருப்பதி தேவஸ்தானம்

# திருப்பதி ஸ்ரீகபிலேஸ்வர ஸ்வாமி வருடாந்திர பிரம்மோத்ஸவம்

## 14-02-2020 முதல் 23-02-2020 வரை







14-02-2020
வெள்ளிக்கிழமை
பகல் : துவஜாரோஹணம்
இரவு : ஹம்ஸ வாகனம்

19-02-2020
புதன் கிழமை
பகல் : வ்யாக்ர வாகனம்
இரவு : யானை வாகனம்

15-02-2020
சனிக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனம்
இரவு : சந்திரப்பிரபை வாகனம்

20-02-2020
வியாழக்கிழமை
பகல் : கல்பவிருக்ஷ வாகனம்
இரவு : குதிரை வாகனம்

16-02-2020
ஞாயிற்றுக்கிழமை
பகல் : பூத வாகனம்
இரவு : சிம்ம வாகனம்

21-02-2020
வெள்ளிக்கிழமை
பகல் : திருத்தேர்
இரவு : நந்தி வாகனம்
[மஹா சிவராத்திரி]

17-02-2020
திங்கட்கிழமை
பகல் : மகர வாகனம்
இரவு : சேஷ வாகனம்

22-02-2020
சனிக்கிழமை
பகல் : புருஷமிருக வாகனம்,
இரவு : கல்யாணோத்ஸவம்
திருச்சி உத்ஸவம்

18-02-2020
செவ்வாய்க்கிழமை
பகல் : திருச்சி உத்ஸவம்
இரவு : அதிகார நந்தி வாகனம்

23-02-2020
ஞாயிற்றுக்கிழமை
பகல் : சூரியப்பிரபை வாகனத்தில்
நடராஜஸ்வாமி, திரிசூல ஸ்நானம்
இரவு : துவஜாவரோஹணம்,
இராவணாசுர வாகனம்



SAPTHAGIRI (TAMIL) ILLUSTRATED MONTHLY Published by Tirumala Tirupati Devasthanams
printing on 25-01-2020. Regd. with the Registrar of Newspapers under "RNI" No.10742, Postal Regd.No.TRP/12 - 2018-2020
Licensed to post without prepayment No.PMGK/RNP/WPP-04/2018-2020

